கல்கி

குடும்பத்துடன் படிக்க...

KALKI
15.10.2006 ரூ.8.00
80 பக்கங்கள்



அரசியல் கலக்காத அயோத்தி யாத்திரை!

DIVINE HOME™

WOODEN POOJA CABINETS



உங்கள் இல்லங்களில் அருள் நிறை தவழ!

மலேசியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர மரங்களை கொண்டு DIVINE HOME பூஜை மாடங்கள் செய்யப்படுவதால் உங்கள் இல்லங்களுக்கு அழகையும், எழிலையும், ஆன்மீகத்தையும் ஒரு சேர அழைத்து வருகிறது DIVINE HOME. தரமும், நேர்த்தியும், கலை நயமும் மிக்க இந்த பூஜை மாடங்கள் உண்மையிலேயே உங்கள் வீட்டில் ஆன்மீகம் கமழ செய்யும் என்றால் அது மிகையாகாது. பல்வேறு வடிவங்களிலும், இரு வித வண்ணங்களிலும் கிடைக்கும் இந்த பூஜை மாடங்களுடன், தங்களுடைய விருப்பத்திற்கேற்பவும் வடிவமைத்து தருகிறது DIVINE HOME.

வாருங்கள் எங்கள் ஷோரூமுக்கு...

அழைத்து செல்லுங்கள் ஆன்மிகத்தை...



MARKETED BY

Vichandra Enterprises

New #14, Madha Church Road, Santhome, Chennai - 28.
E-mail: divinehome@touchtelindia.net | www.vichandra.com
Phone: 24611955 Telefax : 42069099

Dealers:

BANGALORE Floor Care System - ✆ 2536 7241, 984504209
CALICUT Gajalakshmi Enterprises - ✆ 2727057
MADURAI New Majestic Furniture - ✆ 2345634, 5373456

அடுத்த இதழ்

கல்கி



இன்பம் பொங்கும்

தீபாவளிச் சிறப்பிதழ்!

அழகான ஆரம்பம்...





வாரம் ஒரு பாசுரம்!

சுஜாதா எழுதும் பக்தி இலக்கியத் தொடர்



துள்ளித் திரிந்த காலம்!

– வாழ்வின் மறக்க முடியாத நாட்கள் பற்றி

பிரபலங்கள் பேசுகிறார்கள்...

வாரந்தோறும் புதுமைகள் தொடரும்..

பெட்ரோல் வாசமும்... செண்ட் வாசமும்.

விக்டர்



மிக அழகாகப் பேசக் கற்றுக் கொண்டுவிட்டார் ஸ்ரீகாந்த். "எனக்கும் ஸ்டான்லி சாருக்கும், 'ஏப்ரல் மாதத்தில்' ஏற்பட்ட நட்பு இப்போ 'கிழக்கு கடற்கரைச் சாலை' வரைக்கும் வந்து ரொம்ப கெட்டி ஆயிடுச்சு. அவரோட ஒவ்வொரு படத்திலேயும் கேரக்டராவே என்னை வாழ வைக்கறார். கி.க.சாலை கதையை அவர் எங்கிட்ட சொன்னப்போ ரொம்ப பளிச்சுனு இருந்துச்சு.

ஊரைவிட்டு சென்னைக்கு வந்து கிழக்கு கடற்கரைச் சாலையில் இருக்கிற ஒரு பிசியான பெட்ரோல் பங்க்ல பெட்ரோல் போடுற இளைஞனா நடிச்சிருக்கேன். பெட்ரோல் போட காஸ்ட்லி கார்ல வர்றவங்கதான் பாவனா. பெட்ரோல் வாசத்துக்கும் செண்ட் வாசத்துக்கும் டேலி ஆகுமாங்கிறதுதான் கதையே! இதில் த்ரில், திகில், எல்லாமே இருக்கு. நீங்க படம் பார்க்கும்போது மிரண்டு போவீங்க" என்று மூச்சு வாங்கப் பேசிய வரை அடக்கிவிட்டு பாவனா தொடர்ந்தார்...

"கோவளம் பீச்சிலிருந்து எட்டு கிலோ மீட்டர் தூரம் நடுக்கடலுக்குள்ள நான்கு நாள் படப்பிடிப்பு. நாலு நாளும் ஒரே வாந்தி மயக்கம். நான் கொஞ்சம்கூட எதிர்பார்க்கல... திடீர்னு ஒரு நாள் என்னோட இடுப்புல கயிற்றைக் கட் லைஃப் ஜாக்கெட்கூட கொடுக்கா கடலில் தூக்கிப் போட்டுட்டாங்க. பத் செகண்ட்தான் இருக்கும். கடகடன்



• ஸ்டேன்லி

தண்ணிக்குள்ளே போயிட்டேன். நல்ல வேளை மூச்சு முட்டுறதுக்குள்ள வெளியே இழுத்து போட்ல போட்டுட்டாங்க. அதை இப்போ நெனைச்சாலும் 'பகீர்'னு இருக்கு" என்றவர் யாரையோ பார்த்து மிரள, அட, டைரக்டர் ஸ்டேன்லி.

"இளைஞர்களின் ஜமா, குற்றங்களின் ஜங்ஷன், விபத்துக்களின் விளைநிலம், இப்படியெல்லாம் மக்கள் மனசுல ஆழமா பதிஞ்சிருக்கிற இ.சி.ஆர். சாலையை மையமா வெச்சுத்தான் கதை. ஒரு கமர்ஷியல் சினிமாவுக்குத் தேவையான எல்லா அம்சமும் இதுல இருக்கு" என்றார்.

"முதன் முதலா ஸ்ரீகாந்தை ஒரு பேட்டிக்காகத்தான் சந்திச்சேன். அதுவே நட்பாக மாற, பிறகு அவருடைய பி.ஆர்.ஓ.வாகப் பணியாற்ற ஆரம்பித்தேன். சினிமாவில் அடுத்த இலக்கா திரைப்படத் தயாரிப்பைப் பற்றித் தயக்கத்தோடுதான் ஸ்ரீகாந்திடம் சொன்னேன். அவர் நம்பிக்கை கொடுத்தார். படத்தையே முடிச்சுட்டோம். எல்லாம் கனவு மாதிரி இருக்கு.

சினிமா உலகத்துக்குள்ள போனபிறகுதான் அது எவ்வளவு பெரியக் கடல், இங்க ஒரு கூழாங்கல்லை நகர்த்தி வெக்கணும்னாக்கூட எவ்வளவு கஷ்டம்னு தெரிஞ்சுக்கிட்டேன்" என்று தமக்கே உரிய பக்குவத்தோட பேசுகிறார், தயாரிப்பாளர் அந்தணன்.

படங்கள் :
பொள்ளாச்சி சுந்தரம்



• அந்தணன்

கல்கி

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

உதவி ஆசிரியர் :
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்
ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 2225 1021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஸ்ரீநி

மதுரை ஸ்காட் சாலையிலுள்ள மத்திய மதுரை தி.மு.க சட்டமன்றத் தலைமை தேர்தல் அலுவலகம். நூறுக்கும் அதிகமான தொண்டர்கள் மு.க. அழகிரியைச் சந்திக்கப் படையெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பேட்டியென்றாலே ஒதுங்கி நழுவும் அழகிரி 'கல்கி' என்றதும் ஒப்புக்கொண்டார்.

மதுரை மத்திய தொகுதியில் போட்டியிட நிறைய பேர் மோதிய நிலையில் கௌஸ்பாஷாவை எப்படித் தேர்ந்தெடுத்தீர்கள்?

"தி.மு.க.வில் செயற்குழு இருக்கிறது. தலைவர், பொதுச் செயலாளர் இருக்கிறார்கள். தேர்ந்தெடுக்கும் உரிமை எனக்கில்லை. ஆனால் பரிந்துரை செய்யும் வாய்ப்பு இருக்கிறது. அந்த வகையில் எளிய தொண்டராகிய கௌஸ் பாஷாவைக் கழகம் வேட்பாளராகத் தேர்ந்தெடுத்திருக்கிறது. வார்டு தேர்தலில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைவரையும் டெபாஸிட் இழக்கச் செய்தவர் கௌஸ் பாஷா. நல்ல உழைப்பாளி."

இந்த இடைத்தேர்தலில் தி.மு.க. சந்திக்கும் சவால்கள் என்ன?

"ஆட்சிப் பொறுப்பேற்ற குறுகிய கால கட்டத்தில் 75 சதவிகித தேர்தல் வாக்குறுதிகளை கலைஞர் நிறைவேற்றியிருக்கிறார். இந்த

"விஜயகாந்த் எங்களுக்குப்



இடைத்தேர்தலில் மட்டுமல்ல; தமிழகமெங்கும் உள்ளாட்சித் தேர்தலிலும் தி.மு.க. கூட்டணி வெற்றி வாகை சூடும்."

நீங்கள் பணம் மற்றும் அதிகார பலத்தைக் காட்டுவதாக அ.தி.மு.க. சொல்கிறதே...

"நாங்கள் கடுமையாக உழைக்கிறோம். ஆனால் அ.தி.மு.க.வினர் பணத்தை மட்டுமே நம்பிக் களத்தில் இருக்கின்றனர்."

இந்த இடைத்தேர்தல் உங்களுக்கும் விஜயகாந்துக்கும் நடைபெறும் நேரடி மோதல் என்றுகூடச் சொல்லப்படுகிறதே...?

"விஜயகாந்த் தலைமையிலுள்ள தே.மு.தி.க. அரசியல் கட்சியும் போட்டியிடுகிறது; அவ்வளவுதான். விஜயகாந்தை நாங்கள் ஒரு போட்டியாகவே கருதவில்லை."

மதுரை மற்றும் தென் பகுதிகளில் தி.மு.க.வின் முக்கிய சக்தியாக விளங்கும் நீங்கள், எம்.எல்.ஏ., எம்.பி. என்று முன்னணி அரசியலுக்கு வராதது ஏன்?

"பதவியெதுவும் இல்லாமலேயே பல நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறேன். இது எதிர்காலத்தில் தொடரும். என்னை நம்பி வருபவர்களுக்கு என்னாலான உதவிகளைச் செய்துகொண்டு கட்சிக்காக இறுதிவரை உழைப்பதே என் லட்சியம்."



போட்டியல்ல!"

தி.மு.க.வில் பல அதிகார மையங்கள் இருப்பதாக ஜெயலலிதா சொல்கிறாரே...?

"அவர் இவ்வாறு குற்றம் சாட்ட எந்தத் தகுதியும் இல்லாதவர். தி.மு.க. ஒரு ஜனநாயக இயக்கம். முதல்வர் கலைஞர், அமைச்சர்களுக்கு முழுச் சுதந்திரம் கொடுத்திருக்கிறார். நல்ல காரியங்களைச் செய்வதற்கு அமைச்சர்களும் ஒத்துழைக்கிறார்கள்."

• கவுஸ் பாஷா



உங்கள் அப்பாவைப் போல பேச்சு, எழுத்து என்று பிரகாசிக்க முடியவில்லையே என்ற வருத்தம் உண்டா?

"அவரைப் போல என்ற பேச்சுக்கே இடமில்லை. அவருக்கு இணை அவர்தான். இதுபோன்ற சிந்தனை எனக்கு இள வயதிலிருந்தே தோன்றவில்லை."

படங்கள்: **ராஜன்**

எஸ்.சி.எம்.

தற்கொலைத்

கல்வியில் மட்டுமல்ல, தற்கொலையிலும் இந்தியாவிலேயே முதல் இடம் வகிக்கும் மாநிலம் கேரளாதான். தமிழ்நாட்டின் நிலைமை என்ன? தேசிய அளவிலான சராசரியைவிட அதிக எண்ணிக்கையில்தான் தற்கொலைகள் நிகழ்கின்றன. தமிழ்நாட்டில் தற்கொலை அதிகம் நடப்பது சென்னை நகரத்தில்தான். அடுத்தது வேலூர்.

மெட்ராஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெவலப்மெண்ட் ஸ்டடீஸ் ஆராய்ச்சி அமைப்பின் சமூகவியல் துறை பேராசிரியர் டாக்டர் ராதாகிருஷ்ணனைச் சந்தித்தோம். அவர் இந்தப் பிரச்னை குறித்து விரிவாகப் பேசினார். அதன் முக்கிய பகுதிகள்:



"இந்தத் தற்கொலை குறித்த புள்ளி விவரங்கள், மாநிலங்களின் காவல்துறையினரிடமிருந்து வரும் புள்ளி விவரங்களைத் தொகுத்து தேசிய கிரைம் ரெகார்ட் பீரோவால் தரப்படுபவை. இவற்றைத் துல்லியமானவை என்று எடுத்துக்கொள்ள முடியாது. ஆனாலும், வேறு வழிகளில் விவரம் திரட்ட முடியாத நிலையில், இதைத்தான் ஆதாரபூர்வமானதாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஏறத்தாழ நூறு சதம் கல்வி அறிவு கொண்ட கேரளாவில் தற்கொலைகள் அதிகமாக நிகழ்கின்றன. ஜப்பானிலும் இந்த நிலைமைதான். அங்கே உலகில் மிக அதிகமான தற்கொலைகள் நிகழ்கின்றன. அதற்குக் காரணம் கல்வியிலும், பொருளாதாரத்திலும் முன்னேறி இருப்பதே.

கேரளாவில் இயங்கி வரும் மைத்ரி என்ற அமைப்புடன் இணைந்து செயல்பட்டு வரும் ஜார்ஜ் என்னும் சமூக விஞ்ஞானி, இது குறித்து ஓர் ஆராய்ச்சியினை மேற்கொண்டார். அதன் முடிவில் அவர் பட்டியலிடும் காரணங்கள்:

1) கூட்டுக் குடும்ப முறை இல்லாமல் போனதுடன், குடும்ப உறவுகளும் பலவீனம் அடைந்துவிட்டன.

2) ஏட்டுக் கல்விமுறை ஒரு மனிதரைச் சொந்தக் காலில் நிற்கத் தயார்ப்படுத்துவதில்லை. எனவே,வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

3) அரபு நாடுகளுக்குச் சென்று, சம்பாதித்துத் திரும்பும் தரப்பினரது வாழ்க்கை நிலை மட்டும் மிகவும் உயர்கிறது. இது, அந்த வாய்ப்பு கிடைக்காதவர்களிடையே நம்பிக்கையின்மையையும், ஏமாற்றத்தையும் ஏற்படுத்துகிறது.

4) பொதுவாக, கேரளாவில் விவசாயத்திலும் மற்ற பொருட்களிலும் உற்பத்தி என்பது மிக மிகக் குறைவு. மாறாக, மக்களிடையே வாங்கும் சக்தி அதிகரிப்பதால் விலைவாசி மட்டும் அதிகரித்துக்கொண்டே போகிறது.

5) பெண்களின் கல்வி அறிவு அதிகரித்து வருவதன் காரணமாக, அவர்கள் அதிக அளவில் வேலைக்குச் செல்வது, ஆண்களின் வேலை

தலைநகரமாகும் சென்னை...!

- அதிர்ச்சி ரிப்போர்ட்

வாய்ப்புகளைப் பெருமளவில் பாதித்துள்ளது.

6) இந்தியாவிலேயே கேரளாவில்தான் அதிகமாக மது அருந்தும் பழக்கம் இருக்கிறது.

7) போதிய வருமானம் இல்லாது போனாலும்கூட, மற்றவர்களைப் போல வசதியாக வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் சக்திக்கு மீறிக் கடன் வாங்கி, கடன் தொல்லையிலிருந்து மீள முடியாமல் தற்கொலை செய்து கொள்கின்றனர்.


மொத்தத்தில், கேரளாவில் மாறி மாறி ஆட்சி செய்த அரசாங்கங்கள், கல்வி அறிவு பெற்ற சமூகத்தைச் சேர்ந்த மனிதர்கள் அனைவருடைய வாழ்க்கைக்கும் உத்தரவாதம் வழங்கவில்லை.''

தமிழ்நாட்டில் சென்னை தற்கொலைத் தலைநகரமாக விளங்குவது எதனால்?

''சென்னையின் மக்கள் தொகை அதிகம் என்பதால், தற்கொலை எண்ணிக்கையும் அதிகமாக இருக்கிறது. பொதுவாகவே பிறப்பு, இறப்பு போல மக்கள் தொகையில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் தற்கொலையும் இருக்கும். இது ஆண்டுதோறும் அதிகரிக்கிறதா என்று பார்க்க வேண்டும். அப்படி அதிகரிக்கும் பட்சத்தில் அதற்கான காரணம் என்னவென்று ஆராயப்பட வேண்டும். தமிழ்நாட்டில் தற்கொலை சதவிகிதம் என்பது ஒரே அளவில்தான் இருந்து வருகிறது. இதற்கு, கேரளாவுக்கான காரணங்களையே கூறலாம்.''

சமீபகாலமாக, குறிப்பிட்ட சில மாநிலங்களில், விவசாயிகள் தற்கொலை செய்துகொள்வது அதிகரித்து வருகிறதே...?

''ஆந்திரா, மஹாராஷ்டிரா போன்ற ஒரு சில மாநிலங்களில் விவசாயிகள் அதிகமாகத் தற்கொலை செய்து கொள்கிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் மிகச் சிறிய நிலத்தில் பருத்தியைப் பயிரிடுவதால், செலவுக்கு ஏற்ப விளைச்சலும், வருமானமும் கிடைப்பதில்லை. உரம் மற்றும் பூச்சிக் கொல்லிகளின் விலை அதிகரித்துக்கொண்டே போகிறது. குறைந்த வட்டிக்கு, குறித்த காலத்தில் கடனுதவி கிடைக்காததால், விவசாயிகள் அதிக வட்டிக்கு, தனியாரிடமிருந்து கடன் வாங்கி விவசாயம் செய்ய வேண்டிய நிர்பந்தம். முன்பெல்லாம், விவசாயிகள் தங்கள் விளைச்சலிலிருந்தே, விதைத் தானியம் எடுத்து வைத்துக்கொண்டு பயன்படுத்துவார்கள். ஆனால், இப்போது ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும்



படியான இறக்குமதி விதைகள் வந்துவிட்டன. அதனுடன் பிரச்னைகளும் இறக்குமதியாகி விட்டன. ஒருவிதத்தில் தாராளமயமாக்கல் நம் விவசாயிகளின் உயிருக்கு உலை வைத்துக் கொண்டிருக்கிறது.''

படம்: **பொள்ளாச்சி சுந்தரம்**


ஒரே பட்டு
இங்கே இவர் அணிந்துள்ளவை:
ரெட் & க்ரீன் ம்யூரல்-ப்ளோரல்,
ப்ளூ & க்ரீன் ட்ரைபல்
ரிவர்ஸிபிள் பட்டுப்புடவை.

புடவையில் இரண்டு புடவைகள்

வழங்குகிறோம் புதிய

ரிவர்ஸிபிள் பட்டுப்புடவை கலெக்ஷன்

இந்தப் பட்டுப்புடவையின் மறுபக்கம் என்ன இருக்கு... அட... இன்னொரு பட்டுப் புடவை!! ஆரெம்கேவியின் புத்தம்புது ரிவர்ஸிபிள் பட்டுப்புடவையோடு தீபாவளியைக் கொண்டாடுங்கள்! இதற்காகவே உருவாக்கப்பட்ட தறிகளில், ஆரெம்கேவியின் கைதேர்ந்த நெசவாளர்களால் நெய்யப்பட்ட ஒவ்வொரு புடவையும் பிரமிப்பூட்டும்! இந்த தீபாவளிக்கு ஆரெம்கேவியில் உங்கள் ரிவர்ஸிபிள் பட்டுப் புடவையைத் தேர்ந்தெடுங்கள். அழகாக ஜொலித்திடுங்கள்.






• டி.கே.பட்டம்மாள்

என் பாடலில் என்ன குற்றம் சொல்லு பாட்டி?

• கொள்ளுப்பேத்தி


CUSTOMER CARE
(44) 4222 0077
The timeless
COLLECTION
.12, Nageswaran Road,
op. Panagal Park),
Nagar, Chennai 600017
l : +91 44 24343644 / 3727 / 3757
w.kumaransilks.com
Kumaran Silks
since 1955

நீரிழிவு நிதர்சனங்கள்

'டையாபடீஸ் (நீரிழிவு நோய்) உலகத்தின் தலைநகர்' என்று இந்தியாவை வர்ணிக்கிறது உலக சுகாதார நிறுவனம். காரணம் உலகில் டையாபடீஸ் இருக்கிற ஏழு பேரை எடுத்துக்கொண்டால் அதில் ஒருவர் இந்தியர். சென்னை அண்ணாநகரில் இருக்கும் அப்பல்லோ மருத்துவமனையின் தலைமை மருத்துவரும் நீரிழிவு நோய் சிறப்பு நிபுணருமான டாக்டர் வி. பாலாஜியிடம் டையாபடீஸ் குறித்த நமது சந்தேகங்களை முன் வைத்தோம்.

டையாபடீஸ் உள்ளவர்கள் வேறு என்னென்ன பாதிப்புகளுக்கு ஆளாகிறார்கள்?


"டையாபடீஸ் நீண்ட கால பாதிப்புகளை ஏற்படுத்துகிற சிக்கலான நோயாகும். இந்த நோய் குறிப்பாக இதயம், கண்கள், சிறுநீரகங்கள் போன்ற உறுப்புகளையும், நரம்புகளையும், இரத்த நாளங்களையும் கொஞ்சம் கொஞ்சமாகப் பாதிப்படையச் செய்கிறது.

இதயத்திலிருந்து இரத்தத்தை எடுத்துச் செல்கிற இரத்த நாளங்களின் உட்புறத்தில் கொழுப்புச் சத்துப் படிவதால், அவற்றின் பாதை குறுகிவிடும். இதனால் சீரான இரத்த ஓட்டம் தடைப்பட்டு விடுகிறது. இதனால் காலில் திடீரென்று வலி, தசைப்பிடிப்பு போன்றவை ஏற்படும். சில நேரங்களில் (Gangrene) 'காங்கிரீன்' சேர்ந்து விடுவதும் உண்டு. காலில் குறிப்பிட்ட ஒரு பகுதிக்குச் செல்கிற இரத்த ஓட்டம் தடைபட்டுப் போகும். அதனால் அப்பகுதி கருமையாகக் காணப்படும். அப்பகுதியை அழுகிப்போன பகுதி என்று கூடச் சொல்லலாம். அப்பகுதியை அப்புறப்படுத்தி விடுவதே சிறந்தது.

அடுத்து டையாபடீஸ், பக்கவாதத்தையும் ஏற்படுத்தும். மூளைக்கு இரத்தத்தை எடுத்துச் செல்கிற இரத்த நாளங்களின் பாதை குறுகிவிடுவதால், அப்பாதையில் அடைப்பு ஏற்படுகிறது.

அதேமாதிரி இதயத்துக்கே இரத்தத்தை விநியோகம் செய்கிற சிறு இரத்த நாளங்களில் அடைப்பு ஏற்படும்போது தீவிரமான மாரடைப்பு ஏற்படும். இரத்த ஓட்டமே முழுமையாகத் தடைபட்டுப் போனால், இதயம் செயலிழந்துவிடும். அப்போது Cardiac Arrest ஏற்படுகிறது.

சீராகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிற இதயம், நாளடைவில் பலவீனம் அடைந்து விடுவதுண்டு.




இதை 'கார்டியோ மயோபதி' என்று குறிப்பிடுவர். இதனால் இதயத்தின் செயல்திறன் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டே வந்து, இறுதியில் முழுமையாகச் செயலிழந்து விடும்.

டையாபடீஸ் உள்ளவர்களுக்கு கண்புரை பாதிப்பு மற்றவர்களைவிட, விரைவாக வந்துவிடும். அதே நரம்புகள் எளிதில் பாதிப்படையும். இதை 'டயாபடீக் நியூரோபதி' என்று குறிப்பிடுவார்கள்.

இவற்றைத் தவிர டையாபடீஸ் உள்ளவர்களுக்கு 'கார்பங்கிள்' என்று சொல்லப்படும் கட்டி, முதுகின் நடுவில் ஏற்படுவதுண்டு. முன்பு இது குணப்படுத்த இருந்தது. ஆனால் இப்போது இதற்கான சிகிச்சை முறைகள் வந்துவிட்டன.

டையாபடீஸ் சிறுநீரகங்களையும் விரைவாகப் பாதிக்கும் தன்மை கொண்டது. இந்த நோயுள்ளவர்களின் சிறுநீரகங்கள், மற்றவர்களின் சிறுநீரகங்கள் செயல்படுவதைவிட, அதிக அளவுக்குச் செயல்பட வேண்டியிருப்பதால், அவர்களின் சிறுநீரகங்கள் எளிதில் பாதிப்படைகின்றன."



* டாக்டர் வி. பாலாஜி



இந்நோய் உள்ளவர்கள் பாகற்காயைச் சாப்பிடுவது நல்லது என்று சொல்லப்படுகிறதே?

"டையாபடீஸால் பாதிக்கப்பட்டவர்கள் பாகற்காயை அதிகமாகச் சாப்பிட்டால், சர்க்கரையின் அளவு குறைந்துவிடும் என்று நினைப்பதுண்டு. இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு சாப்பாட்டுக்குப் பிறகு 200 mgக்கும் சற்றுக் குறைவாக இருந்து, உணவுப் பழக்கத்திலும் கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்து, உடற்பயிற்சியையும் செய்துவரும் டையாபடீஸ்காரர்களுக்கு எந்தவிதமான மாத்திரைகளும் தேவையில்லை. இப்படிப்பட்டவர்கள்தான் தாங்கள் பாகற்காய், வெந்தயம் போன்றவற்றைச் சாப்பிட்டதால் சர்க்கரையின் அளவு கட்டுப்பாட்டில் இருக்கிறது என்று கூறுபவர்கள்."

டையாபடீஸை முற்றிலுமாக ஒழிக்க ஆராய்ச்சிகள் எதுவும் நடைபெறுகின்றனவா?

"டையாபடீஸை முற்றிலுமாக அழிக்கவும், தடுக்கவும் தடுப்பூசி முறையும், ஆராய்ச்சியும் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் இன்சுலினைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளவும், அதைக் கண்டறிந்து நாமே இன்சுலினை நமக்குள் செலுத்திக் கொள்ளவும் நவீன புதிய கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இரத்தப் பரிசோதனையில்கூட நிறைய மாற்றங்கள் வந்துவிட்டன. முன்பு போல் இரத்தத்தைக் குத்தி எடுக்காமல் குளுக்கோ வாட்சை கையில் கட்டிக் கொண்டால், மணிக்கட்டிலுள்ள வியர்வை துவாரங்களின் மூலமாக பத்து நிமிடங்களுக்கு ஒரு முறை இரத்தத்தில் சர்க்கரையின் அளவையும் ஏற்ற இறக்கங்களையும் தெரிந்துகொள்ளலாம். மேலும் Continuous Glucose Monitoring system என்கிற சிறிய மானிட்டரிலிருந்து வரும் குழாயை, நம் உடலில் பொருத்திக் கொண்டால், பத்து நிமிடங்களில் வரைபடத்தில் தோன்றும் இன்சுலின் ஏற்ற இறக்கங்களைத் தெள்ளத் தெளிவாக அறிந்து, இரத்தத்தில் சர்க்கரை அளவை அறியலாம்.

சர்க்கரை அளவை அறிந்துகொள்ள தற்போது அலெலாக்ஸ் என்கிற நவீன 'Pen type' முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உணவு உண்பதற்கு ஓரிரு நிமிடங்களுக்கு முன்னாலும் பின்னாலும்கூட இதை நம் உடலில் செலுத்திக்கொள்ளலாம். சமீப கால ஆராய்ச்சியில் ஸ்ப்ரே டைப் எனக் கூறப்படும் Aerosal type Insuline அறிமுகமாகி இருக்கிறது. இது அமெரிக்காவில் தரச்சான்றிதழ் பெற்றுள்ளது.

அடுத்து, கேப்ஸ்யூல் வடிவ 'Oral Insuline' முறையும், கணையத்திலுள்ள இன்சுலினுக்குப் பாதிப்பு ஏற்படாமல் இருக்க 'வேக்ஸின்' முறையும் ஆராய்ச்சியில் உள்ளன.

படம் :
பொள்ளாச்சி சுந்தரம்







2006 அக்டோபர் 15
விய புரட்டாசி 29
மலர் : 65
இதழ் : 11

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.


கொசுவை விரட்ட மாநாடு!


டெங்கு ஜுரம் தலைநகரைத் தாக்கிப் பலரை வீழ்த்தியிருக்கும் நிலையில் மத்திய சுகாதார அமைச்சர் அன்புமணி, மாநில சுகாதார அமைச்சர்களின் மாநாட்டினைக் கூட்டுகிறார் -டெங்கு தாக்கியுள்ள மாநிலங்களைச் சேர்ந்த இவ்வமைச்சர்களைச் சந்தித்து, நிலைமையைச் சமாளிப்பது எப்படி என்று விவாதிப்பதற்கு! இதேபோல் இன்னொரு மாநாடு தனியாக நடைபெறுகிறது - சிக்குன் குன்யா தாக்குதலுக்குள்ளான மாநில சுகாதார அமைச்சர்களுக்காக!

'கொசுவை விரட்டுவதற்கு சுகாதார அமைச்சர்கள் மாநாடு போட வேண்டுமா?' என்று நாம் கேட்டுவிடக் கூடாது! கொசுத் தொல்லையற்ற குளுகுளு சூழலில் மாநில அமைச்சர்களும் அன்புமணியும் விவாதித்து, சாவகாசமாக முடிவுக்கு வந்து, நடவடிக்கையும் எடுப்பதற்குள் இன்னும் எத்தனை பேர் டெங்குவுக்குப் பலியாவார்களோ? எத்தனையெத்தனை பேர் சிக்குன் குன்யாவால் முடக்கப்படுவார்களோ? என்று கேட்பதோ அபசாரமாகிவிடும்!

கொசுவால் உருவாகும் நோய்கள் இவை என்பது உறுதியாகத் தெரிந்த நிலையில் அவற்றை ஒழிக்க எடுக்கப்பட வேண்டிய நேரடி நடவடிக்கை, கொசுக்களை அடியோடு ஒழிப்பதுதான். இது அமைச்சர்களுக்குத் தெரியாததல்ல.

தேங்கிய தண்ணீர்தான் கொசுக்களின் ஜீவனுள்ள பிறப்பிடமாகிறது. நகரமோ, கிராமமோ, எந்தப் பகுதியாயிருந்தாலும் தண்ணீர் அசுத்தமாகத் தேங்க அனுமதிப்பதே கொசுக்கள் முட்டையிட்டுப் பெருக உதவுகிறது. இத்தகைய நீர்நிலைகளைச்





சுத்தம் செய்ய மத்திய - மாநில அரசுகள் என்னதான் செய்து வருகின்றன?

இரசாயனப் பூச்சிக்கொல்லிப் புகையைச் செலுத்திக் கொசுக்களை விரட்டுவதும் குடியிருப்புகளிலும் வீடுகளிலும் தண்ணீர்த் தொட்டிகளைச் சுத்தமாகவும் மூடியும் வைக்கும்படி ஆணையிடுவதும் ஓரளவுக்குத்தான் கொசுக்களைக் கட்டுப்படுத்தும். பொதுவிடங்களில் உள்ள பரவலான நீர் நிலைகள், சென்னையிலுள்ள கூவம், பக்கிங்ஹாம் கால்வாய் போன்ற கழிவு நீரோடைகளை யார் சுத்திகரிப்பார்கள்? ஆண்டாண்டு காலமாக இவை சாக்கடை நீர் ஓடைகளாகவே இருந்து வருகின்றன. அதிலும் சென்னையில் எம்.ஆர்.டி.எஸ். ரயில் திட்டத்தை நிறுவிய பிறகு, பக்கிங்ஹாம் கால்வாயில் தூண்கள் நாட்டப்பட்ட நிலையில், தண்ணீர் ஓடாமல் தேங்குவது அதிகமாகியுள்ளது. அடையாறு முகத்துவாரம் மணல் மேடிட்டிருப்பதால் ஆற்றுநீர் தேங்கி நிற்கிறது. இதனாலெல்லாம் கொசுத் தொல்லையும் மிக அதிகமாகியுள்ளது. இரசாயனக் கொசு விரட்டிகள் மிக அதிகமாகப் புழக்கத்தில் வர வர, கொசுக்கள் அவற்றால் பாதிக்கப்படாத அளவுக்கு எதிர்ப்புச் சக்தியை மெள்ளமெள்ள பெற்று வருகின்றன. தனிப்பட்ட முறையில் மக்கள் தங்களைக் கொசுக்களிடமிருந்து காத்துக் கொள்வது இயலாத காரியமாகிவிட்டது.

உள்ளாட்சி அமைப்புகள் சுகாதாரக் கண்ணோட்டத்துடன் சிறப்பாக இயங்கினால் கொசுத் தொல்லையை எதிர்கொள்வது சாத்தியமாகும். ஆனால், இன்று உள்ளாட்சி அமைப்புகளும் அரசியல்மயமாகி சிக்குன் குன்யாவும் அரசியலாகிவிட்டது.

எல்லாவற்றுக்கும் மேலாக, அடையாறு, கூவம், பக்கிங்ஹாம் கால்வாய்க் சுத்திகரிப்பு போன்ற பணிகளுக்கு நிறைய நிதி தேவைப்படும். அந்த அளவுக்குக் கோடிகளைச் செலவழிக்க அரசு தயாராயிருக்கிறதா? கஜானாவில் உள்ள பணம் இலவசங்களுக்கும் இரண்டு ரூபாய் அரிசிக்குமே போதாது!

சிங்கப்பூருடன் தொழிற்பேட்டை ஒப்பந்தம், மோட்டார் கார், செல்போன் தொழிற்சாலைகளில் அந்நிய முதலீடு, பி.பி.ஓ.க்களின் வளர்ச்சி, ஐ.டி. தொழிலின் மேம்பாடு... இத்தனை அலங்காரங்கள் இருந்தென்ன...? சுகாதாரமின்மை என்ற கந்தலாடையை அல்லவா மக்கள் அணிந்து வலம் வருகிறார்கள்! ●

உயர்ந்தவர்களையும், உயர்ந்தவற்றையும் பாராட்டுகிறவனே மனிதன்

தேச பக்தர்கள் வரிசை

1.	காந்தி காட்டும் பாதை	கே.எஸ். ஜம்புநாதன்	ரூ.16.00
2.	கவியரசி சரோஜினிதேவி	வி.என். ரங்கசாமி	ரூ.45.00
3.	பண்டித மதன்மோகன் மாளவியா (எம். பக்தவத்சலம் முன்னுரையுடன்)	எம்.எஸ். சுப்ரமணியன்	ரூ.24.00
4.	அரசியல் ஞானி அரங்கசாமி ஐயங்கார் (ராஜாஜி, மைசூர் திவான் இஸ்மெயில் முன்னுரையுடன்)	ஆர். கிருஷ்ணமாச்சாரியார்	ரூ.150.00
5.	காங்கிரஸ் 50 ஆண்டு சரித்திரம் (1885 – 1935)	எம்.எஸ். சுப்ரமணியம்	ரூ.80.00
6.	கவி. ரவீந்திரநாத் தாகூர் (டி.கே. சிதம்பரநாத முதலியார் முன்னுரையுடன்)	க.நா. சுப்ரமணியம்	ரூ.30.00
7.	லோகமான்ய பாலகங்காதர திலகர் (சென்னை விளம்பர மந்திரி எஸ். ராமநாதன் முன்னுரையுடன்)	என்.ஆர்.கேசரி ராவ்	ரூ.36.00
8.	மஹாதேவ கோவிந்த ரானடே	எஸ்.ஆர். வேங்கடராமன்	ரூ.21.00
9.	புதுமைக் கவி பாரதியார்	தி.ஜ.ர.	ரூ.25.00
10.	தியாக மூர்த்தி பண்டித மோதிலால் நேரு	வெ. சாமிநாத சர்மா	ரூ.28.00
11.	வீரகேசரி விட்டல்பாய் படேல்	ஆர். கிருஷ்ணமாச்சாரியார்	ரூ.52.00
12.	அமர ஜோதி (காந்திஜி) (முன்னாள் முதலமைச்சர் ஓ.பி. ராமசாமி ரெட்டியார் முன்னுரையுடன்)	த.நா. சேனாபதி	ரூ.22.00
13.	அன்னை கஸ்தூரி	எம்.எஸ். சுப்ரமணியம்	ரூ.28.00
14.	மௌலானா அபுல் கலாம் ஆசாத்	வி.என். ரங்கசாமி	ரூ.33.00
15.	ஆசிய ஜோதி ஜவாஹர் (தி.க. அவினாசிலிங்கம் முன்னுரையுடன்)	தி.ஜ.ர.	ரூ.85.00
16.	தீனபந்து ஆண்ட்ரூஸ்	தி.ஜ.ர.	ரூ.22.00
17.	சத்தியமூர்த்தியின் தீரச் செயல்கள்	பி.எல். ராஜேந்திரன்	ரூ.32.00
18.	புது வழி	சுபாஷ் சந்த்ர போஸ் (தமிழில் த.நா. குமாரசாமி)	ரூ.37.00
19.	இளைஞன் கனவு	சுபாஷ் சந்த்ர போஸ் (தமிழில் த.நா. குமாரசாமி)	ரூ.50.00
20.	எரிமலை	வீர சாவர்க்கர் (தமிழில் ஜெயமணி சுப்ரமணியம்)	ரூ.250.00
21.	மஹான் மணி ஐயர் (காங்கிரஸ் இயக்கத்தைத் தோற்றுவித்தவர்களில் ஒருவர்)	சுந்தரராகவன்	ரூ.32.00
22.	தேசபந்து சித்தரஞ்சன் தாஸ்	எம்.எஸ். சுப்ரமணியம்	ரூ.35.00
23.	சுப்ரமண்ய சிவம்	ஸ்ரீநிவாஸவரதன்	ரூ.25.00
24.	ராஜாராம் மோகன்ராய்	டி.கே. கோபால ஐயர்	ரூ.35.00
25.	மகாகவி பாரதி வரலாற்று நாடகம்	சிலோன் விஜயேந்திரன்	ரூ.25.00
26.	ராவ்பகதூர் பி. அனந்தாசார்லு (காங்கிரஸ் இயக்கத்தைத் தோற்றுவித்தவர்களுள் ஒருவர்)	சுந்தரராகவன்	ரூ.40.00
27.	சுதந்திரச் சிற்பிகள்	பி.ஸ்ரீ.	ரூ.30.00
28.	தமிழ்நாடும் காங்கிரஸும்	பி.ஸ்ரீ.	ரூ.70.00
29.	வீரவிளக்கு வ.வே.சு. ஐயர்	யோகி சுத்தானந்த பாரதியார்	ரூ.75.00
30.	சுபாஷ் சந்திர போஸ்	வி.எஸ். நாராயணன்	ரூ.65.00
31.	ஹரிபுரா காங்கிரஸ் வைபவம்	டி.எஸ். சொக்கலிங்கம்	ரூ.45.00
32.	'ஹிண்டு' கஸ்தூரிரங்க ஐயங்கார்	சுந்தரராகவன்	ரூ.85.00
33.	வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகம்	'பாரதமணி' பி.என்.ஸ்ரீனிவாசன்	ரூ.70.00
34.	சென்னையில் உப்பு சத்தியாகிரகம்	பி.என். ஸ்ரீனிவாசன், எஸ். ஹரிஹர சுப்ரமணியன்	ரூ.40.00
35.	மதுரை காந்தி என்.எம்.ஆர். சுப்பராமன்	கானமஞ்சரி சம்பத்குமார்	ரூ.45.00
36.	ஆனந்தமடம்	பங்கிம் சந்த்ர சட்டர்ஜி – தமிழில் த.நா.குமாரசாமி	ரூ.50.00
37.	தேசபக்தன் கந்தன்	கா.சி. வேங்கடரமணி	ரூ.50.00
38.	பாரத நாட்டுப் பெண்மணிகளின் வீரமும் தியாகமும்	ம. ராதாகிருஷ்ண பிள்ளை	ரூ.25.00
39.	நமது தேசியக் கொடி	வெ. சாமிநாத சர்மா	ரூ.20.00
40.	நேதாஜியின் வீரப்போர் (1 & 2)	ஜெயமணி சுப்ரமணியம்	ரூ.144.00

விடுதலைப் போரில் வியப்பூட்டும் நிகழ்ச்சிகள்

பாகம் – 1	பாகம் – 2	பாகம் – 3
(1600 – 1885)	(1885 – 1922)	(1923 – 1947)
ரூ.75.00	ரூ.66.00	ரூ.69.00

அல்லயன்ஸ்
(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
64, (ப. எண் : 244) ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபால் பெட்டி எண்: 617, மயிலாப்பூர்,
சென்னை – 600 004. தொலைபேசி: 2464 1314
e-mail : srinivasan@alliancebook.com
visit us at : www.alliancebook.com

ஆயிரம் பேய்கள் கழுத்தை நெறிப்பதுபோல் இருந்தது கடலின் அழுத்தம்;

அவன் நீச்சலடிப்பதில் வல்லவனாக இருந்தாலும், விமானம் வெடித்த அதிர்ச்சி அவனுடைய உடல் அணுக்களிலும் பரவியிருந்தது. மூச்சைப் பிடித்துக் கொண்டு, மேலே தலைதூக்கிப் பார்த்தபோது சற்று தூரத்தில் ஒரு கரை தென்பட்டது. இரண்டு மணி நேரமாக அவன் நீந்திக் கொண்டிருந்தது வீண்போகவில்லை. கடலைக் கிழித்து முன்னேறினான். கரையை நெருங்கிவிட்டான்.

கரையை நெருங்கிக் கொண்டிருந்த நரேந்திரன், அவன் சொந்த நாட்டில் மகா தலைவன்.

அந்த நாட்டின் வரலாற்றில் மிகக் குறுகிய காலத்தில் ஓர் அரசியல் இயக்கத்தை வளர்த்து, தேர்தலில் வென்று நான்கு ஆண்டுகள் உலகமே வியந்த ஓர் ஆட்சியைக் கொடுத்தவன். உலகத் தர வரிசையில் முப்பதாவது இடத்தில் இருந்த அவன் நாடு அவனுடைய ஆட்சியினால் மூன்றாவது இடத்துக்கு முன்னேறியிருந்தது. அவனுடைய படம் மாட்டப்படாத வீடு அந்நாட்டில் இல்லை. இந்த மண்ணை துன்பங்களிலிருந்து மீட்க வந்த ஒரு ரட்சகன் என்று பாமரர் மட்டுமல்ல படித்தவர்களும் நம்பினார்கள். அவனை மனிதனாகப் பார்த்தவர்கள் சிலர், அவதாரமாகப் பார்த்தவர்கள் பலர்.

நான்கு ஆண்டுகால ஆட்சியின் இறுதியில் ஒரு வர்த்தகப் பேச்சுவார்த்தை தொடர்பாக வெளிநாட்டுக்குப் பயணம் செய்து கொண்டிருந்தபோது தான், நரேந்திரன் சென்ற விமானம் தீப்பிடித்தது. தான் இறந்துவிட்டதாகவே எண்ணிக் கொண்டிருந்த நரேந்திரனால் நீண்ட நேரம் கழித்துத்தான் நடுக்கடலில் விழுந்திருப்பதை உணர முடிந்தது. அப்பொழுது நீச்சலடிக்கத் தொடங்கியவன் தான், இப்பொழுது ஒரு கரையை அடைந்திருக்கிறான். கரையை அடைந்தவன் மயங்கி விழுந்தான். ஏதோ ஒரு மிகப் பெரிய கடல்வாழ் உயிரினத்தின் வால் அடித்ததால் அவனுடைய முகத்திலிருந்து இரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. அவனுடைய நாட்டில் ஒவ்வொரு வீட்டிலும் தரிசிக்கப் படும் அந்த அழகு முகம், அடையாளம் தெரியாமல் சிதைந்து போயிருந்தது. எங்கோ தூரத்தில் விளையாடிக் கொண்டிருந்த சில இளைஞர்கள், கரையில் ஒதுங்கிய உடலைக் கண்டு ஓடி வந்தனர்.

அடுத்த நாள் கண்விழித்து பார்த்தபோது ஓர் அழகான அறையில் தான் படுக்க வைக்கப்பட்டிருப்பதை நரேந்திரன் உணர்ந்தான். நரேந்திரன் அசையத் தொடங்கியதும், ஜன்னலருகே நின்று



கொண்டிருந்த ஒரு மூதாட்டி மெள்ள அவனருகில் வந்தாள். அவள் ஆங்கிலத்தில் பேசினாள். "இபொழுது எப்படி இருக்கிறது?'' என்று தலையைக் கோதி விசாரித்தாள்.

அது என்ன நாடு, அவன் எப்படி இந்த இடத்துக்கு வந்து சேர்ந்தான் என்பதை, குழந்தைக்குப் பாட்டி கதை சொல்வதைப் போலச் சொல்லி விவரித்தாள். "நீ...?'' என்று முடித்தாள்.

தான் யார் என்பதைச் சொல்ல முயன்றபோதுதான், தன்னால் தெளிவுறப் பேச இயலவில்லை; எந்தவொரு வார்த்தையையும் தெளிவாக உச்சரிக்க முடியவில்லை என்பதை நரேந்திரன் உணர்ந்தான். மூதாட்டி ஒரு முகக் கண்ணாடியை நரேந்திரனிடம் கொடுத்தாள். அந்தக் கண்ணாடியில் தெரிந்தது தன் முகம்தானா என்று நரேந்திரனுக்குச் சந்தேகம் வந்துவிட்டது.

தன் முகத்தைப் பார்த்தாலே அல்லது தன் பெயரைச் சொன்னாலே அவன் யார் என்பதை உலகத்தின் பெரும்பாலானவர்களால் கண்டுபிடித்துவிட முடியும். ஆனால் இப்பொழுது அவன் யார் என்பதை எழுதிக் காட்டினால்கூட யாரும் நம்பப் போவதில்லை என்று தோன்றியது அவனுக்கு.

அந்தக் கரையோரத்து வீட்டில் அவனுக்கு நிம்மதி கிடைத்தது. அந்த மூதாட்டி அவனிடம் எந்தக் கேள்வியும் கேட்கவில்லை. தன் பெயர் சுரேந்திரன் என்றும் ஒரு விமான விபத்தினால் தான் பாதிக்கப்பட்டதையும் அவளுக்கு ஆங்கிலத்தில் எழுதிக் காட்டினான். இன்னும் ஓரிரு மாதங்களில் இந்த நாட்டிலிருந்து அவனுடைய நாட்டுக்கு ஒரு சரக்குக் கப்பல் செல்லவிருக்கிறது. அந்தக் கப்பல் பணியாளர்களுக்கு சுரேந்திரனை அறிமுகப்படுத்தி அவனை அனுப்பி வைப்பதாக மூதாட்டி கூறினாள். அடுத்த மாதத்தில் தன் நாட்டில் தேர்தல் வரப்போவது அவனுக்கு நினைவுக்கு வந்தது. ஆட்சி மாற்றத்தினால் தன் மக்களுடைய நிலை என்னவாகும் என்று வருத்தத்தோடு சில நாட்களைக் கழித்தான்.

மூதாட்டி சொன்ன ஓரிரு மாதங்கள் கடந்தன. நரேந்திரனும் அவளும் துறைமுகத்தில் காத்துக் கொண்டிருந்தனர். கப்பல் அதிகாரிகளிடம் நடந்த நீண்ட நேர பேச்சுவார்த்தைக்குப் பின் நரேந்திரன் சுரேந்திரனாக சரக்குக் கப்பலில் அனுமதிக்கப்பட்டான். மூதாட்டியின் விலாசத்தை வாங்கிக்கொண்டு அவள் கைகளை இறுகப் பிடித்து தன் நன்றியைச் சொல்லிவிட்டு நரேந்திரன் விடைபெற்றான். கப்பல் புறப்பட்டது.

ஏதேதோ நினைவுகளோடு அவன் கடலைப் பார்த்துக் கொண்டிருந்தான். கப்பலில் பயணித்த அந்தச் சில மாதங்களில் கடல்தான் அவனுக்குப் பொழுதுபோக்கு. சில நாட்களில், அவனது பேசும் சக்தி மீண்டது.

அன்று காலை, கரை வந்துவிட்டதாக அறிவிப்பு வந்தபோது துள்ளிக்குதித்து வெளியே வந்தான் நரேந்திரன். தாய் மண்ணைப் பார்த்தவனுக்குத் தாங்க முடியாத ஆனந்தம். கப்பல் துறைமுகத்தை அடைந்தது. துறைமுகத்தின் மத்தியில் நரேந்திரனின் படம் மாட்டப்பட்டிருந்தது. அதைப் பார்த்து தனக்குள் சிரித்துக் கொண்டான்.

அதிகாரிகள் அவனைக் கடுமையாக விசாரிக்கத் தொடங்கினார்கள். எப்பொழுதோ ஒருமுறை தன் கட்சித் தொண்டனின் உறவினன் விமான விபத்தில் இறந்தது அவன் நினைவுக்கு

வெற்றிட வித்துக்கள்!

வார்த்தைகளைத் தேடவில்லை. துரத்தித் துரத்தி வாழ்க்கையின்மீது விளக்கடிக்கவில்லை. எதார்த்தங்களுக்கு முன்னால் எசமான் என்று கைகட்டி நிற்கவில்லை. உலகத்தைப் படைப்பதற்கு முன் பிரம்மன் மூளையில் நிலவிய அதே வெற்றிடத்தோடு இந்தச் சிறுகதைகளை எழுதத் தொடங்கினேன். இந்த வெற்றிடங்களில்தான் படைப்பாளிக்கான புதையல்கள் வளர்ந்து வருவதாக நம்புகிறேன். தாமதமாக வந்த

ந்தது. அந்தச் சம்பவத்தைப் பயன்படுத்
க் கொண்டு விசாரணையைச் சமாளித்
ான். தான் யார் என்பதைச் சொல்ல
விரும்பாமல், ஒரு புதிய அடையாளத்தோடு
ன் நாட்டுக்குள் குடியேற விரும்பினான்.

கடற்கரைக்குச் சென்று சிறிது நேரம் அமரலாம் என்று வந்தபோதுதான், அங்கே தான் பார்க்காத ஒரு புதிய சிலை அமைக்கப்பட்டிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டான். அது அவனுடைய சிலை!

பெட்டிக் கடைகளில் தொங்கிய செய்தித் தாள்கள் மூலமாக தன்னுடைய கட்சித் தேர்தலில் தோற்று, எதிர்கட்சியாயிருப்பதையும் அறிந்து கொண்டான். நடைபெறும் ஆட்சி ஒரு கொடுங்கோலாட்சி என்பது மக்களிடம் விசாரித்ததில் தெரிய வந்தது. தன்னுடைய சிலைக்கு அடியில் அமர்ந்து நீண்ட நேரம் யோசித்தான். சட்டென்று எழுந்தான். தான் உருவாக்கிய கட்சியில் தானே ஒரு தொண்டனாகச் சேர்வது என்று முடிவு செய்தான்.

கட்சி உறுப்பினனாகி வேறு ஒரு தொண்டனின் வீட்டிலேயே ஓர் அறையில் குடியிருந்து கொண்டான் சுரேந்திரன்.

முதல் சில மாதங்களில் சில வியூகங்களை வகுத்தான். மெள்ள மெள்ள வியூகங்களைச் செயல்படுத்தத் தொடங்கினான். மறக்கப்பட்டிருந்த கட்சியின் கொள்கைகளைப் புத்தகங்களாக எழுதிப் பரப்பினான்.

நடந்து கொண்டிருந்த கொடுங்கோலாட்சிக்கு எதிராக நாடு தழுவிய போராட்டங்களைத் திட்டமிட்டு நடத்தினான். தனது கட்சியும் அதன் கொள்கையும், அந்தத் தேசத்து மக்களின் முன்னேற்றத்துக்கான தலைமையைக் கொடுக்க முடியும் என்ற புரிதலை ஏற்படுத்தினான். ஒரு புதிய புயல் வீசத் தொடங்கியது.

கட்சியின் செல்வாக்கு பன்மடங்கு உயர்ந்தது. கட்சியின் தலைமைக் குழுவில் இருந்த சிலருக்கே அப்பொழுதுதான் கொள்கைத் தெளிவு ஏற்படத் தொடங்கியது.

மக்களின் கடும் எதிர்ப்பால் ஆட்சி கலைக்கப்பட்டுத் தேர்தல் அறிவிக்கப்பட்டது.

சுரேந்திரனின் வளர்ச்சியில் பொறாமைப்படத் தொடங்கிய கட்சி நிர்வாகம், அவனைக் கட்சியை விட்டு நீக்கியது. தான் கட்சியை விட்டு நீக்கப்பட்டதைப் பற்றியும் கவலைப்படாமல் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டான். மிகப் பெரிய ஆதரவு திரண்டது.

தொடர்ச்சியான கடும் உழைப்பினால் சுரேந்திரனின் உடல் நிலை பாதிக்கப்பட்டது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அவனுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது.

தேர்தல் முடிந்து, கட்சியின் வெற்றி அறிவிக்கப்பட்ட அதே நாளில் மருத்துவமனையில் சுரேந்திரனின் உயிர் பிரிந்தது. நாட்டுமக்கள் அனைவருக்கும் ஒரு கண்ணில் ஆனந்தம்; ஒரு கண்ணில் சோகம். செய்த தவறுகளை எண்ணி, கட்சி நிர்வாகம் வருந்தியது.


கறைகளை அகற்றும் வண்ணம் ஒரு நல்லாட்சி தொடங்கியது.

கடற்கரையில் நரேந்திரனுக்கு வைக்கப்பட்டிருந்த சிலைக்குப் பக்கத்தில் சுரேந்திரனுக்கும் ஒரு சிலை எழுப்பப்பட்டது.

இரண்டு சிலைகளையும் வணங்கி விட்டுத்தான் அன்றாடப் பணிகளைத் தொடங்க வேண்டுமென்பது அந்நாட்டு அமைச்சர்களின் மரபாகிப் போனது. ●

மாணவன் ஆசிரியருக்குத் தெரியாமல் தன் இருக்கையில் போய் அமர்ந்து விடுவது போல் ஆங்காங்கே சில சுய அனுபவங்களும் சத்தமில்லாமல் சங்கமித்திருக்கின்றன.

எப்படியெல்லாம் சிறுகதைகளை எழுதலாம் என்று மனம் அலைந்த ஒரு தருணத்தில் தான் யாரோ ஒருவர் என் பெயரைச் சொல்லி அழைத்தார். அழைத்தவருக்கு இக்கதை கடமைப்பட்டிருக்கிறது.



- கபிலன்

சிந்தூர வண்ணத்தினாள்!

சுதா சேஷய்யன்



கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள் விளக்குகிறார் : பஞ்சக்ருத்ய பராயணா என்று ஒரு பெயர் உண்டு அம்பாளுக்கு. ஐந்து வித தொழில்களைச் செய்யக் கூடியவள் என்று பொருள். சாதாரணமாக முத்தொழில்கள் என்று நாம் சொல்வதுண்டு. படைத்தல் காத்தல், அழித்தல், ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்று இப்படி முத்தொழில்களைச் சொல்வது கொஞ்சம் எளிமைப்படுத்திய வடிவத்தில்தான். சரியாகச் சொல்ல வேண்டுமானால் ஐந்தொழில்கள் என்று விரிவுபடுத்தித்தான் சொல்ல வேண்டும். அதனால்தான் நடராஜருடைய ஆடல் தத்துவத்துக்கே பஞ்சக்ருத்ய நடனம் என்று பெயர். அம்பாளுக்கும் 'பஞ்ச க்ருத்ய பராயணா' -ஐந்து தொழில்களைச் செய்பவள் என்று பெயர்.

சிருஷ்டி - படைப்புத் தொழில். சிருஷ்டிக்கப்பட்டது காப்பாற்றப்பட வேண்டும், அதற்காக இருக்கக் கூடிய தொழில் ஸ்திதி. இப்படிக் காப்பாற்றக் கூடிய எதுவாக இருந்தாலும் ஒரு கால கட்டத்தில் அது நீக்கப்படவேண்டும் - வடிவம் மாற வேண்டும். அதை அழிவு என்று சொல்வது தப்பு. சம்ஹாரம் என்பது அழிவு என்று நமக்குப் புரிவதற்காகச் சொல்லிவிட்டோம். அழிவு என்றால் டிஸ்ட்ரக்ஷன். ஆனால் எதையுமே அழிக்க முடியாது. நவீன பௌதிகம் என்ன சொல்கிறது - 'மேட்டர் கேனாட் பி க்ரியேடட் நார் டெஸ்ட்ராய்ட்' என்கிறது. இருக்கக் கூடிய ஒன்றை வேறு வடிவமாக மாற்றலாம். அதனால்தான் பகவத் கீதையில் கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனிடம் ''நீ அழித்தாலும் அழிக்காவிட்டாலும் இந்த உடல்கள் அழிந்துதான் தீரும்'' என்பார். அந்த வடிவம் மாறி வேறு ஏதோ ஒரு வடிவத்துக்குப் போகும். அதனால்தான் அதற்கு நீக்கல் என்று பெயர்.

கம்பர் தன்னுடைய ராமாயணத்துக்குப் பாயிரம் பாடுகிறபோதே,


'உலகம் யாவையும் தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும்' என்றார்.

உளவாக்கல் என்பது சிருஷ்டி. நிலைபெறுத்தல் என்பது ஸ்திதி. நீக்கல் என்பது நாம் இன்று அழித்தல் என்று குறிப்பிடுகிறோமே அது - ஓர் உருவிலிருந்து மற்றொரு உருவாக மாற்றுவது. இந்த மூன்றும்தான் நாம் சொல்லக் கூடிய முத்தொழில்கள்.

திரோபாவம்

இந்த மூன்றும் நடக்க வேண்டுமானால், நான்காவதாக ஒன்று இருக்கிறது. அது நடைபெற வேண்டும் - திரோதானம் அல்லது திரோபாவம் 'மறைத்தல்' என்றும் இதைச் சொல்லலாம்.

மாயை என்று சொல்கிறோமே அது. இது நடக்கிறது; இது இப்படித்தான் நடக்கிறது என்று ஏதோ ஒன்று நம்மை நம்ப வைக்கிறதே, அப்படி நம்ப வைப்பதற்குத்தான் மாயை அல்லது மறைத்தல் என்று பெயர். பரமாத்மா என்ன பண்ணுகிறார் என்றால், நம்மையெல்லாம் சிலவற்றை நம்ப வைக்கிறார். எல்லோருக்கும் தெரியும், பகவான் படைக்கிறார்



மாயூரம் ஸ்ரீ அபயாம்பிகை

படைத்தவற்றையெல்லாம் அழிக்கப் போகிறார். - இதை அறிவு சொல்லும். ஆனால், என்றைக்காவது காலை எழுந்து அவசர அவசரமாக வேலையை ஆரம்பிக்கிறபோது, இதுதான் உண்மை என்று நினைக்கிறோமா...? நினைத்தால் வேலை நடக்குமா?

நினைக்கிறோமா என்பது பெரிதல்ல... இதுதான் என்று நினைத்தால் அப்புறம் இந்த உலகம் நடக்காது. ஜகத்வியாபாரம் என்று பெயர் உலக நிகழ்வுகளுக்கு. அவை எல்லாம் நின்றுவிடும். எங்கேயாவது காட்டில் மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு, மரம் வைத்தவன் தண்ணீர் விடுவான் என்று உட்கார்ந்தால், உலகத்தில் நடக்க வேண்டிய விஷயங்கள் நடக்காது. மறைத்தலை நமக்குக் கொடுத்தால்தான், திரோபாவத்தைக் கொடுத்தால்தான் அவை நடக்கும். ஓடிப்போய் பஸ்ஸைப் பிடிப்பது தான் சாசுவதம் (நிலையான நிஜம்), இன்றைக்கு வீடு கட்டுவதுதான் சாசுவதம், இன்றைக்குச் சேர்க்கிற பணம்தான் சாசுவதம் என்கிற நம்பிக்கை நமக்கு ஏற்படுகிறது! அந்த நம்பிக்கையை நமக்குத் தருவதற்குத்தான் திரோபாவத்தை அருள்கிறார் பரமாத்மா.

அந்த திரோபாவம் - மறைத்தலை- நம்மைப் போன்ற சாமானிய மனிதர்களுக்கு மட்டும் தந்துவிடவில்லை. ஆசார்யர் ஆதி சங்கர பகவத் பாதர் சொல்லுவார்: இந்த மறைத்தலை யாருக்கெல்லாம் கொடுக்கிறார் தெரியுமா...? சிருஷ்டி கர்த்தாவாக இருக்கக் கூடிய பிரம்மாவுக்குக் கொடுக்கிறார். ஸ்திதி கர்த்தாவாக இருக்கக் கூடிய மஹாவிஷ்ணுவுக்குக் கொடுக்கிறார். சம்ஹார கர்த்தாவாக இருக்கக் கூடிய ருத்ரனுக்குக் கொடுக்கிறார் பரமாத்மா - அதுமட்டுமில்லை, தனக்குத் தானேயும் கொடுத்துக் கொள்கிறார் - அதனால்தான் இத்தனைக் காரியங்களும் நடக்கின்றன என்கிறார்.

அப்படியானால் திரோபாவம் என்பதால்தான் பந்தம் நமக்கு ஏற்படுகிறது. பந்தம் வருவதற்கு என்ன காரணம்? என் வீடுதான் பிரதானம்; சொந்தக்காரர்கள் பிரதானம்; இன்று வாங்கிய கார் பிரதானம். நாளைக்குப் புதுசாக ஒரு மாடல் கார் வந்தால் அதை வாங்குவேன்; எனக்கு லேப் டாப் கம்ப்யூட்டர் போதாது பாம் டாப் வாங்குவேன் என்றெல்லாம் ஆசை வருகிறதே... இந்த ஆசைகளுக்குக் காரணம் திரோபாவம்தான்.

அனுக்ரஹம்

இந்தத் திரோபாவத்துக்கு அடுத்ததாக ஒன்று உண்டு. அதுதான் அனுக்ரஹம். பரமாத்மாவின் ஐந்தொழில்களுள் உச்சத்தில் இருக்கக்கூடிய தொழில் அனுக்ரஹம். இந்த ஜீவன் இந்தத் திரோபாவத்தில் சுற்றி சுற்றி சுழன்று மேலே வந்ததற்கப்புறம், இதையெல்லாம் விட்டு விருப்பு - வெறுப்பில்லாத நிலைமைக்கு வரவேண்டுமென்றால், 'புனரபி ஜனனம் புனரபி மரணம்' என்று சுற்றி சுற்றித் தான் வந்தாக வேண்டும். இதையெல்லாம் அனுபவித்து விட்டுத்தான் வரவேண்டுமேயொழிய நேரே போய்விட முடியாது. 'ஏன் நேரேயே போய்விடலாமே...' பந்த பாசமே

> “பரமாத்மாவின் படைத்தல், காத்தல், சம்ஹரித்தல், மறைத்தல், அருளல்

இல்லாமல் விருப்பு வெறுப்பே இல்லாமல் போய்விடலாமே என்றால் அது சாத்தியமில்லை. நூறாவது படியை அடைய ஒவ்வொரு படியாக ஏறித்தான் போக வேண்டுமேயொழிய, 'நேராக நூறாவது படியில் போய் நிற்கிறேன்' என்று சொன்னால் 'பாலன்ஸ்' இருக்காது. முதல் படியிலிருந்து போனால்தான் நூறாவது படியிலே ஸ்திரமாக நிலைத்து நிற்க முடியும்.

அப்படியானால், அந்த 'மறைக்கும்' படிகளையெல்லாம் தாண்டிப் போய் நூறாவது படியை அடைய ஆன்மாவுக்குப் பரமாத்மா அனுக்ரஹம் செய்கிறாரே அந்த அனுக்ரஹத்துக்கு அருளல் என்று பெயர்.

படைத்தல், காத்தல், சம்ஹரித்தல், மறைத்தல், அருளல் அல்லது அனுக்ரஹம் -பரமாத்மாவின் இந்த ஐந்தொழில்களுமே

அம்பிகைக்கு உரிய தொழில்கள்தாம்.

ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமத்தை நாம் முறையாகச் சிந்திக்க வேண்டுமானால் பூர்வபாகம், தியானஸ்லோகம், நாமாவளி என்றுதான் முறைப்படி போகவேண்டும். ஆனால் ஒரு சில காரணங்களுக்காக நாம் நாமாக்களுக்கு முதலில் போவோம்.

நாமாவளி (நாமாக்கள்) ஆரம்பிக்கிறபோதே **'ஸ்ரீமாதா'** என்றுதான் ஆரம்பிக்கிறது. ஸ்ரீமாதா, ஸ்ரீமஹாராக்ஞி, ஸ்ரீமத் ஸிம்ஹாஸனேசுவரி - இந்த முதல் மூன்று நாமங்களும் சிருஷ்டியை, ஸ்திதியை, ஸம்ஹாரத்தைக் காட்டக் கூடியவை.



ஸ்ரீ மாதா என்று சொல்லக் கூடியது அம்மாவாக, தாயாக அந்த அம்பிகையைப் பார்த்துச் சொல்வது. தாயாக இருக்கக் கூடியவள்தான் படைக்கக் கூடியவள். படைப்புத் தொழிலுக்கு அதிபதியாக இருக்கக் கூடியவள் என்பதனாலே ஸ்ரீமாதா. ஆரம்பிக்கும்போதே அம்மா என்றுதான் ஆரம்பிக்கிறது. லலிதா ஸஹஸ்ரநாமம் தானே... 'லலிதாம்பிகே' என்று ஆரம்பித்திருக்கலாம். ஆனால், அவ்வாறு ஆரம்பிக்கவில்லை; ஸ்ரீமாதா என்றுதான் ஆரம்பிக்கிறது - 'தாயாக இருக்கக் கூடியவளே; எங்களைப் படைப்பவளே!' என்னும் பொருளில்.

அனைத்துமே அம்பிகைக்கு உரிய தொழில்கள்!"

அந்தத் தாய்க்குப் படைப்பதிலே அவ்வளவு சந்தோஷம். படைப்பதற்காகவே அவள் வடிவம் எடுத்து வருகிறாள். தியான ஸ்லோகம் எப்படி ஆரம்பிக்கும் என்றால் 'ஸிந்தூர அருண விக்ரஹாம்' என்றுதான் ஆரம்பிக்கும். மற்றதற்கெல்லாம் அப்புறம் வருவோம். சிந்தூர அருண விக்ரஹாம் - சிந்தூரம் என்ன வண்ணம் என்பது நமக்குத் தெரியும். சிவப்பிலேயே அது ஒரு விதமான சிவப்பு. நிறம் சொல்கிறபோது கொஞ்சம் கஷ்டம். சிவப்பு என்றால் என்ன சிவப்பு என்று கேட்போம். நீலம் என்றால் என்ன நீலம்...? வானம் மாதிரி நீலமா? அல்லது எம்.எஸ். ப்ளுவா? அந்த மாதிரி, சிவப்பிலே என்ன சிவப்பு என்று கேட்டால் அது சிந்தூரச் சிவப்பு. சிந்தூர அருண விக்ரஹாம் - செம்மேனி படைத்தவள் - அம்பாளைப் பற்றிச் சாதாரணமாக சிந்தூர வர்ணத்தை உடையவள் என்று சொன்னால்கூட பரமேசுவரியாக இருக்கக்கூடிய அம்பிகை மற்ற இடங்களில் கருமேனி படைத்தவள் என்று வர்ணிக்கப்படுகிறாள். அபிராமி பட்டர் பாடுகிறபோது 'சிந்தூர வண்ணத்தினாள்' என்பார். சொல்லிவிட்டு, அடுத்த வார்த்தையிலேயே நீலி என்பார்! இது எவ்வாறு சாத்தியமாகிறது...?

(தொடரும்)

யாமினி சகுனி...

இதுவரை:

திருமணத்துக்குத் துணி எடுப்பதற்காக பாமாவும் - கௌரிசங்கரும் ராதாவை அழைக்க வர, அங்கே ஷ்யாம் இருப்பதைப் பார்த்துவிட்டு அவனை அழைக்க, அவன் வர மறுக்கிறான். பின்னர் பாமா சென்டிமென்டலாகப் பேச, ஷ்யாம் அவர்களுடன் செல்ல சம்மதிக்க, துணிக்கடையில் ஷ்யாமிடம் கலர் செலக்ஷன் பற்றி கேட்டு அவனுக்கு எரிச்சலூட்ட ராதா ஒருபுறம் புடைவைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். அங்கு கவிதா வந்து மீண்டும் பாமாவையும்; ஷ்யாமையும் ஒன்றாக வைத்து, தான் பார்த்தது உண்மை என்று கூறுகிறாள். ராதா கோபப்பட, அவன் அங்கிருந்து செல்ல, துணி எடுத்தபின்பு, பாமா, ராதா அனைவரும் ஒரு ஹோட்டலுக்குச் சென்று சாப்பிடுகின்றனர். அந்த ஹோட்டலுக்குப் பலமுறை பாமாவுடன், ஷ்யாம் வந்ததை நினைத்துப் பார்த்து உணர்ச்சி வசப்பட்டு கையில் வைத்திருந்த கண்ணாடி டம்ளரை அழுத்த அது உடைந்து அவனது கையைக் கிழிக்கிறது. அனைவரும் அதிர்ச்சியடைகின்றனர். அவனை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச்சென்று முதலுதவி செய்கின்றனர்.

ராதா பாமாவிடம் ஷ்யாம் ராஜினாமா செய்யப் போவதாகச் சொன்னதைச் சொல்லி, அவனை ராஜினாமா பண்ண விடாமல் தடுக்குமாறு கேட்டுக் கொள்கிறாள்.

அருண் வீடு விற்பதற்காக அட்வான்ஸ் வாங்கிய விஷயம் கவிதாவுக்குத் தெரியவர அவனைக் கடிந்துகொண்டு தன் நகையை அடமானம் வைத்து அந்தப் பார்ட்டிக்கு கொடுக்கும்படி சொல்கிறாள். அருண் அவ்வாறே செய்து விட்டு வர மீண்டும் புரோக்கர் அவனுக்கு ஆசை காட்டி நகைமீது மேற்கொண்டு பணம் வாங்கச் சொல்ல, அவனும் வாங்கிக் கொடுக்கிறான். இந்த விவரம் இரு நாட்களுக்குப் பிறகு கவிதாவுக்குத் தெரிய வர, அருணைத் தாறுமாறாகத் திட்டுகிறாள்.

ஆனந்த் தனது தாய், வனஜாவிடம், பூங்கொடி தன்னைத் திருமணம் செய்து கொள்வதாகச் சொன்னதைச் சொல்ல, வனஜா கோபப்பட்டு பூங்கொடியை வீட்டை விட்டு வெளியேறும்படி சொல்கிறாள். அந்தச்சமயம் பாத்ரூமில் யாமினி பைப்பில் கரண்ட் ஒயரை இணைத்து வைத்துவிட்டு ரகசியமாக வர, ஆனந்த் குளிக்கப் போனவன் ஷாக் அடித்து விழுகிறான். டாக்டர்கள் அவனைக் காப்பாற்றி பிழைக்க வைக்கின்றனர். பூங்கொடி ஆனந்தை யாரோ கொலை செய்ய முயற்சி செய்வதாக கூற, குழம்பிய தயாஎன் வனஜா மீண்டும் பூங்கொடியை வீட்டிலேயே இருக்குமாறு சொல்ல, இதைக் கண்ட யாமனி ஷாக் ஆகிறாள். மீண்டும் யாமினி என்ன செய்யப் போகிறாள்?

வரும் எபிசோடுகளில்


STAR
RELIANCE Mobile
VIJAY AWARDS
உங்க favourite ஸ்டார்களை
மிஸ் பண்ணாதீங்க.
அப்படியே, ஓட்டு போட மறக்காதீங்க!
சனிக்கிழமைதோறும் மாலை 7 மணிக்கு
காணத்தவறாதீர்கள்
VIJAY
RELIANCE Mobile
HAVELLS
NOKIA

✉ சித்திரம் பேசுதடி, சிந்தை கலங்குதடி, எத்தனை சோகமடி, நெஞ்சு கனக்குதடி.

- எஸ். கருணையானந்தம்,
உசிலம்பட்டி

✉ நக்சைலட்டுகளுக்காக ராக்கெட் லாஞ்சர்களைக் கடத்தும் சதியில் மாநில போலீஸ் என்ற தகவலுடன் கதிகலங்க வைத்தது தலையங்கம். தமிழகத்துக்கே தலை குனிவு!

- லெமூரியன்,
திருவண்ணாமலை

✉ சென்னை உயர்நீதி மன்றத்தில் அமைக்கப்பட்டுள்ள அருங்காட்சியகத்தைப் பற்றிய செய்திகளும் புகைப் படங்களும் அருமை!

- பா.சு.மணிவண்ணன்,
திருப்பூர்



✉ பாரத - பாகிஸ்தான் பயங்கரவாத ஒழிப்பு ஒப்பந்தத்தின் பயங்கரத்தைத் தலையங்கக் கருத்தோடு கார்ட்டூனிலும் சித்திரித்திருப்பது சிறப்பாக உள்ளது.

-எஸ்.ஏ.கேசவன், குகழுகாசலபுரம்

✉ புலனாய்வு அதிகாரி ரகோத்தமனின் பேட்டி அருமை. ஸ்பெஷல் ப்ராஞ்ச் போலீஸாரும், க்யூ ப்ராஞ்ச் போலீசாரும் எதிர்கட்சிகளைக் கண்காணிக்கவே பயன்படுத்தப்படுகிறார்கள் என்று மாநில அரசைச் சாடியிருப்பதும் அருமை!.

- ஜி.குப்புசாமி, சங்கராபுரம்

✉ 'அமைதிப்பூங்கா மெள்ள மெள்ள அமைதி குலைந்து ஆயுதப் பூங்காவாகிறது' கட்டுரைத் திடுக்கிட வைத்தது.

- யூ.பைஸ் அஹமத்

✉ அண்மையில் அயோத்தியா மண்டபத்தில் நிகழ்ந்த விசாகாஹரியின் ஹரிகதையைக் கேட்க நேர்ந்தது. அருமையான உபன்யாசத்தில் அடிக்கொருதரம் 'ஸ்ரீ அண்ணா' சொல்வார் என்று சொன்னது நல்ல இசையில் நடுநடுவே 'அபஸ்வரம்' உண்டாவது போல ஆகிவிட்டது. ரஸிகாவின் விமர்சனம் மிகவும் சரியான மதிப்பீடு.

- ஆர்.கோபாலன், மேற்கு மாம்பலம்

✉ உள்ளத்தின் உணர்வுகளை வெகு நுட்பமாகப் பிரதிபலித்த 'வலி' தலைப்பிலானக் கவிதை வரிகள் மிக அருமை....

- எஸ்.எம்.பாலசுப்பிரமணியன்,
போடிநாயக்கனூர்

சரியான மதிப்பீடு!

✉ அட்டைப் படத்தில் வந்த அப்துல்கலாமின் கனவு நம்பிக்கையை நிஜமாக்குகிறது என்று ரஸிகாவின் கட்டுரை ஒரு முத்திரை.

- எஸ்.ஆர்.ஹரிஹரன்,
சென்னை


இப்படித்தான்
சில
கெமிக்கல் காஸ்மெடிக்ஸ்
உங்கள் சருமத்தை பாதிக்கின்றது
சில கெமிக்கல் காஸ்மெடிக்ஸ் நன்மையை விட
தீமையே அதிகம் ஏற்படுத்துகிறது.
சூரிய ஒளியில் வெளிப்படும் பொழுது
சருமத்தின் அணுக்களை பாதிக்கின்றது.
அறிமுகமாகிறது
இயற்கையான சருமம் மற்றும்
மேனி பராமரிப்பிற்கான வகைகள்
Team EUBIO CARE
Team Eubio Care's
SKIN AND BODY CARE RANGE
இயற்கையின் குணநலனை அனுபவியுங்கள்,
கெமிக்கல் காஸ்மெடிக்ஸ்களுக்கு குட்பை சொல்லுங்கள்
Team Health Shoppe
Team Eubio Care

மாரம்பாடி பாஸ்கர்

கம்பளியை உதறி, கட்டிலில் விரித்த ராணி, "ஏங்க! உங்கம்மா சொல்றது, உங்களுக்கே நியாயமா இருக்கா?" என்றாள்.

"அவங்களுடைய முடிவு அப்படி... நானா போகச் சொல்லுறேன்?" பார்த்துக் கொண்டிருந்த தொலைக்காட்சியை அணைத்து விட்டுச் சொன்னான் விஜய்.

"நம்ம வீட்டுல வசதி இல்லையா...? இல்ல, நாமதான் நல்லா கவனிச்சுக் கலையா..? இத்தனை வருஷம் இங்க இருந்துட்டு, கடைசிகாலத்துல முதியோர் இல்லத்துக்குப் போயிட்டா, ஊரு உலகம் என்ன சொல்லும்?"

"எனக்கு மட்டும் அந்த அக்கறை இல்லாம இல்ல. மறுபடியும் எங்கம்மா கிட்டப் பேசிப் பார்க்குறேன்."

வேண்டுதலை முன்னிட்டு திருப்பரங்குன்றம் போயிருந்த செல்லம்மாள், மறுநாள் காலையில்தான் வீடு திரும்பினாள்.

"பாட்டி..." ஓடி வந்து காலைச் சுற்றினாள் விஜய்யின் மகள் தேன்மொழி.

பேத்தியை முத்தமிட்ட செல்லம்மாள், அவளுக்குப் பிடித்த இனிப்பைக் கொடுத்தாள். தன் மகனுக்கும், மருமகளுக்கும் திருநீற்றையும், பிரசாதத்தையும் வழங்கினாள்.

தேன்மொழி விளையாட, ராணி அடுக்களைக்குள் சென்றிருந்த நேரம்...

"அம்மா.."

"என்ன ராசா..?"

"நீங்க முதியோர் இல்லத்துக்குப் போயித்தான் ஆகணுமா? இங்கேயே இருக்க வேண்டியதுதானே."

"இல்ல ராசா! இந்த வயசான காலத்துல உங்களுக்கு நான் சுமையா இருக்க விரும்பல."

"இதனால உங்களுக்குத்தான் சிரமம்." - இடைமறித்தான் விஜய்.

"அத்தே! என் மேல உங்களுக்குக் கோபமா?" அடுக்களையிலிருந்து ராணி.

"ஐய்யய்யோ... அப்படியெல்லாம் இல்ல.." பதறிய செல்லம்மாள் நிதான



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்வான கதை

மாகத் தன் முடிவைச் சொன்னாள். விஜய்யும் ராணியும் தங்கள் வாதத்தை முன்வைத்துத் தோற்றுப் போனார்கள்.

அன்று இரவு...

"உங்க அம்மா ஏன் இப்படி நடந்துக்குறாங்கன்னு நல்லாத் தெரியும்" காட்டமாகத் தொடங்கினாள் ராணி.

"ஏன் இப்படி கத்துறே? பக்கத்து ரூமுலதான் அம்மா இருக்காங்க."

"பின்ன என்னங்க! வீட்டுல ஒத்தாசையா வேலை செய்யப் பயந்துக்கிட்டு அங்க போறேங்கிறாங்க."

"என்ன சொல்ற நீ...?"

"ஆமாங்க! காலையில நான் அவசர அவசரமா சமைச்சு வைச்சா, அதை உங்களுக்குப் பரிமாறுவாங்க. நாம வேலைக்குப் போனதுக்கப்புறம் தேன்மொழியைப் பார்த்துக்குவாங்க. ராத்திரி நீங்க எந்த நேரத்துக்கு வந்தாலும், உங்களுக்காக சாப்பாடு எடுத்து வச்சுக் காத்திருப்பாங்க. இங்கிருந்து போயிட்டா, இனிமேல் இந்த வேலையை எல்லாம் செய்ய வேண்டிய அவசியம் இருக்காதே. அதுதாங்க உங்க அம்மாவோட திட்டம்."

"ராணி! உன் இஷ்டத்துக்கு எதை எதையோ பேசிக்கிட்டு இருக்காதே." கோபமானான் விஜய்.

மகனும், மருமகளும் ஆட்சேபணை தெரிவித்த போதிலும், செல்லம்மாள் தான் திட்டமிட்டபடி பக்கத்து நகரத்தில் உள்ள முதியோர் காப்பகத்துக்குப் புறப்பட்டு விட்டாள்.

ஒரு கையில் மஞ்சள் பை; மற்றொரு கையில் ஊன்றுகோல்; சற்று தளர்வுற்ற நடை; செல்லம்மாள் நகரப் பேருந்தில் ஏறி, இருக்கையில் பாதுகாப்பாக அமர்ந்தாள்.

பேருந்து புறப்பட்டது...

செல்லம்மாளின் கண்களில் இருந்து புறப்பட்ட கண்ணீர், கன்னங்களில் உருண்டோடியது.

மஞ்சள் பையிலிருந்து, தேன்மொழியின் நிழற்படத்தை எடுத்துப் பார்த்த செல்லம்மாளுக்குப் பழைய நினைவுகள் பனிச்சிட்டன.

"அப்பா.." தேன்மொழி துள்ளி வந்தாள்.

"என்ன தேனு?" - இது விஜய்.

"அப்பா, பேச்சுப் போட்டியில நான்தான் ஃபஸ்ட்! அடுத்த வாரம் ஆண்டு விழா அப்போ எனக்குப் பரிசு கொடுப்பாங்க."

"ம்! வெரி குட்! வெரி குட்!" -விஜய்யின் இதழ்கள் தேன்மொழியின் கன்னத்தில் முத்தமிட்டன.

"அப்பா! ஆண்டு விழாவுக்கு நீங்க கண்டிப்பா வரணும்" மழலையில் பேசினாள் தேன்மொழி.

"அடடா! அப்பாவுக்கு முக்கியமான வேலை இருக்கு. அதனால நீ அம்மாவைக் கூட்டிட்டுப் போ! என்ன..."- விஜய்யின் விரல்கள் தேன்மொழியின் கன்னத்தைக் கிள்ளின.

ஏமாற்றத்துடன் திரும்பிய தேன்மொழி, துணி தோய்த்துக் கொண்டிருந்த, தன் அம்மாவிடம், இதே விஷயத்தைச் சொன்னாள்.

"என் கண்ணா... என் செல்லம்..." ராணியும் தன் மகளைக் கொஞ்சினாள்.

"அம்மா! அப்பாதான் வரல்ல, நீங்களாவது வாங்கம்மா."

"தேனு, அம்மாவுக்கு, இங்க நிறைய வேலை இருக்கு, அதனால நீ பாட்டியைக் கூட்டிட்டுப் போயேன்" ராணியும் நழுவிக் கொண்டாள்.

மீண்டும் ஏமாற்றமடைந்த தேன்மொழி செல்லம்மாவிடம் வந்தாள்.

"பாட்டி...."

"தேனு, எல்லாத்தையும் நான்

அம்மாவின் முடிவு!

கேட்டுக் கிட்டுத் தான் இருந்தேன்" என்ற செல்லம்மாள், தேன்மொழியின் கன்னங்களில் மாறி மாறி முத்தமிட்டு விட்டுச் சொன்னாள்.

"ஆண்டு விழாவுக்கு நான் வர்றேன் தேனு. நீ பரிசு வாங்கும்போது, உன்னோடு இருப்பேன்."

"சரி பாட்டி." - செல்லம்மாளின் அணைப்பில் அடங்கினாள் தேன்மொழி.

அவ்வாறே... மூன்றாம் வகுப்பு படிக்கும் தேன்மொழியின் ஆண்டு விழாவுக்குச் சென்றிருந்த செல்லம்மாள், அவள் பரிசு வாங்கும்போது அருகே நின்றிருந்தாள்.



"ஆஹா.. நான் பிழைச்சுட்டேன். ஆப்ரேஷன் சக்ஸஸ்..."

"யோவ் கத்தாத. இது எமலோகம்."

- ஜி.பத்மநாபன்

"ஏம்மா! பாரதி நகர் வந்திடுச்சு" என்று நடத்துநர் சொல்லியபோதுதான், நிகழ்கால நினைவுக்கு வந்தாள். உடனே, மஞ்சள் பையையும், ஊன்றுகோலையும் பிடித்துக் கொண்டு, பேருந்தை விட்டு இறங்கினாள்.

சாலையோரமாக நடந்த செல்லம்மாள், எதிரே வந்த ஒருவரிடம் விசாரித்தாள் "ஏம்பா! இங்க முதியோர் இல்லம்..."

"இந்த வழிதான் பாட்டி, கொஞ்ச தூரம் போங்க, அங்கதான் இருக்கு."

"சரிப்பா." நம்பிக்கையுடன் நடந்த செல்லம்மாள் சில வினாடிகளில், விவேகானந்தர் முதியோர் இல்லத்தை அடைந்தாள்.

காப்பக நிர்வாகியைச் சந்தித்து அவரிடம் அனுமதி பெற்று, சேர்ந்து கொண்டாள்.

தனக்குக் கொடுக்கப்பட்ட அறையை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, வராண்டாவிலிருந்து, ஒரு சப்தம் வந்தது. "ஏ! செல்லம்மா!"

செல்லம்மாள் திரும்பிப் பார்த்தபோது, அங்கே அவளது தோழி பார்வதி நின்றிருந்தாள்.

"ஏண்டி! நீயுமா இங்க வந்துட்டே! என் புள்ளதான் என்னைக் கவனிச்சுக்கல, உனக்குமா இந்த நிலைமை..!" வியப்புடன் கேட்டபடி அருகே வந்தாள் பார்வதி.

வராண்டாவில், தன்னைப் போல பல முதியவர்கள் இருப்பதைப் பார்த்த செல்லம்மாள், "வாடி சொல்றேன்" என்று பார்வதியை அழைத்துக்கொண்டு தன் அறைக்குள் நுழைந்தாள்.

"என்ன செல்லம்மா? வீட்ல எதுவும் பிரச்னையா?"

"அதெல்லாம் இல்லடி! இப்படி உட்கார்" என்ற செல்லம்மாள், அவள் அருகே அமர்ந்து கொண்டு நிதானமாகப் பேச ஆரம்பித்தாள்.

"பார்வதி... குடும்பத்துல எல்லாரும் என்னிடம் அன்பா இருக்காங்க! ஆனா, அவுங்களுக்குள்ளதான் அன்பு இல்ல."

"என்ன சொல்ற நீ?" - குறுக்கிட்டாள் பார்வதி.

"ஆமாண்டி! என் பேத்தி தேன்மொழியை என் மகனும் மருமகளும் என்னிடம் ஒப்படைச்சுட்டு, வேலைக்குப் போயிடுவாங்க. என் பேத்திகிட்ட நான் காட்டுற அன்பைக் கூட அவுங்க காட்டுறது இல்ல. பணம் சம்பாதிப்பது மட்டும் தான் வாழ்க்கைன்னு நினைச்சுக்கிட்டு இருந்த அவுங்க, இனிமேல் அவளைப் பாசத்தோடு கவனிச்சுக்குவாங்க. என் மருமகள் சமைச்சு வச்சுட்டு வேலைக்குப் போய்டுவா. நான்தான் மகனுக்குப் பரிமாறுவேன். இனிமேல், அவ என் பையனுக்கு, தானே பரிமாறி, நாலு வார்த்தை பேசுவாள். இப்படி... என் மகனும், மருமகளும், பேத்தியும் மனசுக்குள்ள இருக்கிற பாசத்த வெளியகாமிக்க, ஒரு வாய்ப்பா அமையுமேன்னுதான் வந்துட்டேன்."

வியப்பில் உறைந்து போனாள் பார்வதி. ●

உங்களில் பலருக்கு


எஸ்டேட் ஃப்ரெஷ் ஃபில்டர் காப்பி

ஒரு மரபாகும்

EG ESTATE FRESH Coffee

வெகு காலமாக, புதிதாக தயாரிக்கப்பட்ட தரம் வாய்ந்த காப்பியை உங்கள் விருப்பத்திற்கேற்ற வகையில், உங்கள் ஒவ்வொருவருக்கும் நாங்கள் வழங்கி வருவதை நீங்கள் நன்கறிவீர்கள். மறுக்கவியலாத மற்றும் மிக உயர்ந்த தரத்துடன் எஸ்டேட் ஃப்ரெஷ் ஃபில்டர் காப்பி உற்பத்தி செய்யப்படுவதால், பன்னெடுங்காலமாக எங்கள் வாடிக்கையாளர்களால் அது பெரிதும் விரும்பப்பட்டு வருகிறது. தரத்தை விரும்பும் எங்கள் வாடிக்கையாளர்களின் வசதிக்காக, அவர்களுக்கு அருகாமையில் உள்ள கடைகளில் எஸ்டேட் ஃப்ரெஷ் ஃபில்டர் காப்பி கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. காலம் காலமாக உங்கள் ஆதரவையே எங்கள் நோக்கமாக கொண்டுள்ள நாங்கள், உங்கள் பகுதி மற்றும் தமிழ்நாடு முழுவதிலும் எங்களது தரம் வாய்ந்த தயாரிப்பான எஸ்டேட் ஃப்ரெஷ் ஃபில்டர் காப்பியை புதிய எழில்மிகு மற்றும் சிறப்பான பேக்கிங்கில் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உங்கள் ஒவ்வொருவரின் நாவின் சுவையை திருப்தி செய்து, நீங்கள் சுவைக்கும் காப்பியின் மணம் உங்கள் நாவில் நெடுநேரம் நிலைத்திருக்கச் செய்யவே இன்றைக்கு நாங்கள் இங்குள்ளோம். எனவே, உடனே உங்கள் அருகாமையிலுள்ள பலசரக்கு கடைக்குச் சென்று, எஸ்டேட் ஃப்ரெஷ் ஃபில்டர் காப்பியை கேட்டு வாங்கிப் பருகி, உங்கள் காப்பியின் விசேஷ மணம் மற்றும் சுவையை அனுபவித்து மகிழுங்கள்.










"இதுபோன்ற நிறைவில்லை வேறெந்த காபியிலும்"

COFFEE 85% CHICORY 15%



EfG

Estate Foods & Grains

சென்னை மற்றும் தமிழகமெங்கும் வியாபார விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தொடர்பு கொள்ள: Chennai:9841221796, Rest of Tamilnadu: 9486263342



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை – 63. போன் : 22760612.
City Office No.7,முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை – 33.போன் 23714942.

கிளை நிறுவனம் : புதிய எண். 16, பழைய எண். 19, முதல் மாடி, 30வது தெரு,
தில்லைகங்கா நகர், நங்கநல்லூர், சென்னை – 600 061. போன் : 22333214

தீபாவளி நல்வாழ்த்துக்கள்

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 18 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 200 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு, நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில்/வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை ஸ்ரீ சாரதா சக்தி பீடம் என்ற பெயருக்கு Cheque / DD / MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் நல்லாசியுடன்
நிர்வாகம்

நடக்குமென்பார்; நடக்கும்!

8.10.06 முதல் 14.10.06 வரை

மேஷம் : முன்னேற்றமான வாரம். வீடு / வாகனம் வாங்க ஏற்ற தருணம். பொருளாதாரக் கஷ்டங்கள் விலகும். கணவன் மனைவி உறவு நன்றாக இருக்கும். நெருங்கியவர்கள் விலக நேரிடும். பூர்வீகச் சொத்துகள் பாகப்பிரிவினை ஆகும். புதிய தொழில் முயற்சி நற்பலனைத் தரும். குழந்தைகள் பற்றின மனக்கவலை தீரும். திருமணக் காரியம் கைகூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கொடுக்கல், வாங்கல் சிக்கல் தீரும். வழக்கு முடிவுக்கு வரும். கல்வி வளம் பெருகும். மகப்பேறு பாக்கியம் கிட்டும். ராகு / கேது வழிபாடு நற்பலனைத் தரும.

ரிஷபம் : எதிர்ப்புகள் விலகும் வாரம். போட்டியின்றி வெற்றி கிடைக்கும். திருமணத் தடை விலகும். பணக் கஷ்டம் விலகும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் கிட்டும். தொழில் துறையில் மாற்றம் வரும். புதிய பதவி கிடைக்கும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். குழந்தைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். உடல்நிலை நன்றாக இருக்கும். கொடுக்கல், வாங்கல் வெற்றி அளிக்கும். கல்வியில் மேன்மை ஏற்படும். தாயின் உடல்நிலை பாதிக்கப்படலாம். மனச் சலனம் நீங்கும். ராகு / கேது / குரு வழிபாடு செய்து வரவும்.



மிதுனம் : சுபகாரியம் கைகூடும் வாரம். மகப்பேறு பாக்கியம் கிடைக்கும். மன சந்தோஷம் ஏற்படும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் ஏற்படும். பணச் சிக்கல் தீரும். திருமணத் தடை விலகும். வெளிநாட்டுப் பணி கிட்டும். மனதில் தைரியம் ஏற்படும். செலவுகள் சுபமானதாக இருக்கும். உடல் நிலை நன்றாக இருக்கும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். உத்தியோகத்தில் நற்பெயர் ஏற்படும். ஆடை, ஆபரணங்கள் சேரும். வீடு / வாகனம் வாங்க நல்ல தருணம். குழந்தைகளால் மன மகிழ்ச்சி ஏற்படும். வழக்கில் வெற்றி கிட்டும். வியாபாரத்தில் நல்ல லாபம் ஏற்படும்.

கடகம் : எண்ணங்கள் யாவும் ஈடேறும் வாரம். கல்வி நிலையில் மேன்மை ஏற்படும். மனதில் உற்சாகம் ஏற்படும். நெருங்கிய கூட்டாளிகள் விலகிச் செல்வார்கள். கொடுக்கல், வாங்கலில் எச்சரிக்கை தேவை. பணக் கஷ்டம் இருக்காது. உடல்நிலையில் கவனம் தேவை. குடும்ப வாழ்வில் விட்டுக் கொடுக்கவும். வாகனத்தில் செல்லும்போது எச்சரிக்கை தேவை. வேலைப் பளு அதிகரிக்கும். பொறுப்பான பதவி கிட்டும். யாருக்கும் ஜாமீன் போட வேண்டாம். வியாபாரத்தில் மந்தம் இருக்கும். சிலருக்கு இடமாற்றம் ஏற்படும். ராகு / கேது /



குரு / சனி வழிபாடு செய்து வரவும்.

சிம்மம் : குழப்பங்கள் விலகி நன்மை தரும் வாரம். பண வரவு உண்டு. சுபகாரியப் பேச்சுவார்த்தை கைகூடும். உடல்நிலை நன்றாக இருக்கும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். வராத நிலுவைகள் வந்து சேரும். வழக்கில் வெற்றி கிட்டும். குழந்தைகளால் மனதில் மகிழ்ச்சி கிட்டும். வேலைப் பளு குறையும். உத்தியோகஸ்தர்களுக்கு நற்பெயர் ஏற்படும். புதிய தொழில் கைகூடும். செலவுகள் சுபமாக இருக்கும். தன விருத்தி உண்டாகும். கொடுக்கல், வாங்கல் சிக்கல் தீரும். ராகு / கேது / குரு / சனி வழிபாடு செய்து வரவும்.

கன்னி : மகிழ்ச்சிகரமான வாரம். சுபகாரியம் நடக்கும். பணக் கஷ்டம் இருக்காது. கணவன் - மனைவி உறவு நற்பலனைத் தரும். முயற்சிக்கு நல்ல வெற்றி கிடைக்கும். குழந்தைகளால் சந்தோஷம் ஏற்படும். வீடு / வாகனம் / ஆடை / ஆபரணம் வாங்க யோகம் கிட்டும். வேலைகளில் நற்பெயர் ஏற்படும். பண விரயம் ஏற்படும். வெளிநாட்டு அழைப்பு கிட்டும். குழந்தை பாக்கியம் உண்டாகும். உடல்நிலை நன்றாக இருக்கும். செலவுகள் சுபமானதாக இருக்கும்.

துலாம் : மன நிறைவு பெறும் வாரம். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். திருமணக் காரியம் கைகூடும். கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். வேலைவாய்ப்புகள் பெருகும். வீடு / மனை வாங்க நல்ல காலம். மன உளைச்சல் தீரும். வழக்கு வெற்றி அளிக்கும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். புதிய முயற்சிகளில் அனுகூலம் ஏற்படும். வேலையில் நற்பெயர் கிடைக்கும். புதிய தொழில் முயற்சியில் இடமாற்றம் ஏற்படும். குழந்தைகளால் மனமகிழ்ச்சி கிட்டும். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். கூட்டாளிகளால் சங்கடம் ஏற்படும். அலைச்சல் இருக்காது. ராகு / கேது / குரு / சனி வழிபாடு உத்தமம்.

விருச்சிகம் : உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். கடன் தொந்தரவு விலகும். வீடு / தொழிலில் மாற்றம் உண்டாகும். வேலைப் பளு அதிகரிக்கும். பொறுப்பான பதவி கிட்டும். கௌரவப் பதவி தேடி வரும். நாணயம் காப்பாற்றப்படும். படிப்பில் நற்பெயர் கிட்டும். கூட்டாளிகளின் அனுகூலம் ஏற்படும். திருமணக் காரியம் கைகூடும். சொத்துகள் வாங்க நல்ல தருணம். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். குழந்தைகளால் மன சந்தோஷம் கிட்டும். பணப் பற்றாக்குறை இருக்காது. ராகு / கேது / குரு வழிபாடு நற்பலனைத் தரும்.

தனுசு : சுபகாரியத் தடைகள் விலகி

பரத்வாஜ்...

என் மகளுக்கு எப்போது திருமணம் நடக்கும்? நல்ல வரன் அமையுமா?

- சி.துரை, சென்னை - 63

உங்கள் மகளுக்கு 28ஆவது வயதில் திருமணம் நடக்கும். பிறந்த ஊருக்கு மேற்குத் திசையில் உடன்பிறப்பு இருவர் உள்ள இடத்தில் பிறந்த, வெளிநாட்டில் வேலையிலுள்ள வரன் அமைவான்.

என் மகளுக்குப் பொருத்தமான வரன் அமையுமா?

- ஆர்.சாய்குமாரி, பழவந்தாங்கல்

உங்கள் மகளுக்கு 30 வயதில் திருமணம் நடக்கும். பிறந்த ஊருக்குத் தென் திசையில் உள்ள வெளிநாட்டில் வேலை செய்யும் வரன் அமையும். உடன்பிறப்புகள் இருவர் இருப்பர்.

பல வருடங்களாக மன நிம்மதியில்லாமல் தவிக்கிறேன். இனியாவது கிட்டுமா?

- சந்திரன், மும்பை

இதுநாள்வரை நடந்த கால சக்கர தசைகள் உங்களுக்குச் சரியாக இல்லாத காரணத்தால் மன நிம்மதி இல்லை. தற்பொழுது புதன் தசை ஆரம்பமாகி இருக்கிறது. ஆன்மிக ஈடுபாட்டை வளர்க்கும். இறையருள் சித்திக்கும்.

நற்பலன் கிடைக்கும் வாரம். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பணக் கஷ்டம் விலகும். தெய்வ அனுகூலம் ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். வீடு / மனை வாங்க நல்ல தருணம். மனச் சலனம் தீரும். வெளிநாட்டுப் பணி கிடைக்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். செலவுகள் சுபமானதாக இருக்கும். எதிர்ப்புகள் விலகும். ஆஞ்சநேயர் வழிபாடு செய்து வரவும்.

மகரம் : வாக்கில் நிதானம் தேவை. உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். குடும்பத்தில் விட்டுக் கொடுக்கவும். கூட்டுத் தொழில் செய்பவர்கள் எச்சரிக்கையாக இருக்கவும். மனஸ்தாபம் ஏற்படலாம். யாருக்கும் ஜாமீன் போடக் கூடாது. கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. வீடு மாற்றம் ஏற்படும். வேலைப் பளு அதிகரிக்கும். வியாபாரத்தில் மந்த நிலை இருக்கும். மனதில் குழப்பம் இருக்கும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. கல்வியில் கவனம் செலுத்தவும். தந்தையின் உடல்நிலை பாதிக்கப்படலாம். ராகு / கேது / சனி / குரு வழிபாடு செய்து வருவது நற்பலனைத் தரும்.

கும்பம் : எண்ணங்கள் யாவும் ஈடேறும் வாரம். பண வரவு நன்றாக இருக்கும். உத்தியோகத்தில் மாறுதல் ஏற்படும். பணக் கஷ்டம் இருக்காது. கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். வழக்கு வெற்றி அளிக்கும். ஆரோக்கியம் சீராகும். சுப காரியப் பேச்சுவார்த்தை பலன் அளிக்கும். தூர தேச அழைப்பு ஏற்படும். தொழில் துறையில் நல்ல லாபம் ஏற்படும். கல்வி வளம் மேலோங்கும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல் தீரும். செலவுகள் கட்டுக்கடங்கி இருக்கும். ஆடை, ஆபரணப் பொருட்கள் சேரும். வேலைப் பளு அதிகரிக்கும். வேலையில் நற்பெயர் இருக்கும். அந்நிய நாட்டு மனிதர்களின் அனுகூலம் ஏற்படும். ராகு / கேது வழிபாடு செய்து வர, நற்பலன் ஏற்படும்.

மீனம் : மகிழ்ச்சிகரமான வாரம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பண வசதி பெருகும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வீடு, மனை வாங்க நல்ல தருணம். முயற்சிகளில் வெற்றி அளிக்கும். திருமணக் காரியம் கைகூடும். வெளிநாடு செல்ல நேரிடும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் ஏற்படும். செலவுகள் சுபமாக இருக்கும். கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். குழந்தைகளால் மன மகிழ்ச்சி ஏற்படும். ●

...பதில்கள்

என் மகனுக்கு எப்போது நிரந்தர வேலை கிடைக்கும்?

- அருணா சீனிவாசன், கோவை-18

உங்கள் மகனுக்கு குரு மஹாதசை நடைபெறுகிறது. 20.9.2006க்குப் பிறகு வெளிநாடு சென்று படிக்கும் யோகம் இருக்கிறது. வெளிநாட்டு வேலை நிரந்தரமாக அமையும். 26 வயது முடிவடையும்போது திருமணம் நடக்கும். சனி தசை, சனிபுத்தியில் பெற்றோர் பார்த்துச் செய்யும் திருமணம் நடக்கும்.

என் திருமணம் எப்போது நடக்கும்? எப்படி இருக்கும்? வி.ஐ.பி. ஆகும் வாய்ப்புள்ளதா?

- கவி.கணேசன், எண்ணமங்கலம்

உங்கள் ஜாதகப்படி ராகுதசை நடைபெற்று வருகிறது. 28 வயதில் வி.ஐ.பி. ஆகும் வாய்ப்பு உள்ளது. 2007-ல் திருமணம் நடக்கும். இல்லறம் நன்றாக இருக்கும்.

எப்போதிலிருந்து வியாபாரம் நன்றாக நடக்கும்? கடன்கள் எப்போது அடைபடும்?

- திருமதி சுந்தரம், சென்னை

உங்கள் சனி தசை யோக தசை. இதில் எல்லா செல்வ வளங்களும் வந்து சேரும், கவலைப்படத் தேவையில்லை. 20.9.2006-லிருந்து எல்லாம் நன்றாகவே நடக்கும்.

ப்ரியன்

நான் சர்ச்சைகளின்

அன்புமணி மத்திய சுகாதாரத் துறை அமைச்சரானதிலிருந்தே அவருக்கு அடுக்கடுக்கான சோதனைகள். 'அவற்றைச் சாதனைகளாக்குவதே எனது குறிக்கோள்' என்கிறவரிடம் பேசினோம்...

எய்ம்ஸ், ஜிப்மர் என்று ஏன் தொடர்ந்து சர்ச்சைகளின் நாயகனாகவே வலம் வருகிறீர்கள்?

"மத்திய அமைச்சரவையில் எனக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி, சில நல்ல காரியங்களைச் செய்ய முயல்கிறேன். ஆனால் எனது நோக்கங்கள், சில தீய சக்திகளால் விமர்சிக்கப்படுகின்றன; திசை திருப்பப்படுகின்றன. 'எய்ம்ஸ்' உலகத் தரத்தில் செயல்பட வேண்டிய நிறுவனம். அதன் இயக்குனர் வேணுகோபால் பிரபல டாக்டர்; சிறந்த சர்ஜன். அதில் சந்தேகமில்லை. ஆனால் மோசமான நிர்வாகி. நிர்வாகத்தைத் தமக்குக் கீழே உள்ள ஓர் அதிகாரியை கவனிக்கச் சொல்லிவிட்டு ஒதுங்கிக்கொண்டார். வருடத்துக்கு 400, 500 கோடி என மத்திய அரசு அதற்கு நிதி ஒதுக்குகிறது. ஆனால் ஒதுக்கப்படுகிற நிதி முறையாகச் செலவு செய்யப்படுவதில்லை. வளர்ந்து வரும் மருத்துவ விஞ்ஞானத்தை முழு அளவில் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு விபத்துப் பிரிவு, பல் சிகிச்சைப் பிரிவு, இதய நோய்ப் பிரிவு ஆகியவற்றை மேம்படுத்த வேண்டும் என்று பணம் ஒதுக்கினால் ஒன்றும் நடக்கவில்லை. நிர்வாகம் மோசமாக இருந்ததால் கடந்த சில வருடங்களில் 70 டாக்டர்கள் ராஜினாமா செய்து விட்டார்கள். ஊழியர்கள் வேணுகோபாலை எதிர்த்து உண்ணாவிரதம், வேலை நிறுத்தத்தில் இறங்கினார்கள். இந்த நிலையில் நிர்வாகத்தைச் சரிப்படுத்தி, நிறுவனத்தை ஒழுங்குபடுத்த வேண்டியது அதன் நிர்வாகக் குழுத் தலைவர் என்ற முறையில் எனக்கு மிக அவசியம் ஆகிவிட்டது.

மத்திய சுகாதாரத் துறை அமைச்சர், எய்ம்ஸ் நிர்வாகக் குழுத் தலைவராக இருப்பார். எனவே நிர்வாகக் குழுவைக் கூட்டினோம். பெரும்பான்மையோர் வேணுகோபாலை நீக்க ஆதரவு தெரிவித்தார்கள். ஆனால் அவரது அதிர்ஷ்டம், அப்போது உயர்கல்வியில் பிற்பட்டோர் இடஒதுக்கீடு பிரச்னைக்காகப் போராட்டம் நடந்தது. அப்போது டாக்டர்களுக்காக எய்ம்ஸ் வளாகத்துக்குள்ளேயே ஷாமியானா போட்டு குடிதண்ணீர் வசதி செய்து கொடுத்து, அவர்களைப் பிற்பட்டோருக்கு எதிராகத் தூண்டி விட்டார் வேணுகோபால். கடந்த வருடம் வேணுகோபாலுக்கு எதிராக ஊழியர்கள் போராடியபோது, சுப்ரீம் கோர்ட் வரை சென்று, அவர்களுக்கு எதிராக வாதாடியவர்தான் அவர். ஆனால் இந்தப் பிற்பட்டோர் இடஒதுக்கீடு பிரச்னை அவருக்கு மிக வசதியாகப் போய்விட்டது. அவரது மட்டமான நிர்வாகத் திறனும், செயலற்ற தன்மையும் வெளிவராமல் பதுங்கிக் கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்துவிட்டது இந்தப் பிரச்னை.

அதற்குப் பின் சுப்ரீம் கோர்ட் தலையிட்டு, சில முடிவுகளை அறிவித்திருக்கிறது. தில்லியிலுள்ள பத்திரிகையாளர்கள் 95 சதம் பிற்பட்டோர் இட ஒதுக்கீட்டுக்கு எதிரானவர்கள்தான். எனவே எய்ம்ஸ் பிரச்னையில் வேணுகோபாலுக்கு ஆதரவான நிலை எடுத்து என்னை வில்லனைப் போலச் சித்திரித்து விட்டார்கள். பிரதமருக்கு

எல்லா விஷயங்களும் தெரியும். ஒன்று மட்டும் சொல்கிறேன்... என் பதவிக் காலத்தில் எய்ம்ஸை, உலகத்தில் உள்ள மற்ற சிறந்த மருத்துவ நிறுவனங்களுக்கு இணையாக மாற்றியே தீருவேன். தடைகளைத் தகர்த்தெறிவேன்.

அடுத்து ஜிப்மர். எய்ம்ஸ் மற்றும் சண்டிகாரில் உள்ள பட்ட மேற்படிப்பு மருத்துவ விஞ்ஞானக் கழகம் போன்று, 1956-ல் துவங்கப்பட்டதுதான் ஜிப்மர். ஆனால் எய்ம்ஸ் மற்றும் பட்ட மேற்படிப்புக் கழகம் ஆகியவைத் தனி நிர்வாகக் குழுவின் கீழ் செயல்படும் தன்னாட்சி பெற்ற அமைப்புகள். ஆனால் ஜிப்மர் அப்படி அமைக்கப்படவில்லை. மத்திய சுகாதாரத் துறையின் கட்டுப்பாட்டில் வருகிறது. எனவே தில்லியில் உள்ளவர்கள் ஜிப்மரை நிர்வகித்து வருகிறார்கள் என்றுகூடச் சொல்லலாம். இங்கு பல பிரச்னைகள். ஒரு சிறிய பொருள் வாங்க வேண்டுமென்றால்கூட தில்லிக்கு எழுத வேண்டும். அதற்கு அனுமதி வருவதற்குள்


நாயகனா?



நிதியாண்டு முடிந்து விடும். இதன் காரணமாக, சுமார் 52 கோடி ரூபாயைச் செலவழிக்காமல் சமீபத்தில் திருப்பிக் கொடுத்தது ஜிப்மர். டாக்டர்களை நியமனம் செய்வதால் பல பிரச்னைகள். தவிர, காலதாமதம். நான் பதவியேற்ற பிறகு, இங்கு விசிட் செய்தேன். சி.டி. ஸ்கேன் இரண்டு மூன்று ஆண்டுகளாக வேலை செய்யவில்லை என்றார்கள். இரண்டே நாட்களில் சரி செய்தேன். 183 கோடி ரூபாய் சிறப்பு நிதி கொடுத்தோம். டாக்டர்கள் நியமனத்தில் இருந்த தடைகள் நீக்கப்பட்டு, நியமிக்கப்பட்டார்கள். இந்த நிலையில், எய்ம்ஸ் போன்று இதற்கும் தன்னாட்சி கொடுத்தால், சிறப்பாகச் செயல்பட வாய்ப்பிருக்கிறது என்ற முறையில் அதற்கான முயற்சியில் இறங்கினோம். தன்னாட்சி பெற்றால், மத்திய அரசிடமிருந்து நேரடியாக மிக அதிக அளவில் நிதி வரும். மருத்துவக் கல்லூரி தானே பாட திட்டங்களை வகுத்துப்

- வெடிக்கிறார் அன்புமணி





பட்டமளிக்கலாம். டாக்டர்கள் மற்றும் ஊழியர்கள் நியமனங்களுக்கு தில்லியில் உள்ள சுகாதாரத் துறை அதிகாரிகளின் தயவு தேவையில்லை. அவர்களுக்குச் சம்பளம் அதிகமாகக் கிடைக்கும். இப்போதுள்ள ஊழியர்களுக்கு எந்தப் பாதிப்பும் வராது. ஆனால் சிலர், ஊழியர்களைத் தூண்டி விட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் போராட்டத்தைக் கைவிட்டு வேலைக்கு வர வேண்டும். யாருக்கும் எந்தப் பாதிப்பும் வராது. எங்கள் நோக்கம் ஜிப்மரை உலகத் தரத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதுதான். மற்றொன்று, பாண்டிச்சேரியில் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரி நடத்துபவர்கள் ஜிப்மர் ஊழியர்களைத் தூண்டி விடுகிறார்கள்.''

ஜிப்மர் விஷயத்தில் ஜெ. உங்களைக் கடுமையாக விமர்சிக்கிறாரே...

"இவர் தமிழகத்தின் முதல்வராக இரண்டு முறை இருந்தது நமது துரதிர்ஷ்டம்தான். அவருக்குத் தன்னாட்சிக்கும் தனியார் ஆட்சிக்கும் வித்தியாசம் தெரியவில்லை. உலக அளவில் தற்போது உள்ள கோஷம் 'தன்னாட்சி' சுயாட்சிதான். பக்கத்தில் உள்ள ஈழத் தமிழர்கள் விவகாரத்தில் இந்தக் கருத்தோட்டத்தைப் பதிவு செய்யும் வைகோ, ஜெ.வுக்கு ஜால்ரா அடிக்கும் நோக்கில் இந்த விஷயத்தில் ஆதரவு தெரிவிப்பது கண்டிக்கத்தக்கது. இடதுசாரி தலைவர்களான கரத், யச்சூரி போன்றோர் ஜிப்மர் விவகாரத்தில் அரசின் கருத்துகளை ஒப்புக்கொள்கிறார்கள். வரும் பாராளுமன்றக் கூட்டத்தில் ஜிப்மர் தன்னாட்சி சட்டம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்படும்."

'உள்ளாட்சித் தேர்தலில் எல்லாக் கட்சிகளும் தனித்தனியாக நிற்கத் தயாரா?' என்று சவால் விடுகிறாரே விஜயகாந்த்?

"இது ஒன்றும் புதிய கருத்தல்ல. நாங்களும் இதுபோன்று முன்பு சொல்லியிருக்கிறோம். நமது தேர்தல் அமைப்பில் கூட்டணி தர்மம் நிலைத்து விட்டது. எனவே அவரது கருத்தைப் பற்றிப் பேசுவதில் பயனில்லை."

துணை நகர விவகாரத்தில் பா.ம.க. தமிழக அரசுக்கு மிகுந்த அழுத்தத்தைக் கொடுத்தது ஏன்?

''அந்தப் பகுதியில் எம்.பி., எம்.எல்.ஏ., ஒன்றியத் தலைவர் யாவரும் எங்கள் கட்சியினர். மக்களின் எண்ணங்களைத்தான் அவர்கள் பிரதிபலித்தார்கள். துணை நகரம் வேண்டுமென்பதில் இரண்டு கருத்துகள் இல்லை. எங்கள் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு கலைஞருக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம்.''

"எய்ம்ஸ் விவகாரத்தில் பிரதமருக்கு எல்லா விஷயங்களும் தெரியும்"

• வேணுகோபால்



"நானே ஒரு பத்திரிகை வெளியிடுகிறதென்று நேற்று இரவு பன்னிரண்டரை மணிக்கு முடிவு செய்து விட்டேன்."

"ரொம்ப சந்தோஷம்."

"அதெல்லாம் வெறுமனே வாயால் சந்தோஷம் என்று சொன்னால் மட்டும் போதாது. சந்தோஷத்தைக் காரியத்திலே காட்ட வேணும்."

"எப்படிக் காட்டுகிறது?"

"ஆயிரம் ரூபாய்க்கு ஒரு செக் எழுதிக் கொடுத்துக் காட்டுகிறது. எழுத்தாளனுக்கு எழுத்தாளனும், பத்திரிகைக்காரனுக்குப் பத்திரிகைக்காரனும் உதவி செய்யாவிட்டால், வேறு யார் உதவி செய்வார்கள்?"



சுண்டுவின் சந்நியாசம்!

என்னிடம் ஆயிரம் ரூபாய் இல்லை என்று சத்தியம் செய்ததின் பேரில், "சரி; ஒரு பூஜ்யத்தைக் குறைத்துக் கொள்!" என்று சொல்லி, அப்புறம் இன்னொரு பூஜ்யத்தையும் குறைத்துக் கொண்டு கடைசியில் பத்து ரூபாய் வாங்கிக் கொண்டு போனான்.

மறுமுறை சுண்டுவைப் பார்த்தபோது, "என்னப்பா! சொந்தப் பத்திரிகை ஆரம்பித்து விட்டாயா?" என்று கேட்டேன். "பத்திரிகையைக் கொண்டு குப்பையிலே போடு! இந்தப் பத்திரிகைகளைப் போல் உலகத்துக்குக் கெடுதல் செய்வது ஒன்றுமே கிடையாது!" என்றான்.

"அந்த உண்மையை எப்படித் தெரிந்து கொண்டாய்?" என்றேன்.



"குட்டிச் சுவரிலே முட்டிக் கொள்வதற்கு அப்படி என்ன வந்தது? தினந்தினந்தான் பத்திரிகைப் படிக்கிறோமே? ஒரு நாளாவது ஒரு பத்திரிகையிலாவது ஆயிரம் பொய்க்குக் குறைவாக வந்திருக்கிறதா? மார்பிலே கையை வைத்துக்கொண்டு சொல்லு!" என்றான்.

"எங்கள் குட்டை ரொம்ப உடைச்சு விட்டு விடாதே! பின்னே இப்போது என்னதான் செய்து கொண்டிருக்கிறாய்?" என்றதும், ஓர் அச்சடித்த துண்டுக் காகிதத்தை எடுத்துக்காட்டினான்; அதில், "மிஸ்டர் சுண்டு, ஸ்டாக் அண்டு ஷேர் புரோக்கர்" என்று அச்சிடப்பட்டிருந்தது.

மூக்கின் மேல் சுண்டு விரலை வைத்துக் கொண்டு அதிசயப்பட்டேன்.

"நாராயணசாமி! நான் சொல்கிறேன் கேள்! கடைசியாகப் பணம் சம்பாதிப்பதற்கு வழி கண்டுபிடித்து விட்டேன். பணம் என்றால், இந்த லயனிலே இருக்கிற பணம் வேறே எதிலும் இல்லை! உன்னுடைய டால்மியா கில்மியா, பிர்லா கிர்லா, டாடா கீடா எல்லாம் எப்படிக் கோடீசுவரர்கள் ஆனார்கள்? எல்லாம் இந்த ஷேர் மார்க்கெட்டிலே பணம் பண்ணித்தான்! ஆனால் ஒன்று சொல்கிறேன் கேள்! இந்த ஷேர் மார்க்கெட்

உலகத்திலே உள்ள முட்டாள்களைப் போல் வேற எந்த உலகத்திலும் கிடையாது. வாங்க வேண்டிய சமயத்திலே குடுகுடு என்று ஓடிப் போய் விற்பார்கள். விற்க வேண்டிய சமயத்தில் இறுக்கிப் பூட்டி வைத்துக் கொள்வார்கள். தங்களுக்கா தெரியாவிட்டாலும், ஏதடா, நம்ப சுண்டு ஒருத்தன்



இதற்கென்று தலையை க்ஷவரம் பண்ணிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறானே, அவனைக் கேட்டுக் கொண்டு செய்வோம் என்று செய்வார்களோ? அதுதான் கிடையாது. போனால் போகட்டும். நீ என்ன சொல்றே? இப்போது ஷேர் மார்க்கெட்டிலே பணம் பண்ணுகிறதற்குச் சரியான சந்தர்ப்பம். மைசூர் நிலக்கரி இருக்கே, அப்படியே தங்கம்! இன்னிக்கு 23 ரூபாயாயிருக்கு. இன்னும் பத்து நாளிலே 29 வரை போகாவிட்டால் என்னை ஏன் என்று கேளு; ஓர் ஆயிரம் ஷேர் இதிலே நீ வாங்கலாம். பத்து நாளைக்குள்ளே ஆறாயிரம் ரூபாய் கை மேலே வந்து விழும்! அப்புறம், குடகு காப்பிக் கொட்டை இருக்கிறதே, 'ஏ ஒன்' ரகத்தில் சேர்க்க வேண்டியது...''

''வீசை என்ன விலை?'' என்று நடுவிலே கேட்டு வைத்தேன்.

''அட நாராயணசாமி! நான் வெறும் காப்பிக் கொட்டையைச் சொல்லவில்லை! குடகு குண்டுக் காப்பிக் கொட்டைக் கம்பெனி ஷேரையாக்கும் சொல்கிறேன். உனக்கு அதிலே அவ்வளவு திருப்தி இல்லாவிட்டால், திருவாங்கூர் கடலைப் பிண்ணாக்கு இருக்கிறது! அது வெறும் கடலைப் பிண்ணாக்கு இல்லை! அவ்வளவும் கோட்டைப் பவுன் என்று வைத்துக் கொள். அதிலே ஓர் இரண்டாயிரம் ஷேர் நீ வாங்கிப் போட்டலாம்...''

மிஸ்டர் சுண்டுவின் வாய் மொழியாக அன்று சுமார் ஒரு லட்சம் ரூபாய் வரையில் சம்பாதித்து விட்டேன். அவ்வளவோடு அன்றைக்குப் போதும் என்று சொல்லி அவனைப் போகச் சொன்னேன்.

ஒரு மாதம் கழித்து மிஸ்டர் சுண்டுவை நான் பார்த்தபோது, ''நாராயணசாமி! நல்ல வேளை நீ பிழைத்தாய்! நான் சொன்னதைக் கேட்காமல் நீ பாட்டுக்குப் போய் திருவாங்கூர் கடலைப் பிண்ணாக்கையும், மைசூர் நிலக்கரியையும் கொச்சி காப்பிக் கொட்டையையும் வாங்கியிருந்தாயானால் அடியோடு தொலைந்து போயிருப்பாய்...! அதற்காக எனக்குத் தாங்க்ஸ் ஒன்றும் சொல்ல வேண்டாம். நமக்குள்ள என்னத்திற்காக உபசாரம்?'' என்றான்.



''சரி, இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறாய்?'' என்றேன்.

''இந்த உலகமானது ஏன் இப்படி

மூடத்தனத்திலே ஆழ்ந்து கிடக்கிறது என்று அடிக்கடி உன்னைக் கேட்டுக் கொண்டிருந்தேனல்லவா? அந்த இரகசியத்தைக் கடைசியாகக் கண்டுபிடித்து விட்டேன்."

"அது என்ன?"

"உலகத்திலே சரியான படிப்பு இல்லை; இருக்கிற படிப்பும் மோசம். இதுதான் காரணம். முதலிலே நமது சட்டசபையின் அங்கத்தினர்களுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்க வேணும். அப்புறம் பள்ளிக்கூட வாத்தியார்களுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்க வேணும். அதற்கப்புறம் பிள்ளைகளுக்குச் சரியான முறையில் கல்விப் பயிற்சி கொடுக்க வேணும். நீ என்ன சொல்கிறாய்?" என்று கேட்டேன்.

"அவசியம் உடனே செய்ய வேண்டிய காரியந்தான்!" என்றேன்.

"அப்படியானால் முதலிலே சட்டசபை அங்கத்தினருக்குப் படிப்புச் சொல்லிக் கொடுப்பதற்கென்று ஒரு பள்ளிக்கூடம் வைக்கிறேன். அதற்கு உன்னாலான கைங்கரியத்தைச் செய்!" என்று ரசீது புத்தகத்தை நீட்டினான். கண்டு இந்தத் தடவை போனால் திரும்பி வர மாட்டான் என்ற தைரியத்துடன் சக்தியானுசாரம் நன்கொடை கொடுத்து அனுப்பினேன்.

என் நம்பிக்கை வீணாயிற்று. கண்டு சீக்கிரமே திரும்பி வந்து, "அப்பனே! நல்லவேலை பார்த்து என்னை ஏவி அனுப்பினாய், அதைக் காட்டிலும் கொட்டைப் பாக்கைப் பிழிந்து பாதாம்கீர் பண்ணு என்று ஏவியிருக்கலாம்!" என்றான்.



"ஏன்? நமது சட்டசபை அங்கத்தினர்களை உன்னால் படிப்பிக்க முடியவில்லையோ?" என்றேன்.

"அவர்கள் முதலில் பள்ளிக்கூடத்துக்கு வந்தால் தானே படிப்பிக்கலாம்? எங்களுக்குப் படிப்பு வேண்டாம்; இருக்கிற படிப்பு போதும் என்கிறார்கள். இப்படிப்பட்டவர்களிடம் கொண்டுபோய் இராஜ்யத்தை ஒப்பித்தால் அது ஏன் உருப்படப் போகிறது?" என்றான் கண்டு.

"அப்படியானால் உலகத்தை முன்னுக்குக் கொண்டு வருகிற காரியம், 'ஹோப்லெஸ்' என்று விட்டு விட வேண்டியதுதான், இல்லையா?" என்றேன்.

"நன்றாயிருக்கிறது. அப்படியெல்லாம் விட்டு விடலாமா? உலகத்தின் தலையிலே ஒரு குட்டுக் குட்டி அதை முன்னுக்குக் கொண்டுவந்து சேர்க்க வேண்டாமா? உலகத்தைப் படிப்பிக்கிறதற்கு வேறு வழி ஒன்று கண்டுபிடித்துவிட்டேன். இத்தனை நாள்



"எப்பவும் சுறுசுறுப்பா இருக்கணும். எதுக்குமே லேட் பண்ணக் கூடாதுன்னு நம்ம வீரர்கள்கிட்டே சொன்னது தப்பா போச்சு!"

"என்னாச்சு மன்னா?"

"போர் ஆரம்பிக்கிறதுக்கு முன்னாடியே ஓடி வந்துட்டாங்க!"

- நெல்லையப்பபுரம் செல்வன்

அந்த யோசனை ஏன் தோன்றவில்லையென்பதை நினைத்தால் எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது. ஆம்; சில சமயம் நாம் தூரத்தில் மலை உச்சியில் உள்ள விளக்கைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறோம். காலடியிலுள்ள சூரியன் கண்ணில் படுவதில்லை! சினிமா டாக்கி என்பதாகக் கேள்விப் பட்டிருக்கிறாயோ இல்லையோ?"

"கேள்விப்பட்டிருக்கிறேன்."

"இந்தச் சினிமா ஒன்று மட்டும் என் கையில் இருந்தால் போதும்; அதைக் கொண்டு நமது யூனிவர்ஸிட்டி வைஸ் சான்ஸலர்களையும், பாடப் புத்தகக் கமிட்டி அங்கத்தினர்களையும் கூடப் புதுப்பித்து விடலாம்! ஆனால் இப்போது இந்தச் சினிமா உலகம் கெட்டுப் போயிருக்கிறது போல் வேறெதுவும் கெட்டுப் போயிருக்கவில்லை. ஒண்ணாம் நம்பர் நிரட்ச குட்சிகள் எல்லாரும் டைரக்டர்கள் என்று வந்து விடுகிறார்கள். சினிமாவுக்குக் கதை எழுதுகிறவர்களைப் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. நடிகர்கள் மகா மகா மகா மகா மோசம். எல்லாரையும் ஒரே 'ஸ்வீப்'பா 'ஸ்வீப்' பண்ணி வங்களாக்குடாக் கடலிலே எறிந்துவிட்டு மறுபடி புதிதாக ஆரம்பிக்க வேண்டும்."

"அப்படியே செய்துவிட்டால் போகிறது" என்றேன்.

"அதற்கு உன்னுடைய ஒத்தாசையும் கொஞ்சம் தேவை."

"என்ன செய்ய வேணும்?"

"பத்து லட்சம் ரூபாய் கண்ணை மூடிக்கொண்டு போடுகிற முதலாளி ஒருவரை நீ பிடித்துக் கொடுக்க வேணும். அந்த மனிதர் பணத்தை என் கையில் கொடுத்துவிட்டு அப்புறம் என்ன ஏது என்று கேட்கக்கூடாது. என்னைப் பூராவும் நம்பி விட்டுவிட வேணும்! அப்போது பாரேன் - சினிமா உலகம் எப்படி தலைகீழாக ஆகிறதென்று!"

"ஆகட்டும் கண்டு, அவசியம் பார்க்கிறேன்" என்றேன்.

அடுத்த தடவை நான் மிஸ்டர் கண்டுவைச் சந்தித்தபோது அவனுடைய தோற்றம் அடியோடு மாறிப் போய் இருந்தது.

"என்ன பண்ணுகிறாய்?" என்று கேட்டதற்கு, "டாக்கி உலகத்திலே பிரவேசித்து விட்டேன். இன்னும் கொஞ்ச நாள் பொறுத்திரு" என்றான்.

"கொஞ்ச நாள் என்ன? ரொம்ப நாள் வேண்டுமானாலும் பொறுத்திருக்கிறேன்" என்றேன்.

"அவசியமில்லை. கொஞ்ச நாள் பொறுத்தாலே போதும். இப்போது ஒரு தமிழ் டாக்கியின் டைரக்டருக்குக் காரியதரிசியாக அமர்ந்திருக்கிறேன். டாக்கி விஷயமாய் ஆனா, ஆவன்னா தெரியாதவர்கள் எல்லாம் படத்தைக் குட்டிச்சுவர் ஆக்குவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் அடுத்த வருஷம் இந்த நாளில் சினிமா உலகத்தில் ஒரு பெரிய புரட்சி நடக்கப் போகிறது. அதை எதிர்பார்த்துக் கொண்டிரு! நீ பாட்டுக்குத் தூங்கிப் போய் விடாதே!" என்று முதுகிலே தட்டிக் கொடுத்து எச்சரிக்கை செய்து விட்டுப் போனான்.

அந்தப்படியே நான் தூங்காமல் சினிமா உலகப் புரட்சியை எதிர்நோக்கிக் காத்திருந்தேன். சில காலம் வரையில் ஒன்றுமே நடக்கவில்லை. ஒரு வேளை கண்டு தான் தூங்கிப் போய் விட்டானோ?

(தொடரும்)

வித்யாதானம் புண்ணியம்!



'ஆசிரியர்களெல்லாம் உண்டியின் உதாரணத்தை ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். நம் கை நிறைய, பை நிறையக் காசு இருந்தாலும் உண்டியில் அப்படியே கொட்டிவிட முடியுமா? அதிலுள்ள சின்ன துவாரத்தின் வழியாக ஒவ்வொரு காசாகத்தானே போட வேண்டும்? முதலில் போட்டது சிக்காமல் உள்ளே போய் விட்ட அப்புறம், அதுவாகப் போகாவிட்டால் உண்டியைக் குலுக்கி அதைப் போகப் பண்ணிய அப்புறம்தானே அடுத்த காசைப் போட வேண்டும்? அப்படித்தான், ஒவ்வொரு விஷயத்தின் ஒவ்வோர் அம்சத்தையும் ஒவ்வொன்றாக மாணவர்களுக்கு எடுத்துச் சொல்லி அவர்களுடைய அறிவுக்குள்ளே செலுத்த வேண்டும். சொன்ன ஒவ்வோர் அம்சமும் சிக்காமல் அவர்களுக்குள்ளே போய் விட்டதா என்பதைக் கேள்வி கேட்டு நிச்சயப்படுத்திக் கொண்டு, அப்புறமே அடுத்த அம்சத்துக்குப் போக வேண்டும். ஒன்று உள்ளே போகவில்லையென்றால், நிதானம் இழக்காமல், கோபப்படாமல், மாறாக அவர்களுக்கு உற்சாகம் ஊட்டுகிற வகையிலே மறுபடியும் தெளிவாக எடுத்துச் சொல்லி உள்ளே போகப் பண்ண வேண்டும். அப்புறம் அடுத்த அம்சம்.

மந்த புத்திப் பசங்களுக்குக் கற்றுக் கொடுப்பது சிரமம்தான்; ஒப்புக்கொள்கிறேன். ஆனாலும் ஆசிரியர்மார்கள் 'தாங்கள் மேற்கொண்டிருக்கிற இந்தத் தொழில் வித்யாதானம் என்கிற புண்யமான சேவை; இதனால்தான் இளம்பிராயத்தினர் உரியபடி மனிதர்களாக உருவாகிறார்கள்; தேசத்தின், லோகத்தின் எதிர்கால ஷேமமே இதைத்தான் சார்ந்திருக்கிறது' என்பதை 'ரியலைஸ்' பண்ணிவிட்டால் தொழிலில் உள்ள சிரமங்களைச் சிரமமாகவே நினைக்க மாட்டார்கள். பொறுமையையும், ப்ரியத்தையும் ஒருபோதும் கைவிடாமலிருப்பார்கள்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

எஸ். சந்திரமௌலி

பி.ஜே.பி. தொண்டர்கள் சோர்ந்துவிட்டார்கள்...

- இல. கணேசன்

தமிழக பி.ஜே.பி.யின் தலைவராகியிருக்கிறார் இல.கணேசன். ஐ.சி.யூ.விலிருக்கும் தம் கட்சியைக் காப்பாற்றுவாரா? சந்தித்தோம்.

உங்களுடைய உடனடித் திட்டம் என்ன?

"கடந்த பாராளுமன்ற மற்றும் சட்டமன்றத் தேர்தல்களில் பா.ஜ.க.வுக்கு ஏற்பட்ட தோல்வி காரணமாக தொண்டர்கள் மத்தியில் ஒருவித சோர்வு ஏற்பட்டிருக்கிறது என்று கட்சியின் அகில இந்தியத் தலைவர்கள் கருதுகிறார்கள். அதன் காரணமாகவே, கேரளாவுக்குப் பொறுப்பாக இருந்த என்னைத் தமிழ்நாட்டின் தலைவராக ஆக்கி இருப்பதாகவும் சொல்கிறார்கள். கடந்த தேர்தலைவிட, வரும் உள்ளாட்சித் தேர்தலில் பா.ஜ.க. கூடுதலாக வாக்குகள் பெறச் செய்ய வேண்டும்; சோர்வடைந்துள்ள தொண்டர்கள் மத்தியில் ஓர் உற்சாகத்தை, நம்பிக்கையை உண்டாக்க வேண்டும். ஒன்று தேர்தல், இன்னொன்று தேற்றுதல்."



ஆர்.எஸ்.எஸ்.ஸின் நிர்ப்பந்தத்தினால் நீங்கள் இந்தப் பதவியில் அமர்த்தப்பட்டிருக்கிறீர்களா?

"பா.ஜ.க.வில் இருக்கிற என்னைப் போன்ற தொண்டர்களுக்கு ஏதாவது சில நற்பண்புகள் இருக்கிறதென்றால், அதற்குரிய பெருமை, ஆர்.எஸ்.எஸ். அமைப்பையே சாரும். கட்சியின் மீது ஆர்.எஸ்.எஸ்.-இன் இறுக்கம், பிடிப்பைப் பற்றி மற்ற சிலர் குற்றச்சாட்டாகக் கூறினாலும், நான் அதனைப் பெருமையாகவே கருதுகிறேன்."

அத்வானி உங்களுக்குச் சிபாரிசு செய்தாரா?

"அப்படியெல்லாம் இல்லை. கட்சியின் தலைவர் பதவிக்குரிய மரியாதையைத் தருவது பா.ஜ.க.வின் பண்பாடு. அதே சமயம் திறமை, நீண்ட கால அனுபவம், அவர்

களுடைய தனிப்பட்ட நடவடிக்கைகள், தொண்டர்கள் மத்தியில் செல்வாக்குக் காரணமாகச் சில தலைவர்களை மதிப்பதும், அவர்களிடம் ஆலோசனைகள் கேட்பதும் எங்கள் பாரம்பரியம். ஒருவரை ஒரு பொறுப்பில் அமர்த்தும்போது, அவர் அத்வானிக்கு நெருக்கமானவரா, இல்லையா என்று கட்சி பார்ப்பது கிடையாது."

உங்களுடைய மூன்றாண்டு பதவிக் காலம் முடிவதற்குள் தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தலை நீங்கள் சந்திப்பீர்கள் என்று நினைக்கிறீர்களா?

"தற்போது ஆட்சியில் இருக்கும் காங்கிரஸ் கூட்டணி அரசு, முழுமையாக ஐந்து ஆண்டுகள் ஆட்சியில் இருந்தாலும், என் பதவிக்காலம் முடிவதற்கு முன் பாராளுமன்றத் தேர்தல் வந்து விடும். எந்தத் தேர்தல் வந்தாலும் அதில் கட்சியின் உண்மையான பலத்தைக் காட்டுவற்கு எல்லா முயற்சிகளையும் செய்வேன் என்பது உறுதி!"


பாராளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்களில் தனித்துப் போட்டி என்ற முடிவுதானே உங்கள் படுதோல்விக்குக் காரணம்?

"முன்பே எடுத்த முடிவுதான் தனித்துப் போட்டி என்பது. தமிழ்நாட்டில் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டு, வெற்றி கண்டு பழகிவிட்டதால், தனித்துப் போட்டியிட்டுத் தோல்வி கண்டவுடன் தொண்டர்கள் மத்தியில் ஒருவிதச் சோர்வு, விரக்தி ஏற்பட்டு விட்டது. அதனைப் போக்க வேண்டும் என்பதுதான் இப்போது முக்கியம்."

கட்சியின் செயல்பாடுகள் சோம்பிப் போனதால்தான், இப்போது இலக்கிய அமைப்பின்பால் ஆர்வம் காட்டுகிறீர்களா?

"எனக்கு என்றைக்குமே இலக்கிய ஆர்வம் அதிகம். அரசியலுக்கு அப்பாற்பட்டு, 'பொற்றாமரை இலக்கிய அமைப்பி'னைத் தலைவராக இருந்து நடத்தி வருகிறேன். மற்றபடி நீங்கள் சொல்வது போலெல்லாம் இல்லை!"

படம்: ஸ்ரீஹரி



ஹீரோவாகும் பாடலாசிரியர்?

'நீ வருவாய் என...' படத்தில் 'பூங்குயில் பாட்டு பிடிச்சிருக்கா...' என்ற பாட்டின் மூலம் அறிமுகமான பாடலாசிரியர் விவேகா, சத்தமில்லாமல் 250 பாடல்களைத் தாண்டிவிட்டார். இவரின் லேட்டஸ்ட் ஹிட் 'சம்திங் சம்திங்' படத்தில் வரும் 'கோழி வெடக்கோழி'! 'திமிரு' படத்தின் இயக்குநர் தருண்கோபி, தீபாவளிக்கு வரவிருக்கும் 'ஈ' படத்தில் இவர் எழுதியுள்ள பாடலைக் கேட்டுவிட்டு தமது 'சென்னையிலிருந்து மதுர' படத்தின் அனைத்துப் பாடல்களையும் எழுதச் சொல்லிவிட்டதைப் பெருமையாகக் குறிப்பிடுகிறார் விவேகா. 'உயரங்களின் வேர்' என்னும் கவிதைத் தொகுப்பை வெளியிட்டுள்ள இவர் விரைவில் ஏழு கவிதைத் தொகுப்புகளை லண்டனில் வெளியிடவிருக்கிறார். 'அழகாக இருக்கிறீர்கள்... ஹீரோவாகிற உத்தேசம் உண்டா?' என்றால், 'ஐயையோ ஆளை விடுங்க, நமக்குத் தொழில் எழுத்து. அதை ஒழுங்கா செஞ்சாலே போதும்!' என்று கையெடுத்துக் கும்பிடுகிறார் விவேகா!

- கார்த்திகா

இன்னொரு முஷாரஃப்?

ஒரு துப்பாக்கி குண்டுகூட வீணாகாமல் தாய்லாந்தில் ராணுவம் பிரதமரைத் தூக்கியெறிந்து அரசைக் கைப்பற்றி இருக்கிறது.

● சோந்தி



"சீக்கிரமே ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை நிறுவுவோம்" என்கிறது ராணுவம். ஆனால் ராணுவ ஆட்சிகளின் 'சீக்கிரம்' என்பதற்குத் தெளிவான பொருள் இல்லை (ஜனநாயக ஆட்சி என்பதற்கும் அவர்கள் அகராதியில் சரியான பொருள் இல்லை).

பிரதமர் தாக்ஸின் ஐ.நா.சபையில் பேசுவதற்காக நியூயார்க் சென்றிருந்த சமயத்தில்தான் அவர் பதவி பலவந்தமாகப் பறிக்கப்பட்டது. அன்று பள்ளிகள், வங்கிகள், பங்குச் சந்தை அனைத்துக்கும் கட்டாய விடுமுறை. தெருக்கள் வெறிச்சோடி இருந்தன. பயம்!

இதைத் தொடர்ந்து தாய்லாந்தின் (முன்னாள்) பிரதமர் கூட்டுசேரா மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை.

ஏற்கெனவே குண்டு வீச்சு சம்பவம் ஒன்று நடந்து, அதில் மயிரிழையில் தப்பியிருக்கிறார் பிரதமர். புத்த மதத்தவர் அதிகமாக வசிக்கும் தாய்லாந்தில், ஆட்சியைக் கைப்பற்றியுள்ள ராணுவத் தளபதி சோந்தி ஒரு முஸ்லிம்.

நியூயார்க்கில் இருந்துகொண்டே தாய்லாந்தில் அவசர நிலையைப் பிரகடனம் செய்தார் பிரதமர்; பலவில்லை.

ராணுவத்துக்கு மன்னரின் பலமான ஆதரவு இருந்தது தான் மிகவும் முக்கிய விஷயம்.

தாக்ஸின் ஒரு பிரபல தகவல் தொழில்நுட்ப பிசினஸ்மேன்; அரசியலில் நுழைந்த பிறகு மூன்றுமுறை பொதுத் தேர்தல்களை வென்றவர்.

தாய்லாந்தில் மன்னருக்கு மிக மரியாதை உண்டு. சட்டப்படி அவருக்கு அதிகாரங்கள் இல்லையென்றாலும் அவர் பேச்சுக்கு மக்கள் கட்டுப்படுகிறார்கள். தங்களுக்கு மன்னரின் ஆசி உண்டு என்பதே ராணுவத்துக்குப் பெரும் பலம். ஆட்சி கைக்கு வந்த மறுகணமே ராணுவத் தலைவர்கள் மன்னரின் படத்துக்கெதிராக வணங்கியிருக்கிறார்கள்.

அரசர் தங்கள் ஆட்சிக்கு சம்மதம் தெரிவித்த கடிதத்தையும் படித்துக் காட்டியுள்ளனர்.

இனியும் தமது போராட்டம் எடுபடாது என்பதைத் தெரிந்துகொண்ட தாக்ஸின், லண்டனில் இருந்து கொண்டே "இந்த ஓய்வு எனக்குத் தேவைப்பட்ட ஒன்றுதான்" என்று அறிவித்திருக்கிறார்.

ஆனால் அவருக்கு ஓய்வு கிடைக்காது என்றே தோன்றுகிறது. ஆட்சியில் இருந்த போது அவர் எடுத்த சில முடிவுகளில் ஊழல் விளையாடியிருக்கிறது என்று


அறிவித்துள்ள ராணுவம் அதை விசாரணைக்கு உட்படுத்தப் போவதாக அறிவித்திருக்கிறது.

முன்னாள் பிரதமருக்கு ஆதரவாக இருந்த சில அமைச்சர்கள், இப்போது காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். காவல் துறையில் பல மாறுதல்கள் நடந்து வருகின்றன.

'அரசியல் கூட்டங்கள் கூடாது. அரசுக்கெதிரான ஒளிபரப்புகள் கூடாது' என்றெல்லாம் ராணுவம் கெடுபிடி செய்ய, உலகெங்கும் மனித உரிமைக் கழகங்கள் எதிர்ப்பு தெரிவிக்கத் தொடங்கியுள்ளன. ஜனநாயகம் அழிக்கப்படுவது குறித்து ஆஸ்திரேலியா கவலைப்பட்டிருக்கிறது. ''ஜனநாயக முறைப்படி தாய்லாந்து மக்களே தங்கள் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டும்'' என்றதோடு ஒதுங்கிக் கொண்டுள்ளது அமெரிக்கா.

இன்னும் சில நாட்களில் தாற்காலிகப் பிரதமர் நியமிக்கப்படுவார் என்கிறார் ராணுவத் தளபதி சோந்தி.

சுபசாய் பனிட்ச்பக்டி பிரதமராகலாம் என்கிறார்கள். அவர் ஐ.நா. வணிக முன்னேற்ற மாநாட்டின் தலைமைப் பதவியை ஏற்றவர். மத்திய வங்கியின் தலைவராக உள்ள பிரியதோம் தேவகுளாவுக்கும் இந்த வாய்ப்பு இருக்கிறதாம். இதற்கு நடுவே (முஷாரஃப் பாணியில்) சோந்தியே நாட்டின் தலைமையை ஏற்றுக்கொண்டாலும் வியப்பதற்கில்லை. ●



● தக்ஷின்

● ஜப்பான் பிரதமர் ஜுனிச்ரோ

பேரரசு

விஜயகாந்த் தே.மு.தி.க.வைத் தொடங்கறதுக்கு முன்னாடி பூஜை போட்ட படம். ஜெயிச்சு சட்டமன்றத்துக்கும் போயிட்டார். படம் இப்பத்தான் வந்திருக்கு. தமிழ்நாட்டுல படம் எடுக்கறதைவிட கட்சி ஆரம்பிக்கிறது ரொம்ப ஈஸின்னு இதுல இருந்து தெரியுது. சரி விடுங்க, நாம கதைக்கு வருவோம்.

நீதிபதி ஒருத்தர் கடத்தப்பட்டு, கொலை செய்யப்பட்டார். அதைத் துப்பறிய வர்ற சி.பி.ஐ. அதிகாரிக்குத் தண்ணி காட்டி



மூணு போலீஸ் அதிகாரிகளைக் கொல்றான் ஒருத்தன். அவன் உருவத்துல தன்னைப் போலவே இருக்கறது தெரிஞ்சு சி.பி.ஐ. அதிகாரி 'ஷாக்' ஆகறார். அவனோட பின்னணியை ஆராயறதும் மேற்கொண்டு கொலை நடக்காம தடுக்கப் போராடறதும்தான் கதை.

விஜயகாந்த் படம்ன்னாலே திரை முழுக்க அவர்தான் இருப்பார். மத்தவங்க வந்து போவாங்க. ஆனா இந்தப் படத்துல ஆனந்தராஜ், பிரகாஷ்ராஜ், பாண்டியராஜன், காமெடி டைம் சிட்டிபாபுன்னு எல்லோருக்கும் சமமான வாய்ப்பு. அவங்களும் நல்லா பயன்படுத்தி 'ஸ்கோர்' பண்ணி இருக்காங்க. ஆனந்தராஜ் நடிப்பைப் பார்க்கறப்ப, இவரை ஏன் தமிழ்த் திரையுலகம் சரியாப் பயன்படுத்தாம இருக்குன்னு தோணுது. பிரகாஷ்ராஜ் அறிமுகக் காட்சியில வாங்கற கைத்தட்டலைக் கடைசி வரைக்கும் தக்க வெச்சுக்கறார்.

ஆனா பரிதாபத்துக்குரிய ஒருத்தர் நாயகி தாமினி. இவரைவிட முத்துக்காளைக்குப் படத்துல அதிகமான சீன்ஸ் இருக்கு. வேகமான திரைக்கதையில ஃபிளாஷ்பேக் மட்டும் அரதப் பழசு; திருஷ்டிப் பூசணிக்காய். பழிவாங்கலைத் தவிர்த்து வேற மாதிரி யோசிச்சு இருக்கலாம். பாடல்கள் ரொம்பவும் குறைவு. அதுவும் சொல்லிக்கற மாதிரி இல்ல.

எங்கே வசனங்கள் எல்லாம் கிலோமீட்டர் கணக்குல இருக்குமோன்னு பயந்துட்டே போனேன். நல்லவேளை 'நறுக்' 'சுருக்'கா இருக்கு. அதுக்காக ஒரு ஷொட்டு! பேரரசு 'லேட்டா' வந்தாலும் 'நீட்டா' வந்திருக்கார். ●

அரசியல் கலக்காத அயோத்தி யாத்திரை!

மூன்னூற்று ஐம்பது பக்தர்கள், சென்னையிலிருந்து புறப்பட்டு பத்தொன்பது நாட்களில் 8500 கிலோமீட்டர் தூரம், ரயில்களிலும், பஸ்களிலும், ஜீப்களிலும் பயணம் செய்துள்ளார்கள். எட்டு இந்திய மாநிலங்கள் மற்றும் நேபாளத்தில் உள்ள ராமாயணம் சம்பந்தப்பட்ட பல்வேறு இடங்களுக்கும் சென்று வந்திருக்கிறார்கள். ஸ்ரீ ராம அனுயாத்திரை என்கிற இந்தப் புனிதப் பயணத்தில் இடம் பெற்றவர்களின் சராசரி வயது அறுபது! அவர்களில் எண்பத்து எட்டு வயது முதியவரும் ஒருவர்!

அது என்ன ஸ்ரீராம அனுயாத்ரா?

"அனுயாத்திரை என்றால் (ஸ்ரீ ராமரை) பின்பற்றிச் செல்லும் யாத்திரை என்று அர்த்தம்" என்கிறார், இந்தப் புனித யாத்திரைத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கும் ஆன்மிகப் பேருரையாளர் வேளுக்குடி கிருஷ்ணன்.

"ஸ்ரீராமர் தமது வாழ்நாளில் இரண்டு முறை நீண்ட யாத்திரைகளை மேற்கொண்டிருக்கிறார். முதலாவது தமது பதினைந்தாவது வயதில், விஸ்வாமித்திரரின் யாகத்துக்கு இடையூறு செய்த அரக்கர்களை அழிப்பதற்காகச் சென்ற பதினைந்து நாள் யாத்திரை. அடுத்ததாக, இருபத்தைந்து வயதில் மேற்கொண்ட அக்ஞாதவாசம். கைகேயி கேட்ட வரத்தின்படி காட்டுக்குச் சென்ற பதி



* வேளுக்குடி கிருஷ்ணன்



* சித்ரகோட்டிலுள்ள ஹனுமன் கோயில்...

னான்கு ஆண்டுகளில், பாரத தேசத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் செல்கிறார். கடவுளின் அவதாரமான ஸ்ரீ ராமருக்கு, கைகேயியின் ஆணை ஒரு சாபமில்லை. இந்தப் பாரதத்தின் பல்வேறு பகுதிகளிலும் ராமன் பாதம் பட வேண்டும் என்பதற்கான புறக்காரணம். அவ்வளவுதான்!" என்று சொல்லும் வேளுக்குடி கிருஷ்ணன், ஸ்ரீராம அனுயாத்திரை அனுபவங்களை கல்கி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்:


"வால்மீகி ராமாயணத்தில் ஸ்ரீராமர், இந்தத் தேசத்தில் எங்கெல்லாம் சென்றிருக்கிறார் என்று கூறப்பட்டுள்ளது. அந்தக் குறிப்புகளின் அடிப்படையில் நாங்களும் ஸ்ரீராமர் சென்ற இடங்களில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்துச் சென்றோம்.

வால்மீகி முனிவரது ஆஸ்ரமம், ஸ்ரீராமர் பிறந்த அயோத்தி, சீதை தோன்றிய சீதாமரி, ஸ்ரீராமர், சீதையை மணந்த ஜனகபுரி, பரதன் அரசாட்சி நடத்திய நந்திகிராம், ஸ்ரீராமர் குகனைச் சந்தித்த ஸ்ரீங்கிவர்புர், ஸ்ரீராமரும், சீதையும் தங்கி இருந்த சித்ரகூடு, நாசிக பஞ்சவடி, கிஷ்கிந்தா (ஹம்பி) என்று மொத்தம் இருபத்து எட்டு இடங்களைத் தேர்ந்தெடுத்தோம். ராமாயணம் குறித்து பூகோள ரீதியிலும், தொல் பொருள் ஆய்வு ரீதியிலும் ஆராய்ந்து எழுதப்பட்ட புத்தகங்களை ஆழமாகப் படித்தோம். தற்கால சாலை வரைபடங்களை, பழைய குறிப்புகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தோம். சென்னையிலிருந்து புறப்பட்டு, அத்தனை இடங்களுக்கும் சென்று தரிசனம் செய்தோம். தங்குவதற்கும் சாப்பிடுவதற்கும் ஆங்காங்கே சத்திரங்களிலும், கோயில்களிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பஸ் செல்ல இயலாத இடங்களுக்குச் செல்ல 35 ஜீப்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

ராமாயண காலத்தில் இருந்த பல இடங்கள் இன்னமும் இருக்கின்றன. ஸ்ரீராமர், கோசல நாட்டை இரண்டாகப் பிரித்து, அயோத்திக்கு வடக்கில் அமைந்த பகுதியினை லவனுக்கும், தெற்காக அமைந்த பகுதியினைக் குசனுக்கும் அளித்தார். குசன் ஆண்ட பகுதி இன்றைக்கும் குசாம்பி என்று அழைக்கப்படுகிறது.

ராமாயணத்தில் ஒரு காட்சி! நதிக் கரையில் ஓர் இடத்தில் ஸ்ரீராமர் நின்றுகொண்டிருக்கிறார். எங்கிருந்தோ 'ஓ' வென்று தண்ணீர் விழும் சப்தம் கேட்கிறது. அங்கிருக்கும் ரிஷி ஒருவரிடம் ஸ்ரீராமர் "என்ன அங்கே சப்தம்?" என்று கேட்கிறார். "அங்குதான் சரயு நதியும், கங்கையும் சங்கமமாகின்றன என்று ரிஷி பதில் சொல்கிறார். இன்றும் சரயுவும், கங்கையும் சங்கமிக்கும் இடத்துக்குப் போனால், அதேமாதிரி தண்ணீரின் சப்தம் கேட்கிறது. ஆனால் ஒரே ஒரு வித்தியாசம். அந்தச் சங்கமம், பூகோள ரீதியில் சுமார் நூறு கிலோமீட்டர் தூரம் தள்ளிப் போயிருக்கிறது.

கங்கைக் கரையில் ஸ்ரீங்கிவ்புர் என்ற இடத்தில் ஸ்ரீராமரை குகன் சந்தித்த இடத்தில், படகுகள் சிலவற்றை ஏற்பாடு செய்து கொண்டு கங்கையில் கொஞ்ச தூரம் பிரயாணம் செய்தோம். 'இதுபோல்தானே ஸ்ரீராமனும் மற்றவர்களும் குகனுடைய படகில் பயணம் செய்திருப்பார்கள்...' என்ற எண்ணம் மெய் சிலிர்க்க வைத்தது.



● சுக்ரீவன் குகையில் ராம பாதம்

பீகார் மாநிலத்தில் தர்பங்கா மாவட்டத்தில் இருக்கிறது சீதா மரி. இங்கிருந்துதான் ஜனகரது மிதிலாபுரி தேசம் ஆரம்பமானது என்றார்கள். இதுதான் சீதை தோன்றிய ஊர். நாங்கள் சீதா மரியிலிருந்து திரும்பிய தினம், அந்த ஊருக்குப் போகிற பிரதான பாலம் உடைந்து, அடுத்த பன்னிரண்டு நாட்களுக்குப் போக்குவரத்து தடைபட்டுப் போனது.

நாங்கள் சீதாமரிக்குப் போவது ஒருநாள் தாமதமாகி இருந்தாலும், எங்கள் யாத்திரை பெரும் சிக்கலுக்கு உள்ளாகி இருக்கும்.

சீதா ராம கல்யாணம் நடந்த ஜனகபுரி, தற்போது நேபாளத்தில் உள்ளது. எங்களுடன், டெல்லியிலிருந்து ஒரு பஜனை குழுவினரையும் அழைத்துச் சென்று, ஜனகபுரியில் வெகு விமரிசையாக சீதா ராம கல்யாணத்தை நடத்தி வைத்து அன்று அத்தனை பேருக்கும் கல்யாண விருந்து வைத்தோம். ஊரே கூடி, சீதா ராம கல்யாணத்தைப் பார்த்து ரசித்தது.

நேபாளத்துக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் நாங்கள் சென்றதற்கு முந்தைய தினம் பெரும் கலவரம் நடந்திருந்தாலும், நாங்கள் போனபோது அமைதி நிலவியது.



• ராம்டெக் கோயில்

யாத்திரையில் ஒன்பது புண்ணிய நதிகளில் நீராடியது எங்களுக்குக் கிடைத்த பெரும் பாக்கியம். எங்கள் குழுவில் சுமார் நூறு பேருக்கு மேல் சர்க்கரை நோய், பிளட் பிரஷர் உள்ளவர்களாக இருந்தபோதிலும், நாங்கள் சென்ற பல இடங்களில் மருத்துவ வசதி இல்லாதிருந்தபோதிலும், யாருக்கும் எந்த உடல்நலக் குறைவும் ஏற்படவில்லை. அதற்குக் காரணம் எங்கள் கையில் சர்வ ரோக நிவாரணியான ஒரு மருந்து இருந்தது. அதன் பெயர் 'ஸ்ரீ ராம நாமம்'! நாலு இடங்களில், மலை ஏறி, தரிசனம் செய்ய வேண்டி இருந்தது. சென்னையிலிருந்து புறப்படும்போது, சுமார் 250 பேர்கள், 'எங்களால் மலை ஏற முடியாது; நாங்கள், கீழே இருந்தபடியே தரிசனம் செய்து கொள்கிறோம்' என்று பின்வாங்கினார்கள் என்றாலும், அங்கே சென்றதும், எட்டே பேர்கள் தவிர மற்றவர்கள் எல்லாம், மலை ஏறி தரிசனம் செய்தது கடவுள் அருள் தான்.

தமிழ்நாட்டில், திருக்குருங்குடி, திருப்புல்லணி ஆகிய இடங்களில் தரிசனம் செய்துவிட்டு, இறுதியாக ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தோம். யாத்திரைக் குழுவினருடன், ஊர் மக்களும் சேர்ந்து பஜனை பாடி, வீதி ஊர்வலம் வந்து, கடைசியில் கோயிலில் வெகு விமரிசையாக ஸ்ரீ ராம பட்டாபிஷேகத்தை நடத்தி வைத்தோம். ஸ்ரீரங்கம் ஜீயர் ஸ்வாமிகள் அருளாசி உரை நிகழ்த்தினார்'' என்று சொன்ன வேளுக்குடி கிருஷ்ணன் மேலும் இரு அதிசய தகவல்களைத் தந்தார்.

1. யாத்திரையில் எடுத்துச் செல்லப்பட்ட சுமார் 1550 லக்கேஜ்களுள் ஒன்று கூட தொலையவில்லை.

2. பத்தொன்பது நாள் யாத்திரையில் பங்கேற்ற அனைவரும் ஒரு நாள் கூட டி.வி. பார்க்கவில்லை!

திரையிசைத் தெம்மாங்கு தொடர்.........................

ஏப்பம் விடும் சினிமா!

குழந்தையாகி என்னைத் தேனென்றும் அமுதமென்றும், செல்வம் மிக்க பூமான் என்றும் கொஞ்சிக் கொஞ்சி வாய் நிறைய அழைத்தாள் அன்னை. அன்பொழுக அழைத்த அவ்வாய்க்குச் சிறப்பு செய்து மகிழாமல், அரிசியையா நான் போட வேண்டும்? இறந்த தாய்க்கு ஈமச்சடங்கு செய்து விட்டு பட்டினத்தார் கதறிய கதறல் இது :

அரிசியோ நானிடுவேன்
ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டு பார்த்து
மகிழாமல் - உருகியுள்ள
தேனே! அமுதமே!
செல்வத் திரவியப் பூ
மானே என்றழைத்த
வாய்க்கு

- பட்டினத்தாருக்கு மட்டுமல்ல. பலருக்கும் தாய் மீதுள்ள பற்றை அறுத்து விட முடியாது. ஏனெனில், அம்மா என்பது சொல்லன்று. முன்னே நிற்கும் உலக உயிர்கள் அனைத்துக்குமான மூல மந்திரம். உள்ளே சுமந்து, உள்ளத்திலும் சுமந்து இப்பேரண்டத்தை நமக்குக் காட்டிய தாய் போலொரு தெய்வம் இல்லையென்று போற்றி எழுதப்பட்ட பல பாடல்களை நாம் கேட்டிருக்கிறோம். அவற்றில் நெஞ்சை விட்டு அகலாமல் நீடித்து வாழும் பாடல்கள் ஒரு சில.

அன்னையைப் போலொரு
தெய்வமில்லை - அவள்
அடிதொழ மறப்பவர்
மனிதரில்லை

- கவி. கா.மு. ஷெரீப் எழுதிய இப்பாடலை கேட்குந்தோறும் கண்கள் மெள்ளக் கசிவதை நிறுத்த முடியவில்லை. பாகவதர் காலந்தொட்டு திரைப்பாடலில் அம்மாவின் சிறப்புகள் அனைத்தும் புகழ்ந்தோதப்பட்டுள்ளன. ஆனாலும், ஷெரீப்பின் இப்பாடல் அவை யாவற்றையும்விட தனித்த சிறப்புடையது.

நாளெல்லாம் பட்டினியாய்
இருந்திடுவாள் - ஒரு
நாழிகை நம்பசி
பொறுக்க மாட்டாள்.

திரைப்பாடலில் எனக்குப் பிடித்த அம்சங்களில் பிரதானமான அம்சமென்றால் அதன் நேரடித் தன்மை.

திருவாரூர் அருகே உள்ள அபிவிருத்தீஸ்வரத்தில் 1914-ல் பிறந்த ஷெரீப், பாடலாசிரியர் ஆவதற்கு முன்பே பத்திரிகையாசிரியராக அறியப்பட்டவர். 'தமிழ் முழக்கம்', 'சாட்டை', 'ஒளி' போன்ற பத்திரிகைகளில் அவருடைய எழுத்துகள் வெளிவந்திருக்கின்றன. பத்திரிகைப் பணியுடன் தொடர்பு கொண்ட படைப்பாளி இன்ன பிற துறைக்குப் போகும்போது அவரிடம் கூடுதலான சமூக நேர்மை உள்ளதைப் பலரும் வியந்திருக்கிறார்கள். அவ்வியப்பு பத்திரிகைகளாலும் வாசக மனோநிலையாலும் கட்டமைக்கப்படுபவை. எழுத்தாளர் ஜெயகாந்தன் சொல்வதைப் போல, ஷெரீப், சினிமா உலகச் சீரழிவுகளில் சிக்கிக் கொள்ளாத உயர் பண்பு கொண்டவர்.

பாடல் துறையைத் தவிர்த்தும் ஒரு படைப்பாளி இயங்கும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றால்தான் ஷெரீப் மாதிரியான தனித்துவ அடையாளத்தைப் பெற முடியும். அரசியல், பத்திரிகை, இலக்கியம் மூன்றிலும் கொஞ்சமேனும் அறிமுகம் உள்ளவரால் மட்டுமே பாடல் துறையில் சோபிக்க இயலுமென்பது வெறும் பேச்சன்று விளைந்த உண்மைகளின் வரலாற்



றுப் பதிவுகள்.

'கீரையோ கீரையென்று விற்பது மாதிரி என் பாட்டைத் தூக்கிக் கொண்டு அலைய நான் தயாரில்லை. அதுக்கு இன்னிக்கு நிறைய பேர் வந்துட்டாங்க. கவிஞன் என்பவன் தாய் மாதிரி. பத்தியம் இருக்கணும். ரசிகனை அவன் புள்ள மாதிரி, நேசிச்சு எதைக் கொடுக்கணும், எதைக் கொடுக்க கூடாதுன்னு ஒரு பொறுப்போட எழுதணும். 1986-ல் பேசும்படம் இதழுக்கு (நவம்பர்) அளித்த பேட்டியில் ஷெரீப் குறிப்பிட்டிருக்கிறார்.

சினிமாவை சர்வ சாதாரணமாகக் கையாள முடியாது. சகல எச்சரிக்கையோடும் வழுவாத வைராக்கியத்தோடும் நடந்து கொள்ள இயலாதவர்களை அது, சாப்பிட்டு ஏப்பம் விட்டிருக்கிறது. எனவேதான், ஜெயகாந்தனின் சொற்கள் ஷெரீப்பின் எழுத்துலக சாதனைக்கான பட்டயமாகத் தோன்றுகிறது.



ஐம்பதுகளின் ஆரம்பம், திரையுலகத்தின் சிறப்புக்குரிய தருணம். திராவிடச் சார்புடைய படைப்பாளிகளும் திரள் திரளாக வெளிவந்து கொண்டிருந்த படங்களும் அதற்குச் சாட்சிகளாக அமைகின்றன. மந்திரி குமாரி, பொன்முடி போன்ற படங்களுக்கு ஓரிரு பாடல்களை எழுதத் தொடங்கிய ஷெரீப் பின்னர் முழுப் படங்களுக்கும் எழுதும் வாய்ப்பைப் பெற்றார். தெளிந்த தமிழ், திவ்வியமான சொல்லாட்சி ஆகியன பிறரிடமிருந்து ஷெரீப்பைத் தனித்துக் காட்டின. 'நான் பெற்ற செல்வம்' படத்தில்

வாழ்ந்தாலும் ஏசும்
தாழ்ந்தாலும் ஏசும்
வையகம் இதுதானடா
வையகம் இது தானடா

பொட்டில் பொறித்தாற் போல் மிகச் சுபலமாக வாழ்வியல் எதார்த்தங்களை வடித்திருப்பார். முழுப் பாடலின் தொனியையும் மாத்திரை வடிவில் பல்லவியாகச் சொல்லி விட்டாலும் விளக்கமாகச் சரணத்தில் எழுதுவார்.

வீழ்ந்தாரைக் கண்டால்
வாய்விட்டுச் சிரிக்கும்
வாழ்ந்தாரைக் கண்டால்
மனதுக்குள் வெறுக்கும்.

வாழ்த்திவிட்டு வயிற்றெரிச்சல் படும் மனமுடையோரை இவ்வளவு நேர்த்தியாகத் திரைப்பாடலில் பொட்டலமாகக் கட்டித்தர



சிலரால்தான் முடியும். அவர்களில் முக்கியமான ஒருவர் ஷெரீப். இவர் ம.பொ.சி.யின் தமிழரசுக் கழகத்தில் பொதுச் செயலாளராகவும் இருந்திருக்கிறார். பொறுப்பு வகிக்கத் தக்க பண்பை கொண்ட ஷெரீப் யாருக்கும் கட்டுப்பட்டு செயல்பட எண்ணாதவர். வாய்ப்புகளை விரும்பிக் கேட்டு வாங்கும் வியாபாரத் தனம் அறவே அறியாதவர்.

கலைஞர் மு.கருணாநிதியை வசனத் துறைக்கு அறிமுகம் செய்த பெருமை ஷெரீப்புக்கு உண்டென்ற போதிலும் அதை விசேஷப் பெருமையாகக் கருதிக் கொள்ளாதவர். ஒழுக்கம் பெண்மை, தமிழ்க் கலாசாரம் போன்றவற்றை திரைப் பாடல்கள் பேணுவதில்லை என்னும் வருத்தம் அவருக்கிருந்திருக்கிறது. 'நான் பெற்ற செல்வம்' திரைப்படத்தில் உள்ள மற்றுமொரு பாடல் :

நான் பெற்ற செல்வம்
நலமான செல்வம்
தேன்மொழி பேசும்
சிங்காரச் செல்வம் - தான் பெறுகிற செல்வத்திலும் நலமான செல்வத்தைக் கேட்கிற ஒருவருக்கு, திரையுலகத் தொடர்பு எத்தகைய படிப்பினைகளை வழங்கியிருக்கும் என யோசிக்க வேண்டும்! அப்பாடலில் உள்ள ஒரு வரி என்னை எப்போதும் கலைத்துப் போட்டு விடும். வர்ணனை, கற்பனை உவமை, எல்லாவற்றையும் கடந்து ஒருவித நெருக்கத்தை உண்டுபண்ணும் அவ்வரி :

எட்ட இருந்தே
நினைத்தாலும்
இனிக்கும் மணக்கும்
உன் உருவம்

இலங்கை நகரத்திலே இன்பவள்ளி நீயிருந்தால், இந்துமா சமுத்திரத்தை இங்கிருந்தே தாண்டிடுவேன் என சந்திரபாபு பாடுவதில் உள்ள குறும்பை விட ஷெரீப் பின் வரிகளில் உள்ள கவித்துவம் அலாதியான இன்பம் பயப்பது. முதலில் நாடகங்களுக்கும், பிறகு கொலம்பியா கம்பெனி, ரிக்கார்டுகளுக்கும் பாடல் எழுதி வந்த ஷெரீப் பின்னாளில் சில படங்களுக்குக் கதை வசனமும் எழுதியிருக்கிறார். உத்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதுவது தனித்திறமை. உத்திக்காக கவிதையைச் சிதைத்துவிடாத ஆற்றலுள்ளோரே உத்தியிலும் கவிதையிலும் சிறக்க முடியும். குறிப்பாக,

வானில் முழு மதியைக்
கண்டேன்
வனத்தில் ஒரு பெண்ணைக்
கண்டேன்.
வானமது மதியைப் போல
மங்கையவள்
வதனம் கண்டேன் - 'சிவகவி' படத்தில் வரும் இப்பாடலில் ஷெரீப் கையாண்ட உத்தி, பாடலுக்கு மட்டுமல்ல காட்சிக்கும் அழகூட்டுவது. 'நிலவு போல முகமிருந்து' என்பதுதான் சொல்ல வருவது. ஆனால், அதை வேறு ஒரு புதுவடிவில் எழுதியிருப்பார். இரண்டு விளக்குகளை ஏற்றி அதிலிருந்து மூன்றாவது விளக்கை ஏற்றுவது போல முதல் வரியிலிருந்து ஒரு திரியையும் இரண்டாவது வரியிலிருந்து மறு திரியையும் எடுத்து மூன்றாவது திரியாக்குகிறார்.

தூக்கம் கண்ணைச்
சுத்தக் கண்டேன்
தூங்கும்போது
கனவு கண்டேன்
கனவிலேயும் அந்த பெண்ணே
கண்ணெதிரே
நிற்கக் கண்டேன்.

இவருடைய வரிகளைக் கண்ணுற்றுச் சிலாகிக்கும் சமயந்தோறும் எனக்கு போர் ஹேஹெயின் இவ்வரிகள் நினைவைச்



கம்பீரமாகிறார் நமீதா

'மின்னலடிக்குதே' படத்தில் பெரும் பணக்காரர்களில் ஒருவராக நடிக்கிறார் நமீதா. இதில் தன் நடை, உடை, பாவனைகள் அனைத்தையும் மிக அழகாக, மட்டுமில்லாது கம்பீரமாகவும் மாற்றியிருக்கிறாராம். 'மின்னலடிக்குதே'க்குப் பிறகு, திரையுலகில் தன்னைப் பற்றிய அனுமானங்கள் மாறும் என்கிறார் நமீதா.

சுழற்றும்.

"சதுரங்கக் காய்களுக்கு தாங்கள் ஒரு சதுரங்க விளையாட்டு வீரனால் வழிகாட்டப்படுகிறோம் என்று தெரியாது. விளையாட்டு வீரனுக்கோ தான் ஒரு கடவுளால் வழி நடத்தப்படுகிறோம் என்று தெரியாது. கடவுளுக்கோ தான் மற்ற எந்தக் கடவுளால் வழிநடத்திச் செல்லப்படுகிறோம் என்று தெரியாது."

ஷெரீப்பின் வெகுஜனப் புகழுக்கு எத்தனையோ பாடல்கள் காரணமாகி இருக்கின்றன. அவற்றில் எல்லோரும் ஒருமித்துக் கூறும் பாடல் 'முதலாளி' திரைப்படத்திலுள்ள 'ஏரிக் கரையின் மேலே போறவளே பெண் மயிலே'' டி.எம்.எஸ். குரலில் ஒலிக்கும் நாடக பாவனைக்கு நல்ல அத்தாட்சி

'இன்றைய சமுதாயம்' என்னும் கவிதை நூலும் 'மச்சக்கன்னி', 'பீஷ்மர்' ஆகிய குறுங்காப்பியங்களும் இவருடைய திரைக் கதை தவிர்த்த எழுத்து முகவரிகள். தமது இறுதி நாட்களில் 'சீறாப் புராணச்' சொற்பொழிவிலும் 'நபியே எங்கள் நாயகமே' (பாமாலை) நூலாக்கத்திலும் ஆர்வத்தோடு ஈடுபட்டிருக்கிறார். 'தமிழர் கூட்டம்' எனுந் தலைப்பில்

மாங்கனியும் தீம்பலாவும்
மதுவை நல்கும்
மாமலர்நற் சோலையுடன்
வயல்கள் சூழ
வீங்கு நீர் கரைபுரண்டு
மகிழ்ந்து பாடி
விம்முகின்ற களிப்புடனே

அமுதம் பாய்ச்சி - என தமிழர் கூட்டத்தை வியக்கும் ஷெரீப், இயற்கையின் ஊடே காணும் எழில் யாவையும் எடுத்து வர எத்தனித்தவர். பணம் பந்தியிலே, குணம் குப்பையிலே என்றெழுதினாலும் ஒன்று சேர்ந்த அன்பு மாறுமா? என்றெழுதினாலும் தீர்க்கமான பதிவுகள் இவருடையவை.

கேவி. மகாதேவனுக்கு முதல் வெற்றிப் படமாக அமைந்த 'டவுன் பஸ்' பாடல் முழுக்க ஷெரீப்பால் எழுதப்பட்டவை. அதில் இடம் பெற்றுள்ள,

சிட்டுக்குருவி சிட்டுக்குருவி
சேதி தெரியுமா - எனை
விட்டுப் பிரிஞ்சு போன கணவன்
வீடு திரும்பல - எனும் பாடல், அகத்துறை அலங்காரம் பொருந்தியது. அதையே ஷெரீப்,

"தெருவில் வந்து



நின்னு நின்னு காலும் கடுக்குது
வழியை வழியைப்
பாத்துபாத்துக் கண்ணும் நோகுது'' - என்கிறார். சிட்டுக்குருவி பாடலைப் போலவே 'மாங்கல்யம்' திரைப்படத்தில் இடம் பெற்றுள்ள 'பொன்னான வாழ்வே' பாடலும் அருமை. அன்பு செலுத்திய கணவன் அகன்று போகும் நிலையை விவரிக்கும் இப்பாடலும், 'சிட்டுக்குருவி' பாடலும் ஒரே கோப்பையில் இரண்டு பானங்களாக ஊற்றப்பட்டுள்ளன. வேலை நிமித்தம் பிரிந்த சோகம் முதலில் உள்ளது. வேண்டாமென ஒதுக்கித் தள்ளிப் பிரிந்து போகிற சோகம் இரண்டாவது. இரண்டிலும் ஷெரீப்புக்கே உரிய பூரண சித்திர வெளிப்பாடு தெரியவரும்.

பண்போடு முன்னாளில்
அன்பாக வாழ்ந்தாரே
வீணான பாலாய்
விரும்பாத பூவாய்
இன்றென்னை விடுத்தாரே
என்னன்பை மறந்தாரே.

ஏறக்குறைய நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களை எழுதியுள்ள ஷெரீப். 1972-ல் கலைமாமணி விருது பெற்றிருக்கிறார். விருதுகள், புகழ்ச்சிகள் எதற்கும் தம்மை, தமது எழுத்தை ஒப்புக் கொடுக்காமல் தனிப்பெரும் சக்தியாக உருவெடுத்த அவர் உருவம் அழியாப் பாடல்களின் ஊற்றுக் கண்ணில் அமர்ந்திருக்கிறது.

(தொடரும்)



"கோர்ட்ல நம்ம தலைவர், மானத்தை வாங்கிட்டாராமே..."

"ஆமாமாம்... 'நான் சொல்வதெல்லாம் உண்மை, உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை'ன்னு சொல்லும்போது இடையில நாலஞ்சு தடவை சிரிச்சுட்டாரு...!"

- குட்டி பிரசன்னா

தலைவர் டைம்!



"அந்த மெகா சீரியல் டைரக்டர் தன்னோட பிஸ்னஸை தெய்வமா மதிக்கிறார்..."

"எப்படிச் சொறீங்க?"

"தன்னோட மூணு பிள்ளைகளுக்கும் 'அழுகை, துன்பம், துயரம்'னு பேர் வச்சுருக்காரே!"

- தஞ்சை அனார்கலி

"தலைவரே! நேத்து டீ.வி.யில உங்க 'அறிக்கையை அரை மணி நேரம் ஒளிபரப்பினாங்களே... அப்புறம் ஏன் கோபமா இருக்கீங்க?"

"'காமெடி டைம்'னு அதுக்கு தலைப்பு குடுத்திருந்தாங்களே...!"

- குட்டி பிரசன்னா



"அமைச்சரே! இவரது புலமையை மெச்சுகிறேன். இவருக்குப் பரிசு கொடுத்து சகல மரியாதையுடன் அனுப்பி வையுங்கள்!"

"மன்னா! இவர் கவிஞர் அல்லர். நமது ஒற்றர் படைத் தலைவர். இவ்வளவு நேரமும் நமது பகையரசனின் படை வலிமையைத் தான் அப்படி வர்ணித்துச் சொன்னான்!"

- ஆர்.பிருந்தா





"என்ன இருந்தாலும் டீ.வி.காரங்க இப்படிப் பண்ணக் கூடாது!"

"எப்படி?"

"சிறப்பு விருந்தினர் பகுதியில் நாளை டீ.வி.யில் கேடி கபாலி வர்றானாம்!"

- வே.முருகேசன்

"வீண் புகழும் வெற்றுப் பெருமிதமும் பிடிக்காத என் மன்னா...!"

"யாரங்கே...! இந்தாளை உடனடியாகச் சிறையில் தள்ளுங்கள்!"

- சீர்காழி ரேவதி



உலகை மயக்கும்

அருணா. செந்தில்குமரன்

நெற்றிச்சுட்டி முதல் கால் மெட்டி வரை அனைத்து நகைகளையும் ஆறாயிரம் ரூபாய்க்குள் தருகிறோம் என்கிறார், தாரா ஃபோர்மிங் ஜுவல்லரி உரிமையாளர் தாரா வினோத்.

எப்படி சாத்தியம்?

அதுதான் ஃபோர்மிங்கின் சாதனை! சென்னை மயிலாப்பூர் கச்சேரி ரோட்டில் அமைந்துள்ள எங்களது 'தாரா ஜுவல்லரி' இந்த ஆண்டு இறுதியில் தனது ஏழாவது ஆண்டைப் பூர்த்தி செய்கிறது.

முதலில் ஃபோர்மிங் என்கிற புதுமை ஆபரணங்கள் காப்பர் + சில்வர் கலவையால் வடிவமைக்கப்பட்டு 24 காரட் தங்க லேயர்களால் மேல் பூச்சு பூசப்படுகின்றன.

எண்ணற்ற டிசைன்களும், ஃபினிஷிங் திறனும் கொண்டு



• தாரா வினோத்

விளங்குகிற இந்த ஃபோர்மிங் நகைகள் தான் இன்றைய அப்பர் மிடில் கிளாஸ், ஹைகிளாஸ் பெண்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

சாதாரண கவரிங் நகைகள் தங்கத்திலிருந்து வித்தியாசப்பட்டு இருக்கும். ஆனால் ஃபோர்மிங் நகைகளோ தங்கத்தைப் போலவே காட்சியளிக்கும். மிக முக்கியமாக உடலில் அலர்ஜியை ஏற்படுத்தாது.

நெக்லஸ், பிரேஸ்லெட், மாட்டல், தோடு, கொலுசு, ஒட்டியாணம், புடவை கிளிப், ஹேர் கிளிப், மெட்டி என அனைத்து ஆபரணங்களையும் படைக்கிறோம்.

(நகைக் குவியல்களைக் காட்டுகிறார்)

பொதுவாக திருமணம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளுக்குப் போகும்போது தங்களது உடையைப் பற்றியும், நகையைப் பற்றியும் மற்றவர் விசாரிப்பதைப் பெண்கள் பெரிதும் விரும்புவார்கள். ஒரே நகையை (விலை உயர்வானதாக இருந்தால்கூட) தொடர்ந்து அணிந்து சென்றால், இந்த விசாரிப்புகள் குறைய, நகை பற்றிய சுவாரசியமும் குறையும்.

அந்த இடத்தினைப் பூர்த்தி செய்வதுதான், இந்த ஃபோர்மிங் நகைகளின் வெற்றி. ஒவ்வொரு முறையும், புதிது புதிதாகப் புடைவைகள் அணிந்து செல்வதைப் போல், புடைவை டிசைனுக்கேற்ப இந்த ஃபோர்மிங் நகைகளை அணிந்து செல்லலாம்.

புதிது புதிதாய் டிசைன்கள், புதிது

புதிதாய் விசாரிப்புகள்.

நெக்லஸ் என்றால் ஒன்றிரண்டு அல்ல... முந்நூறு வகையான நெக்லஸ்களை காண்பிப்போம்! தங்களின் எண்ணத்துக்கும், வண்ணத்துக்கும் ஏற்ற வகையில் தேர்வு செய்ய வேண்டியது வாடிக்கையாளர்களின் பொறுப்பு!

இதுதவிர, இப்போது நமது தென்னாட்டிலும் புகழ் பெற்றுவரும் குந்தன் ஜுவல்லரி எனப்படும் வடநாட்டுப் பாணி நகைகள், வைரத்தைப் போன்றே அமைக்கப்பெற்ற போல்கி நகைகள், பிளாட்டினம் போன்ற சர்க்கான் நகைகள் புடைவை டிசைன்களுக்கு ஏற்றவாறு அணியும் விக்டோரியா நகைகள் என்று பல்வேறு வகைகளையும் வைத்துள்ளோம்.

அறுபது வருடங்களாய் நகைத் தொழிலில் ஈடுபட்டு வரும் எங்களுக்கு வாடிக்கையாளர்களின் விருப்பம் கூடிக் கொண்டுப்போவதை ஒவ்வொரு நாளும் காணமுடிகிறது.

எழுநூறு ரூபாயிலிருந்து ஆறாயிரம் ரூபாய்க்குள் எல்லாவிதமான நகைகளையும் விற்பனை செய்கின்ற நாங்கள் மொத்த விற்பனை செய்வதால் மற்ற இடங்களைவிட இருபத்தைந்திலிருந்து முப்பது சதவீதம் குறைவான விலைக்குத் தருகிறோம்.

வி.ஐ.பி., வி.வி.ஐ.பி. வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ள எங்கள் நிறுவனத்துக்கு யு.எஸ். கனடா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் வாடிக்கையாளர்கள் இருக்கின்றனர்.

மத்திய தர வர்க்கத்துக்கு ஏற்ற வகையில், வாடிக்கையாளர் நலன் கருதி ஒரு வருட கியாரன்ட்டி உண்டு. வீட்டிலிருக்கும் பழைய பட்டுப் புடைவைகளுக்கு ஏற்ற விலை கொண்ட நகைகளையும் வழங்குகிறோம்.

மற்றொரு, குறிப்பிடத்தக்க அம்சம், ஒரு நபருக்கு ஒரு டிசைனில் நாங்கள் நகை அமைத்துக் கொடுத்துவிட்டால் அடுத்தவருக்கு அந்த டிசைனைத் தருவதில்லை.

இப்போது சென்னை, கோவை போன்ற பெருநகரங்களில் மையம் கொண்டுள்ள இந்த ஃபோர்மிங் புயல், வெகுவிரைவில் பட்டி தொட்டி வரை வீசி, வாடிக்கையாளர்களின் எண்ணங்களைச் சூறையாடுவதை நீங்கள் காணப்போவது உறுதி" என்று தீர்மானமாகச் சொல்கிறார் 'தாரா ஃபோர்மிங்' உரிமையாளர் தாரா விநோத்.

படங்கள் :
பொள்ளாச்சி சுந்தரம்

'ஃபோர்மிங் ஜுவல்லரி'



பட்டுக்கோட்டை பிரபாகர்

அநியாயம்!

ஆகாஷ் நேராகப் படுக்கையறைக்குள் நுழைந்தான். கட்டில் மேல் பெட்டி வைத்துத் திறந்து லுங்கியை எடுத்தான்.

கோபமாக அவன் எதிரில் வந்து நின்றாள் பூஜா.

"ஆகாஷ், விளையாடாதே! முதல்ல வெளில போ!"

"என்னடி அர்த்தமில்லாம பேசறே? சென்னைல எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு. வந்தேன். பொண்டாட்டி நீ இங்க இருக்கறப்போ நான் லாட்ஜ்ல போய்த் தங்கினா நல்லாவா இருக்கும்?"

அவளைப் பற்றி லட்சியமில்லாமல் பேண்ட்டைக் கழற்றி, லுங்கிக்கு மாறினான். பற்பசை, பிரஷ், டவல் எடுத்தான்.

"சோப் எடுத்துட்டு வர மறந்துட்டேன். பரவால்ல; உன் சோப்பையே யூஸ் பண்ணிக்கிறேன்."

"நோ!" என்று கத்தினாள்.

"என்னாச்சு? எதுக்கு இப்படி கத்தறே?"

"ஆகாஷ், உன் மனசுல என்ன இருக்கு?"

"இப்ப இந்த நிமிஷம் திவ்யமா குளிக்கணும்னு இருக்கு. ஹீட்டர் இருக்கில்ல பாத்ரூமில?"

"ஆகாஷ், இது என் வீடு!"

"விலைக்கு வாங்கிட்டியா?"

"என்னோட வாடகை வீடு."

"சரி. நான் பத்து நாள் தங்கப் போறேன். கணக்கு பண்ணி சொல்லு. வாடகை கொடுத்துடறேன்."

"எனக்குப் பிடிக்கலை!"


"ஏன்?"

"நீயே வேணாம்னு முடிவு செஞ்சாச்சு."

"நான் இன்னும் முடிவு செய்யலையே..."

"அப்படின்னா?"

"உனக்கு விவாகரத்து தர்றதா வேணாமான்னு நான் முடிவு பண்ற வரைக்கும்,





11

டூ!

நீ என் பொண்டாட்டி தான். உன்கிட்ட எனக்கு எல்லா உரிமையும் இருக்கு."

"நான் முடிவு செஞ்சுட்டேன். நீ என் புருஷன் இல்லை."

"பத்தாது டார்லிங்! சட்டம் சொல்லணும்!"

"சொல்லும்."

"சொல்லட்டும். இப்ப.. மாவு இருந்தா தோசை ஊத்தி ஹாட் பேக்ல வைக்கிறியா? தேங்கா சட்னி செஞ்சிடு. அஞ்சு நிமிஷத்துல குளிச்சுட்டு வந்துடறேன்."

குளியலறைக்குள் சென்று ஆகாஷ் கதவை மூடிக் கொண்டான்.

பூஜாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஹாலுக்கு வந்து செல் போனை எடுத்தாள். தன் அப்பாவின் எண்ணை அழைத்தாள்.

"அப்பா... பூஜா பேசறேன்."

"சொல்லும்மா. நல்லா இருக்கியா?"

"நல்லா இல்லைப்பா."

"என்னாச்சு பூஜா!"

"அந்த ராட்சசன் திடீர்னு வந்திருக்கான். பத்து நாள் இங்க என் வீட்ல தங்கப் போறானாம். திமிரா பேசறான். அதிகாரம் பண்றான்."

"அப்படியா? உன் புருஷன் தானேம்மா?"

"ஆமாம். விவாகரத்துக்கு அப்ளை பண்ணியிருக்கோம். இப்ப ஏன் இப்படி இம்சை கொடுக்கறான்?"

"என்னைக் கேட்டுக்கிட்டு நீ விவாகரத்துக்கு அப்ளை செஞ்சியாம்மா? அதே மாதிரி என்னைக் கேட்டுக்கிட்டா அவன் அங்க வந்திருக்கான்? இப்ப நான் என்ன செய்ய முடியும் சொல்லு!"

"எங்கேடோ கெட்டுப் போன்னு சொல்றீங்களா?"

"எக்கேடோ கெட்டுப் போறேன்னு நீதான் சொல்லிட்டுப் போனே.."

"அவனோட சேர்ந்து வாழச் சொல்லி நீங்க வற்புறுத்தினீங்க. அது கொடுமைப்பா. நரகம்ப்பா. முடியாதுப்பா. ப்ளீஸ்... புரிஞ்சுக்கங்க."

"சரி, இப்ப நான் என்ன செய்யணும்?"

"அவனை என் வீட்லேர்ந்து வெளில போகச் சொல்லணும்! ஒரு நிமிஷம்கூட அவன் இங்க இருக்கக் கூடாது!"

"நான் சொன்னா அவரு கேப்பாராம்மா?"

"கேக்கலாம்."

"எனக்கு நம்பிக்கை இல்லை."

"ஏன்ப்பா?"

"நான் பெத்த பொண்ணே என் பேச்சைக் கேக்காதுன்னா, யாரோ பெத்த பையன் எப்படி என் பேச்சைக் கேப்பாரு?"

"குத்திக் காட்றதுக்கு இதாப்பா நேரம்?"

"சரி... பேசிப் பார்க்கறேன். அவர்கிட்ட குடு."

மீண்டும் பூஜா படுக்கையறைக்குள் வந்தபோது, ஆகாஷ் இடுப்பில் ஈரத் துண்டுடன் அலங்காரக் கண்ணாடி முன்பு நின்று பூஜாவின் பாடி ஸ்பிரேயை எடுத்து பீய்ச்சிக் கொண்டிருந்தான்.

"இத பாரு, ஆகாஷ்! என் பொருள்கள் எதையும் நீ தொடறது எனக்குப் பிடிக்கலை! எங்கப்பா பேசறாரு; பேசு."

"பேசலாமே" என்று வாங்கிய ஆகாஷ் "ஹலோ மாமா! எப்படி இருக்கீங்க?" என்றான்.

"நல்லா இருக்கேன் மாப்ளே. வந்து... பூஜா வீட்டுக்கு நீங்க வந்திருக்கிறது அவளுக்குப் பிடிக்கலைங்கறப்போ.."

"எனக்குக் கூடதான் பிடிக்கலை. எது? உங்க பொண்ணோட பிடிவாதம்! மாமா, என் மூஞ்சில மீசை பிடிக்கலைன்னு சொன்னா, பிளாஸ்

டிக் சர்ஜரியா பண்ணிக்க முடியும்? வாழ்க்கைல முன்னேறணும்னு துடிக்கிறது தப்பா? பொண்டாட்டிங்கறவ ஒத்துழைக்கணுமா, வேணாமா? நான் என்ன தப்பு பண்ணச் சொன்னேனா? நடிக்கத்தானே சொன்னேன்? இவளை யாரு அழகா பொறக்கச் சொன்னது? இதமாச் சொல்லிப் பாத்துட்டேன். பதமாச் சொல்லிப் பார்த்துட்டேன். இவ பாட்டுக்கு டைவோர்ஸ் நோட்டீஸ் அனுப்பிட்டா, தூக்கிக் குடுத்துட முடியுமா? எனக்குப் பிரஸ்டீஜ், பொடலங்கா எதுவும் கிடையாதா? என் பொண்டாட்டி என்னை டைவோர்ஸ் செஞ்சிட்டான்னு கம்பீரமா சொல்லிக்க முடியுமா? அசிங்கம் இல்லை? அவமானம் இல்லை? அதான் ஒரு சமாதான உடன்படிக்கைக்கு வந்துடலாம்னு யோசிச்சுப் புறப்பட்டு வந்திருக்கேன். அது என்ன ஏதுன்னு பொறுமையா கேக்காம வெளில போ, போன்னு துரத்தினா எப்படி?"

"போனை அவகிட்ட குடுங்க மாப்ளே..."

"இந்தா, உங்கிட்ட பேசணுமாம்."

ஆகாஷ் பெட்டியிலிருந்து தன் உடைகளை எடுத்து உடுத்தத் துவங்க, பூஜா போனை வாங்கி, "சொல்லுங்கப்பா" என்றாள்.

"ஏம்மா, அவரு என்னமோ சமாதானமா பேச வந்ததாச் சொல்றாரே... அது என்னன்னு தான் பேசிப் பாரேன்மா."

"எந்தச் சமாதானமும் எனக்கு வேணாம்ப்பா. அவரு என் வாழ்க்கையை விட்டுப் போனால் போதும். இப்ப முதல்ல வீட்டை விட்டுப் போனாப் போதும்."

"இத பாரும்மா. உங்கிட்டயும் பொறுமை கிடையாது. பேசிப் பாருன்னு சொன்னா, என் பேச்சுக்கு மரியாதை குடுக்கறியா நீ? எப்படியோ போ! நீயே முடிவு பண்ணிக்கோ. வெச்சிடறேன்."

ஆகாஷ் விசிலடித்தபடி தலைவாரிக் கொண்டான்.

"புதுசா ஒரு நாடகம் ஆரம்பிக்கிறியா? சொல்லு! என்ன பேசணும்? இன்னும் என்ன பேச வேண்டியிருக்கு?" என்றாள் வெறுப்பாக.

"பேசணும்னா கொஞ்சம் எனர்ஜி வேணும். பசிக்குது. டிஃபன் எதுவும் தரப் போறதில்லையா, பூஜா?"

"உனக்கு வெக்கம், மானம் எதுவும் கிடையாதா?"

"இருக்கு. அதை எவனும் பொண்டாட்டிகிட்ட பாக்கமாட்டான். பெட்ரூம்ல நின்னுக்கிட்டு இப்படி அபத்தமா கேள்வி கேக்கறியே பூஜா."

"சூடு, சொரணை இல்லையா உனக்கு?"

"எது இருக்கு, எது இல்லன்னு அப்புறம் சொல்றேன். இப்போதைக்குப் பசி நிறைய இருக்கு. ம்கூம். நீ எதுவும் தரப் போறதில்லை. என்ன வெச்சிருக்கே உன் ஃப்ரிஜ்ல?"

ஆகாஷ் ரெஃப்ரிஜிரேட்டரைத்



திறந்து பார்த்து, "நல்ல வேளை, ஆப்பிள் இருக்கு. போதுமே. ஏன் ஆப்பிள் எ டே... கீப்ஸ் தி டாக்டர் அவே!" என்று எடுத்துக் கடித்தான்.

முறைத்தபடி நின்ற பூஜாவைப் பார்த்து சிரித்த ஆகாஷ், "இதையே கொஞ்சம் மாத்திச் சொல்வாங்க தெரியுமா? இஃப் தி டாக்டர் இஸ் ஸ்மார்ட், கீப் தி ஆப்பிள் அவே!" என்றபடி சோபாவில் அமர்ந்தான்.

"ஆகாஷ், என் பொறுமைக்கும் ஒரு எல்லை இருக்கு."

"அந்த எல்லையில நீ என்ன சொல்வேன்னு பாக்கணும்னு எனக்கு ஆசையா இருக்கு பூஜா."

"மரியாதை கெட்டுடும், ஆகாஷ்."

"இப்ப ஏதாச்சும் எனக்கு நீ குடுத்துக்

கிட்டு இருக்கியா, என்ன?"

"ஆகாஷ்! உனக்கு என்ன வேணும்?"

"விக்குது. தண்ணி வேணும் இப்போ!"

ரெஃப்ரிஜிரேட்டரிலிருந்து அவனே தண்ணீர் பாட்டிலை எடுத்துக் குடித்து விட்டு வைத்தான்.

"தவிச்ச வாய்க்குத் தண்ணிகூட குடுக்காத தர்ம பத்தினியே, வா... இப்படி வந்து உக்காரு. ஒரு யோசனை சொல்றேன். பிடிச்சிருந்தா ஏத்துக்கோ; புடிக்கலைன்னா அடுத்த நிமிஷம் நான் புறப்பட்டுப் போய்க்கிட்டே இருக்கேன். சரியா?"

"இப்பவே சொல்றேன்; பிடிக்கலை. போ வெளில!"

"கேக்காமலே சொன்னா எப்படி?"

"நீ என்ன யோசனை சொன்னாலும் எனக்குப் பிடிக்காது."

"பரஸ்பரம் விவாகரத்து செஞ்சுக்க எனக்குச் சம்மதம்னு நான் கையெழுத்துப் போட்டுக் குடுத்தா, உனக்குப் பிடிக்காதா?"

"முதல்ல அதைச் செய்!"

"அதுக்குத்தானே வந்திருக்கேன். இந்த விவாகத்தால உனக்கு மனக் கஷ்டம்! இந்த விவாகரத்தால எனக்கு மான நஷ்டம்! நஷ்டம்னு வந்தாலே சம்பந்தப்பட்டவங்க நஷ்டஈடுன்னு ஒண்ணு குடுக்கறதுதானே சரி?"

"என்ன எதிர்பார்க்கறே?"

"ஒரே ஒரு வருஷம் நீ நான் சொல்ற படங்கள்ல நடிச்சுக் குடுத்தாப் போதும். ஜஸ்ட் ஒன் இயர். அதிகமா போனா அஞ்சு இல்லை ஆறு படம்! அதுக்கப்புறம் நீ யாரோ, நான் யாரோ..."

"முடியாது!"

"அப்போ எனக்குப் பணம் வேணும்."

"எவ்வளவு?"

"உன்னை வெச்சு இந்த ஒரு வருஷத்தில நான் சம்பாதிக்க முடியும்னு நினைக்கிற பணம்! ஜஸ்ட்... ஒரு கோடி! யெஸ்! ஒரு கோடி கொடு! விவாகரத்து தர்றேன்... விலகிக்கோ!"

"கடவுளே! ஒரு கோடின்னு ரொம்ப சாதாரணமா சொல்றியே! இப்ப நான் இருக்கறது வாடகை வீட்ல. என் மாசச் சம்பளம் ஜஸ்ட் ஏழாயிரம்! தெரியுமா... உனக்கு?"

"அதுவும் தெரியும்! நீ பாண்டிச்சேரி தங்கத் தோட்டத்தோட வாரிசு குமரனோட காதலின்னும் தெரியும்! நீ சென்னைக்கு வந்ததும் தெரியும். அவன் ஓடோடி வந்து உன்னைச் சந்திச்சதும் தெரியும். ரெண்டு பேரும் மணிக்கணக்குல கடற்கரையில உக்காந்து பேசினதும் தெரியும். விவாகரத்துக்கு அப்புறம் உன்னைக் கல்யாணமே செய்துக்கத் தயாரா இருக்கற உன் அன்புக் காதலன் குமரன் உனக்கு விவாகரத்து கிடைக்கறதுக்காக ஜஸ்ட் ஒரே ஒரு கோடி குடுக்க மாட்டாரா, பூஜா?"

அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள் பூஜா.

"நீங்க ரெண்டு பேரும் என்ன பேசினீங்கன்னு வரிவரியாகூட என்னால சொல்ல முடியும் பூஜா. உன்னைக் கண்காணிக்க நான் நியமிச்ச ஆளு அவ்வளவு ஸ்மார்ட்! கமான்! போனை எடு! குமரனுக்குப் போடு! ஒரு கோடி எடுத்துக்கிட்டு இங்க வரச் சொல்லு!"

"நோ!"

"யெஸ்! உனக்கு வேற சாய்ஸ் இல்லை, பூஜா. அவனுக்கு ஒரு கோடி ஒரு திகைப்பான விஷயமே இல்ல."

அவனையே முறைத்துப் பார்த்த பூஜா தன் செல்போனில் எண்களைத் தொட்டாள். காதில் வைத்தாள்.

"ஹலோ, போலீஸ் கண்ட்ரோல் ரூமா?" என்றாள்.

- தொடரும்

"சந்தேகம்ங்கிறது ஒரு பெரிய வியாதிங்கிறார் அந்த டாக்டர்."

"சரிதானே! இதை ஏன் வருத்தத்தோட சொல்றே?"

"அதுக்கு ஒரு ஆபரேஷன் பண்ணணும்... ஐம்பதாயிரம் ஆகும்ங்கிறாரே."

- வீ.விஷ்ணுகுமார்

அட...! 'பாய்ஸ்' படத்துல நடிச்ச தேவயானி தம்பி நகுலா இது? என்று ஆச்சர்யப்பட்டால் "நானேதான் பாஸ்.. என்னடா கொழுகொழு அமுல் பேபியா இருந்தவன் இப்போ அழகா ஸ்லிம்மா ஒல்லிக்குச்சி ஒடம்புக்காரனா மாறிட்டேனேன்னு பார்க்கறீங்களா? ஹீரோ வாயிட்டோமில்ல!" என்று சட்டைக் காலரைத் தூக்கிவிட்டு ஸ்டைலாகக் குரல் கொடுக்கிறார் நகுல்.

"ஆள் மட்டும் மாறலீங்க, பெயரையும் மாத்திட்டேன், 'நகுலன்'னு. காதலில் விழுந்தேன் படத்துல நான்தான் ஹீரோ" என்கிறார் சிரித்துக்கொண்டே. "இதுக்கெல்லாம் அவர்தாங்க காரணம்" என்று கைகாட்டுகிறார் 'காதலில் விழுந்தேன்' படத்தின் அறிமுக இயக்குநர் பி.எஸ். பிரசாத்தை.

"இந்தப் படத்துக்கு ஒரு டிஃப்பரன்ட்டான ஹீரோவை செலக்ட் பண்ணணும்னு யோசிச்சேன். நகுலன்கிட்ட நீங்கதான் இந்தக் கதையில் நடிக்கிறீங்கன்னு சொல்லி அப்ரோச் பண்ணின உடனே நான் ஹீரோவான்னு ஆச்சர்யப்பட்டார். ஆறுமாத உடற்பயிற்சி செய்ய வச்சு விவேக் ஓபுராய் மாதிரி ஆக்கிட்டேன்.

'காதலில் விழுந்தேன்' படம் ஒரு கல்லூரிக்காதல். வழக்கமான லவ் சப்ஜக்ட்டா இல்லாம உணர்வுப்பூர்வமான, அழகிய, மெல்லிய காதல் உணர்வை உண்டுபண்ணக்கூடிய படம்" என்கிறார் எஸ்.பி. பிரசாத். இவர் இயக்குனர் வி.சேகர், விஜய் மில்டன், அழகர் பெருமாள் ஆகியோரிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றியவர். சென்னைப் பச்சையப்பன் கல்லூரி மாணவர் என்று கூறும்போது தன்னுடைய காலேஜ் ஃப்ளாஷ் பேக்குக்குள் சென்று விடுகிறார்.

காதலில் விழுந்தேன்...



"ஒவ்வொருத்தருக்கும் காதல் அனுபவம் இருக்கும். அந்த அனுபவங்கள்தான் கதை!

காதலில் விழும்போது ஏற்படும் நன்மைகளையும், தீமைகளையும், அந்தத் தீமையிலிருந்து இளைஞன் எப்படி மீண்டு வருகிறான் என்பதையும் ஆக்ஷன் கலந்து மென்மையாகச் சொல்லியிருக்கிறேன்.

ஹீரோயின் சுனேனா, ஹைதராபாத்தின் அழகிய லைலா.

படம் கண்டிப்பா காதல், சேது, ஆட்டோகிராப் வரிசையில் இடம் பிடிக்கும்" என்கிறார் நம்பிக்கையோடு!

'கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவில் டைரக்டர் ஸ்ரீராமுலு நாயுடு, தாம் தயாரிக்கவிருந்த 'ஆர்யமாலா' படத்துக்குக் கதாநாயகனாக யாரைப் போடலாம் என கலைவாணரிடத்தில் கேட்டார். உடனே கதாநாயகனைத் தாமே அழைத்து வருவதாகச்



என்றென்றும் அன்போடு...

சொல்லி புதுக்கோட்டைக்குச் சென்ற கலைவாணர், அங்கு சன்னியாசி உடை தரித்து மௌன விரதம் பூண்டிருந்த பி.யூ.சின்னப்பாவைக் கையோடு அழைத்து வந்து அதில் நடிக்கவைக்க, படம் சூப்பர் ஹிட். பி.யூ.சின்னப்பாவும் அந்தக் கால சூப்பர் ஸ்டார் ஆனார்.'

- 'திரும்பிப் பார்க்கிறேன்'
எஸ்.வி.சகஸ்ரநாமம்

ஜெயா டி.வி.யில் 2004 மற்றும் 2005 ஆண்டுகளுக்கான 'கலைமாமணி' விருதுப் பட்டியலில், 2005-ஆம் ஆண்டுக்கான 'இயற்றமிழ்க் கலைஞர்' எனும் பாராட்டுடன் 'கலைமாமணி' விருது எனக்குத் தரப்பட்டிருப்பதாக அறிவிப்பு வந்து கொண்டிருந்தது. உடனே, பல்வேறு இடங்களிலிருந்தும் பாராட்டும் தொலை பேசி அழைப்புகள் வரத் தொடங்கின. நான் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டே இருந்தேன்.

பத்மஸ்ரீ கமல்ஹாசன், இயக்குநர் சரண், இயக்குநர் பாண்டியராஜன் ஆகியோருக்கும் நான் மகிழ்ச்சியுடன் இந்தச் செய்தியைப் பகிர்ந்து கொண்டேன்.

கமல்ஹாசனிடம் நான் பேசும்போது, 'பார்த்தீர்களா இரண்டே படங்களில் நடித்து ('கை வந்த கலை' அப்போது படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது) கலைமாமணி விருது வாங்கிவிட்டேன்' என்று வேடிக்கையாகச் சொன்னேன் (இயற்றமிழ்ப் பேச்சாளருக்காகத்தான் எனக்கு விருது அறிவித்திருந்தார்கள்). அவரும் மிக மகிழ்ச்சியோடு அதை ரசித்து என்னைப் பாராட்டினார்.

எனக்கு உள்ளூர மற்றொரு மகிழ்ச்சியும் ஓடிக்கொண்டிருந்தது. இந்த விருதினை அன்றைய தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்களிடத்தி விருந்து பெறப் போகிறேன் என்னும் மகிழ்ச்சிதான் அது. எனது வாழ்க்கையில் நான் சந்தித்துப் பரிசு பெறப்போகும் மூன்றாவது முதல்வர் இவர்.

1964 - 65-ஆம் ஆண்டில் வெளிவந்த இயக்குநர் ஸ்ரீதரின் 'வெண்ணிற ஆடை'யில் அறிமுகமாகி, அடுத்த படமான 'ஆயிரத்தில் ஒருவன்' படத்தின் மூலம் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களோடு கதாநாயகியாக நடித்துத்தான் திரையுலக வாழ்க்கையைத் தொடங்கினார் செல்வி ஜெயலலிதா.

'எங்கிருந்தோ வந்தாள்' படத்தைப் பார்த்துவிட்டு சினிமாமணி, முத்துராக்கு, இருவரோடு நான் நிலா வெளிச்சத்தில் நடந்து வந்து கொண்டிருந்தேன்.

"இந்தப் படத்தில் என்ன அருமையா ஜெயலலிதா நடிச்சிருக்காங்க பாருங்க. அதிலும் பைத்தியமா இருக்கிற நம்ம சிவாஜிகிட்ட இருந்து தப்பிக்க பேட்டரி லைட்டை எடுக்க முடியாம திண்டாடிக் கதறி நடிச்சபோது தியேட்டரே கலங்கிப் போச்சு" என்றான் மணி ஆழ்ந்த ரசனையோடு.

"தம்பி, அவங்க நடிப்புப் பரம்பரையில் வந்தவங்கன்னு சொல்லணும். அவங்க அம்மா திருமதி சந்தியா அந்தக் காலத்தில் சிறந்த நடிகைன்னு பேரெடுத்தவங்க. அதிலும் மகாராணியாகவோ, உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த குடும்பத் தலைவியாகவோ திருமதி சந்தியா நடிக்கிறதைப் பார்க்கும்போது ரொம்பப் பெருமிதமாக இருக்கும். 'படிக்காத மேதை', 'மாயாபஜார்', 'காத்திருந்த கண்கள்' இப்படிப் பல படங்கள்ல அவங்க நடிப்பு அருமையா இருக்கும்" என்று பாராட்டிக்கொண்டே, வறுத்த மசால் கடலையைக் கைநிறைய அள்ளி எங்களுக்குக் கொடுத்தார், முத்துராக்கு.

"அதுமட்டுமில்ல, நம்ம ஜெயலலிதாவோட சித்தி திருமதி வித்யாகூட சில படங்கள்ல நடிச்சிருக்காங்க. 'அலிபாபாவும் நாற்பது திருடர்களும்' படத்தில் எம்.ஜி.சக்ரபாணி அவர்களுக்கு மனைவியா வருவாங்க. ரொம்ப மிடுக்கா நடிப்பாங்களே... அவங்கதானே..." என்று மணி தொடர்ந்தான்.

அந்தப் பழைய நினைவுகளோடு சென்னை கலைவாணர் அரங்கத்தில் அன்றைய முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்களிடத்தில் 'கலைமாமணி' விருதுக்கான தங்கப் பதக்கத்தைப் பெறச் சென்ற போது, ஓரிரு வார்த்தைகள் பேசுவதற்கான சந்தர்ப்பமும் கிடைத்தது எனக்கு.

பாராட்டிதழை அவர்களிடத்தில் பெறும்போது நன்றி தெரிவித்து, நான் ஜெயா டி.வி.யில் ஆறாண்டு காலமாகப் பேசி வருகின்ற 'காலை மலர்' நிகழ்ச்சியின் 'இன்றைய சிந்தனை' குறித்துப் பேசினேன்.

"நல்ல நிகழ்ச்சி... பாராட்டுக்கள்" என முகத்தில் மகிழ்ச்சி பொங்க அவர்கள் வாழ்த்துச் சொன்னார்கள்.

என் துணைவியார் அமுதா, மகள் அர்ச்சனா, மகன் குரு, நண்பர்கள், உறவினர்களுடன் இந்த மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்ட போதும், தொடர்ந்து மதுரையில் எனக்கு நடந்த பாராட்டு விழாவில் கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் விழா நிகழ்ச்சியில் பங்கேற்று வாழ்த்திய போதும் நடந்து வந்த பாதையும், கடந்து வந்த காலங்களும் நினைவுக்கு வந்து

'ஈ', 'தலைமகன்' படங்களின் ஷூட்டிங் மிகவும் தாமதமாகிக் கொண்டே போகிறதாம். காரணம் ஹீரோயின் நயன்தாரா சிக்குன் குனியாவால் பாதிக்கப்பட்டு ரொம்ப மெலிந்து விட்டாராம். பழைய நிலைமைக்குத் திரும்பிய பிறகுதான் ஸ்டார்ட், கேமரா, ஆக்ஷன்...


போயின.

இத்தனைக்கும் மேலாக பாராட்டு விழாக்களில் பங்கேற்க சினிமாமணியும், முத்துராக்கும், நண்பர்களும் வரப் போகிறார்கள் எனத் தகவல் வந்த நாள் முதலாக மகிழ்ச்சியால் தூக்கம் வர வில்லை.

அவர்களிடம் பேசுவதற்கும், அவர்கள் என்னிடத்தில் பேசுவதற்கும் ஆயிரம் செய்திகள் இருக்கின்றன.

அண்மையில் கமல்ஹாசன் அவர்களை 'தசாவதாரம்' படப்பிடிப்பில் பார்த்து வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தது மனதில் ஓடிக்கொண்டிருந்தது.

கிராமத்து டூரிங் டாக்கீஸில் மணல் பரப்பிய தரையில் அமர்ந்து வெள்ளித்



திரையைப் பார்த்து மகிழ்ந்து கைதட்டிய நான், வெள்ளித் திரைக்குள்ளும் செல்லும் வாய்ப்பு கிடைத்ததை எண்ணிப் பார்க்கிறேன்


படிக்க எத்தனையோ புத்தகங்கள்...
பார்க்க எத்தனையோ நாடுகள்...
பேசுவதற்கு எத்தனை எத்தனையோ மேடைகள்...
எழுதுவதற்கு மீதமிருக்கும் எண்ணக் குவியல்கள்...
பாதை நீள்கிறது...
பயணம் தொடர்கிறது.

என்றென்றும் அன்போடு...

(ரீல் முற்றும்)

குட்டிக்கண்ணன்

புற்றுநோயை தடுக்குமா



புற்று நோய்களிலேயே அதிகம் பேர் பாதிக்கப்படுவது, கருவழிப் பாதையைத் தாக்கும் செர்விகல் கேன்சர் எனப்படும் புற்றுநோயால்தான். இப்புற்றுநோய் வராமல் இருக்க தடுப்பு மருந்து ஒன்றைக் கண்டறிந்துள்ளனர் அயல்நாட்டில். இது குறித்து அறிய அடையாறு புற்றுநோய் மருத்துவமனை இயக்குநர் டாக்டர் ராஜ்குமாரிடம் பேசினோம்.

"நம் நாட்டில் ஆண்டுக்கு ஒரு லட்சம் பெண்கள் புதிதாக செர்விகல் கேன்சரால் பாதிக்கப்படுகிறார்கள். பாலியல் உறவின்போது ஆண்களிடமிருந்து ஹியூமன் பாபிலோமா என்ற வைரஸ் (Human Papilloma Virus) பெண்ணின் கருப்பையின் வாயிலுள்ள செர்விகல் பகுதியில் தங்கி, அங்குள்ள செல்களில் மாற்றம் செய்து இந்நோயைத் தோற்றுவிக்கிறது.

இவ்வைரஸ் (HPV) ஆண்களையும் தாக்கி பனீஸ் கேன்சரை உண்டாக்குகிறது. இருப்பினும் இவ்வைரஸால் ஆண்களை விடப் பெண்கள்தான் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள்.

பெண்களுக்கு செர்விகல் கேன்சர் வருவதற்கு முக்கிய காரணங்கள்; பல பெண்களோடு தொடர்புள்ள ஆணின் உறுப்பில் எச்.பி.வி. இருக்கும். அவர் மனைவியோடு பாலியல் உறவு கொள்ளும்போது அவருக்கு இக்கிருமிகளைப் பரப்பலாம். மற்றும் இளம் வயதிலேயே திருமணம் செய்வதாலும், அதிகக் குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதாலும், பாலியல் தொழிலாளர்களுக்கும் எச்.பி.வி. இருப்பதால் இந்நோய் உருவாகிறது.

பொதுவாகப் பாலியல் உறவின்போது பெண்களுக்கு எச்.பி.வி. இருந்தாலும், அவர்களில் பெரும்பாலோருக்கு இயற்கையிலேயே நோய் எதிர்ப்புச் சக்தி இருப்பதால், வைரஸ் நுழைந்திடும்போதே அழிந்துவிடும். நோய் எதிர்ப்புச் சக்தி இல்லாத சிலருக்குத்தான் அவற்றின் பாதிப்பால் நோய் தோன்றுகிறது.

இவ்வைரஸின் (HPV) பாதிப்பு இருக்கும் பெண்களுக்கு, பாலுறவுக்குப் பிறகு இரத்தப்போக்கு ஏற்படும். வெள்ளைப்படுதலும் உண்டாகலாம். இரத்தக் கசிவு தோன்றலாம். இத்தகைய அறிகுறிகள் தென்படுவோர் பாப்ஸ்மியர் பரிசோதனை செய்து, அவை எச்.பி.வி.யின் பாதிப்பினால் உண்டானதா எனத் தெரிந்து கொள்ளலாம். நோய் உள்ளது என உறுதிப்படுத்தப்பட்ட உடனேயே மருத்துவம் மேற்கொள்வதன் மூலம் நூற்றுக்கு நூறு பேரையும் குணப்படுத்தி விடலாம். செலவும் குறையும்.

ஆரம்ப நிலையிலே அறிய இயலாமல் போய் வெளியே பரவியிருந்தாலும் நூற்றுக்கு எண்பது பேரைக் காப்பாற்றி விடலாம்.

இந்நோயின் செல்கள் இரத்தத்தில் கலக்காமல் கருப்பை முழுவதும் ஆக்ரமித்திருந்தாலும், நூற்றுக்கு அறுபது கேஸ்களில் இப்புற்று நோயை விரட்டிவிட முடியும்.

பொதுவாக செர்விகல் கேன்சரை முற்றிலும் குணப்படுத்த முடியும். நோயை தாமதமாகக் கண்டறியும்போது அவற்றுக்கான மருத்துவ முறை வீரியமாக இருப்பதோடு, செலவும் அதிகமாகும்.

இந்நோய் உள்ளவர்களுக்கு இரத்தப்போக்கு உண்டாகும் என்பதால் பாலியல் உறவைத் தவிர்ப்பது நல்லது.

மேலை நாடுகளோடு ஒப்பிடும்போது, செர்விகல் கேன்சரின் தாக்கம் நம் நாட்டில்தான் அதிகம். காரணம், அங்கு அனைத்துப் பெண்களும் ஆண்டுக்கு ஒரு முறை பாப்ஸ்மியர் சோதனையைச் செய்துகொள்வதாலும் நோயின் அறிகுறி புலப்படும்போதே மருத்துவம் செய்வ

• அடையாறு புற்றுநோய் மருத்துவமனை



கார்டாசில்?

தாலும் அவற்றின் தாக்குதலிலிருந்து தங்களைக் காத்துக் கொள்கிறார்கள். நம் நாட்டில் எழுபது சதவீதம் நோய் முற்றிய பிறகு தான் மருத்துவரை அணுகுகிறார்கள்.

கக்குவான், மஞ்சள் காமாலை, போலியோ போன்ற நோய்கள் உருவாகாமலிருக்க தடுப்பு ஊசி போட்டுக் கொள்வதுபோல் செர்விகல் கேன்சரைக் குணப்படுத்த கார்டாசில் (Gardasil) என்ற தடுப்பு மருந்தை, அமெரிக்காவைச் சேர்ந்த மெர்க் (Merck) நிறுவனம் கண்டறிந்துள்ளது.

இந்த நிறுவனத்தோடு இந்திய அரசின் ஐ.சி.எம்.ஆர். (ICMR) இணைந்து அத்தடுப்பு ஊசியை இங்கு பரிசோதிக்க உள்ளது. இம்மருந்தைப் பாலுறவுக்கு முன்பு அல்லது திருமணத்துக்கு முன்பு அல்லது பதினான்கு வயதிலிருந்தோ போட்டுக்கொள்வது நல்லது. இவ்வாறு செய்வதால் எண்பது சதவிகிதத்தினரை இந்நோய் நெருங்காமல் செய்திடலாம்.

• டாக்டர் ராஜ்குமார்



இம்மருந்தைப் பெண்களுக்கு மட்டும் பரிந்துரைத்திருப்பது தவறு. ஆண்கள்தான் மூலகாரணம் என்பதால் இருசாராருக்கும் கொடுப்பதுதான் சிறந்தது. இதன் மூலம் அவர் மற்ற பெண்களுக்குப் பரப்புவதைத் தடுக்கலாம்.

கார்டாசில் என்பது செர்விகல் கேன்சரைக் குணப்படுத்தும் மருந்தல்ல, அது வராமல் தடுக்கக் கூடியது. இம்மருந்தின் விலை ரூபாய் ஐந்தாயிரத்துக்கும் அதிகம் என்பதால், வாங்கிப் பயன்படுத்துவோர் எண்ணிக்கையைப் பற்றிக் கூற இயலாது. குறைந்த விலையில் மருந்து கிடைக்க இந்தக் கம்பெனியோடு இந்திய அரசாங்கம் பேசி வருகிறது.

மஞ்சள் காமாலைத் தடுப்பூசியின் விலையும் இதுபோல அதிகமாக இருந்த காரணத்தால், நம் நாட்டில் அதனை அதிக அளவில் யாரும் பயன்படுத்த இயலவில்லை. ஆனால், அதே ஃபார்முலாவை உபயோகித்து நம் நாட்டு மருந்து நிறுவனங்களே தயாரித்து, இருபது மடங்கு குறைந்த விலைக்கு விற்பனை செய்தபோது பயனடைந்தார்கள்.

அதனால் எல்லோரும் அதேபோல் இம்மருந்தையும் உற்பத்தி செய்ய வேண்டும். ஆனால் தற்போது இந்தியா WTOவில் உறுப்பு நாடாக இருப்பதால், இனி எந்த மருந்தின் ஃபார்முலாவையும் பின்பற்ற இயலாது. இருந்தாலும், நம் சொந்த முயற்சியில் அம்மருந்தைக் கண்டறிய இந்திய அரசின் ஐ.சி.எம்.ஆர். பயோடெக்னாலஜி துறை மற்றும் ஹைதராபாத்தைச் சேர்ந்த சாந்தா ஃபார்மாசூட்டிக்கல்ஸ் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவை முனைப்போடு செயல்பட்டு வருகின்றன" என்கிறார் கேன்சர் டாக்டர் ராஜ்குமார்.

படங்கள் : **நெல்லை 'சுதா'**

தங்க வேட்டை

ஆர்.மாலதி ரகோத்தம்

கண்ணிமைக்காமல் கேபிள் டீ.வி.யில் மூழ்கியிருந்த என் மனைவி ராஜேஸ்வரி வீறிட்டாள். 'ஐயோ இங்க வந்து பாருங்களேன்.' மனைவி சொல்லே மந்திரம் என்று கருதும் நான், முகம் நிறைய நுரையுடன் பாத்ரூமிலிருந்து ஹாலுக்கு ஓடி வந்து நின்றேன். அவ்வமயம் நான் கண்டது; எதிர்வீட்டு ஹேமா, 'விலை என்ன?' என்ற டீ.வி. நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, ஒரு கிலோ பாப்கார்ன் பாக்கெட்டையும், பாத்ரூம் கழுவும் நைலான் பிரஷ் ஒன்றையும் வென்று வெற்றிவாகை சூடிய காட்சி.

தமது அதீத அழகுக்கு முன் கிளியோபாட்ரா வெறும் கிள்ளுக்கீரை என்று உறுதியாக நம்பியிருந்த என் மனைவி 'இந்த ஹேமாவோட வாழைக்காய் மூஞ்சியே சகல டீ.வி.களிலும் வரும்போது என் வட்டநிலா முகம் ஏன் வரலாகாது' என்று மனோகரா கண்ணாம்பாவாக கர்ஜித்து, மங்கம்மா ரேஞ்சில் என் வழுக்கைத் தலையில் ஓங்கியடித்து சபதம் செய்தாள்; 'எண்ணி மூணே மாசம்.. பாபா கௌண்ட்டிங்... ஒன் டூ த்ரீ... ஜஸ்ட் த்ரீ மந்த்ஸ். வருவேன்... எல்லா டீ.வி களிலும் வருவேன்... குடுப்பேன்... பேட்டி குடுப்பேன். நோட் பண்ணிக்குங்க...' என்று கொக்கரித்தாள்.

அன்று முதல் தம் போட்டோ மற்றும் பயோடேட்டாவை கம்ப்யூட்டரில் இறக்கி, பல காப்பிகள் எடுத்து, அனைத்து சேனல்களுக்கும் விநியோகம் செய்துவிட்டுத்தான் ஓய்ந்தாள். தம் இஷ்டதெய்வங்களுக்கு வேண்டுதல் நடத்தினாள்.

ஒரு மந்தமான ஞாயிறு காலைப் பொழுதில் திடீரென வீடியோ கேமராவுடன் ஒருவன் வீட்டில் நுழைய, கூடவே மேக்கப்புக்கு நடுவில் இரு கண்கள், ஒரு மூக்கு, ஒரு வாய் தெரிய இரண்டு இளம் பெண்கள் உள்ளே வந்து 'சரண் டீ.வி.யிலிருந்து வர்றோம். 'நாங்கள் போட்ட பாடல்' நிகழ்ச்சிக்காகப் பேட்டி எடுக்கணும். மொத்த குடும்பத்தையும் அஞ்சே நிமிஷத்தில் ஆஜர்படுத்துங்க' என்று ஆணையிட்டனர். அடுத்த சில நிமிடங்களுக்கு வீடு அல்லோலகல்லோலப்பட்டது. காதலவோடிய வாயுடன், புன்னகை மன்னியாக ராஜேஸ்வரி, பாதி பவுடர் டப்பாவைக் காலி செய்துவிட்டு பட்டுப்புடைவை கட்டித் தம் மகன் மற்றும் மாமியார் சகிதம் வந்து சேர்ந்தாள்.

சம்பிரதாய கேள்விகளான 'உங்களுக்குப் பிடித்த கதாநாயகன் யார்?' என்ற வினாவை என் மனைவியிடமும், 'உங்களுக்குப் பிடித்த காமெடியன் யார்?' என்று என்னிடமும், 'உங்களுக்குப் பிடித்த கவர்ச்சி நடிகை யார்?' என்பதை என் மகனிடமும் கேட்டபின், ராஜேஸ்வரியிடம் மேலும் சில கேள்விகளைக் கேட்டு, ஒப்புக்குச் சப்பாணியாக ஓரமாக நின்றிருந்த என் அம்மாவிடம், "உங்களுக்குப் பிடித்த பாடல் எதுன்னு சொன்னா அதை ஒளிபரப்புவோம்' என்று சொல்லி மைக்கை நீட்ட, புளகாங்கிதமடைந்த அம்மா, 'வதனமே சந்திர பிம்பமோ' என்ற தியாகராஜர் காலத்துப் பாடலைக் கேட்டுவைக்க, பேட்டி எடுத்த பெண்ணின் முகம் அஷ்டகோணலாகி அமாவாசை இரவாக இருண்டது. 'அந்த ரிக்கார்டு இருக்கான்னு தெரியலை. இருந்தா நிச்சயம் போடறோம். எதுக்கும் எங்க நிகழ்ச்சியைத் தொடர்ந்து பாருங்க...' என்று கூறிவிட்டு அவசரமாக அந்த ஏரியாவைவிட்டே அம்பேல் ஆனார்கள்.

வாராவாரம் புதன்கிழமை அந்நிகழ்ச்சி ஒளிபரப்பாகும் நேரத்தில் அமர்ந்து நம் பேட்டி வருமா

என்று காத்திருந்து ராஜேஸ்வரி கடைசியில் ஏமாந்ததுதான் மிச்சம். அந் நிகழ்ச்சி கடைசிவரை ஒளிபரப்பாகவே யில்லை. அம்மா கேட்ட அரதப்பழசான பாடலால்தான் கேமராவுக்கெட்டியது டி.வி.க்கு எட்டவில்லை என்றுணர்ந்த என் மனைவி, அவளை வாய் ஓயாமல் ஒரு மண்டலத்துக்கு லஷார்ச்சனை செய் தாள்.

அடுத்த வாரம் ஆபீஸ் விஷயமாக ஹைதராபாத் சென்ற நான், ஒரு காலைப் பொழுதில் ஓட்டல் 'ரூம் சர்வீஸ்'க்கு ஆர்டர் செய்துவிட்டு டி.வியை ஆன் செய்தேன். என்னே இன்ப அதிர்ச்சி! சாஷாத் ராஜேஸ்வரி, என் மனைவி, ஸ்கிரீனில் டைட் க்ளோஸப்பில் ஸ்பஷ்டமாகத் தெரிந்தாள். கண்களில் ஆனந்தக் கண்ணீர்... இருக்காதா பின்னே! எத்தனை நாள் கனவு. ஏழெட்டு மைக் குகள் ஒன்றுடன் ஒன்று இடித்தபடி நீண்டு அவள் உதிர்க்கப் போகும் நல் முத்துகளை உள்வாங்கக் காத்திருந்தன.

ராஜேஸ்வரி வாயைத் திறந்தாள்: "அவர் ஊரில் இல்லாததால நான், என் பையன், மாமியார் எல்லோரும் ஹாலில் படுத்திருந்தோம். நடுராத்திரியில ரூம் ஜன் னல் கம்பியை வளைச்சு, பீரோபுல்லிங் செஞ்சு அதை நெம்பித் திறந்து, திருட்டுப் பசங்க 20 சவரன் நகை, 10000 ரூபாய் கேஷ் எல்லாத்தையும் எடுத்துக் கிட்டுப் போயிட்டாங்க. ஐயோ நான் என்ன பண்ணுவேன்." - அப்புறம் ஒரே ஒப்பாரி தான்!

நான் தலை சுற்றி, தடாலெனச் சாய்ந் தேன். ○



தராசு

● **என்.உஷா தேவி, மதுரை - 9**

*? **மனிதனின் முதல் வெற்றிக்கும் அவன் அடுத்தடுத்து அடையும் வெற்றிகளுக்கும் என்ன வித்தியாசம்?***

! முதல் வெற்றி ஒரு புதுவிதமான மகிழ்ச்சியை அவன் மனத்துக்கு அறிமுகம் செய்கிறது. அடுத்தடுத்து வரும் வெற்றிகள் மகிழ்ச்சியோடு மனப்பக்குவத்தையும் கொடுக்கும்; எந்தவொரு வெற்றிக்கும் தனி ஒருவரது முயற்சி மட்டுமே காரணமல்ல என்பதை உணர்த்தும் (உணர்த்த வேண்டும்!) அதுதான் உண்மையான வெற்றியாளனுக்கு அழகு.

● **யூ.பைஸ் அஹமத், நாமக்கல்**

*? **தீபாவளிக்குத் தங்கம், பட்டு எல்லாம் வாங்கிட்டீங்களா?***

! ஊஹூம்! பட்டு தங்கம் விலை விக்குது. தங்கம் விலையோ விண்ணைத் தொடுது. எங்கிட்டே கறுப்புப் பணம் இல்லைப்பா! இருக்கிற பணம் காட்டன், கைத்தறி, காதிக்குத்தான் தேறும்.

● **எம்.அசோக்ராஜா, திருச்சி -15**

*? **இலவச டீ.வி.யைப் பெற்றுக் கொண்டதற்காக கரூர் அ.தி.மு.க. மகளிர் அணிச் செயலாளரை ஜெ. பதவி நீக்கம் பண்ணியிருக்கிறாரே...?***

! தி.மு.க. ஆட்சியின் இலவச திட்டங்கள் எல்லாம் அந்தக் கட்சிக்காரர்களுக்கு மட்டுமே போய்ச் சேரும் என்ற அ.தி.மு.க. பிரசாரம் பொய்த்துப் போக உதவுகிற வரை ஜெ. எவ்வாறு மன்னிப்பார்! அந்த நோக்கில் ஜெ.வுக்குக் குற்றமற்றவர் எல்லோருமே குற்றவாளிதான்.

● **உமரி பொ.கணேசன், மும்பை**

*? **தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா பதக்கங்களை அள்ளிற்று. ஒலிம்பிக்கில் இது தொடருமா?***

! தொடர வேண்டும் என்பதுதான் அனைவரின் கனவும். வீரர்கள் தேர்வில் அரசியல் கலக்காமல், வெற்றி விளிம்பைத் தொட அதிக வாய்ப்புள்ள வீரர்களுக்கும் அணிகளுக்கும், சிறப்புக் கவனமும் பயிற்சியும் அளித்தால், ஒலிம்பிக் வெற்றிகளை அள்ளி வராவிட்டாலும், கிள்ளியாவது வரலாம்.

● **அ. யாழினி பார்வதம் சென்னை - 112**

*? **சூர்யா-ஜோதிகாவுக்குப் பிறக்கும் குழந்தை ஹிந்துவா முஸ்லிமா?***

! இந்தியன்



● கூட்டுக் கோரிக்கை


தீபாவளிக்குத் தங்கம், பட்டு வாங்கியாச்சா?

இங்கு இனிமேல் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் இந்தியனாகவே இருக்கட்டும்.

● து.தியாகராஜன், திண்டுக்கல்

? ஓரினச் சேர்க்கையைத் தடை செய்யும் சட்டப் பிரிவை நீக்க வேண்டும். அது மனித உரிமைகளை மீறும் கட்டுப்பாடு என்று அருந்ததி ராய், ஷ்யாம் பெனகல், அமர்த்யா சென், நிதின் தேசாய் போன்றோர் மத்திய அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளது பற்றி...?

! இயற்கைக்கு மாறான பாலியல் உந்துதல் உள்ள சிலர் அனுதாபத்துக்குரியவர்களே. அந்த அனுதாபத்தின் விளைவாக, மேலை நாடுகளில் சட்டங்கள் மாறியுள்ளன. தான்தோன்றித்தனமான ஓரினச் சேர்க்கையைவிட, திருமணத்தின் மூலம் அதை அடைவது ஆரோக்கியமானது என்று உணரப்படுகிறது. இந்த விழிப்புணர்வின் தாக்கம்தான் இங்கே சில பிரபலங்கள் விடுத்துள்ள கோரிக்கைக்கு அடிப்படை.



● மறைமுக அறிவுரை

● ரேவதிப்ரியன், ஈரோடு

? சட்டசபைக்கு விரைவில் தேர்தல் வந்தால் நாட்டுக்கு நல்லது என்கிறாரே ஜெயலலிதா?

! வருடத்துக்கு நான்கு தேர்தல்கள் வந்தாலும் அரசியல்வாதிகளுக்கு நல்லதுதான்; நாட்டின் பொருளாதாரத்துக்கு நல்லதில்லையே. ஜெ.வுடைய நாடு போயஸ் தோட்ட வீட்டு வளாகம்தான்.



● மன்னிக்க மாட்டார்!

● பி.மாரிமுத்து, சிவகாமி ❐

? தேங்காய் விலையோ 5 ரூபாய். ஆனால் அதை உடைக்க பூசாரிக்குப் பத்து ரூபாய் தர வேண்டியிருக்கிறதே?

! வசதி இருந்தால் மனம் கோணாமல் கொடுங்கள். இல்லையா, 'கடவுளுக்கும் நமக்குமிடையே தேங்காயும் தேவையில்லை; பூசாரியும் தேவையில்லை. ஆணவத்தை உடைத்து, பரமனிடத்தில் சரணடைந்தால் போதுமே' என்று அமைதி பெறுங்கள்.

● ஆர்.வஸந்தா, சென்னை


? இரண்டு ரூபாய் ரேஷன் அரிசியை, கேரளாவுக்கு மூட்டை மூட்டையாகக் கடத்திக் கொண்டிருக்கும் கடத்தல்காரர்களுக்கு அதிக பட்ச தண்டனையாக என்ன கொடுக்கலாம்?

! முதுகிலே அரிசி மூட்டையைச் சுமந்து கேரள எல்லை வரை நடக்கச் செய்யலாம். ஆனால், அதைவிட முக்கியம், கள்ளக்கடத்தல் ஏன் நடக்கிறது, எப்படி நடக்கிறது என்பனவற்றை ஆராய்ந்து பார்த்து ஓட்டைகளை அடைப்பது.

● கே.துரைசாமி, மங்களப்பட்டி

? முன்னேற்றத்துக்கு முடிவு கிடையாதல்லவா?

! தனிமனித முன்னேற்றத்துக்கு முடிவு உண்டு. திருப்தி. விஞ்ஞான முன்னேற்றத்துக்கு முடிவு உண்டு. பேரழிவு. அது நிகழும். எப்போது என்பது தான் தெரியாது.



● அமைதி முயற்சி

● கே.பெருமாள், கூனியூர்

? உள்ளாட்சித் தேர்தல் தி.மு.க. அ.தி.மு.க. மோதலா? அ.தி.மு.க. தே.மு.தி.க. மோதலா? தி.மு.க. தே.மு.தி.க. மோதலா?

! முரசை முடக்கியவர்களுக்கும் திடம் ஏற்றியவர்களுக்கும் இடையே மோதல்; சிக்-குன் குனியாவை அலட்சியப்படுத்தியவர்களுக்கும் பதவிக்கு வந்தால் அதை ஒழிப்பதாகச் சூளுரைத்தவருக்கும் இடையே மோதல்; ஆட்சி தரும் ஆணவத்துடன் நடந்துகொள்வோருக்கும் ஆட்சிக்கு வரும் ஆர்வத்துடன் இருப்போருக்குமிடையே மோதல்!



● இந்திய வாரிசு!

● எல்.இரவி, செ.புதூர்

? குழந்தைகள், மாணவர்களுக்கு அறிவுரை கூறுவதை நிறுத்திவிட்டு நமது ஜனாதிபதி அரசியல்வாதிகளுக்கு அறிவுரை வழங்கலாமே...?

! இப்போது அவர் வழங்கி வரும் அறிவுரையெல்லாம் யாருக்கு என்று எண்ணுகிறீர்கள்? அரசியல் வாதிகளுக்கும் சேர்த்துத்தான். ஜனாதிபதி நேரடியாக அரசியலில் ஈடுபட முடியாது. ஆனால் குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் உள்ளது போல், அவரைப் புரிந்துகொள்ளும் மனப் பக்குவம் அரசியல்வாதிகளுக்கு இல்லையே.

● லெ.நா.சிவகுமார், சென்னை

? விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்குச் சால்வை வழங்கி ஆசி கூறியுள்ளாரே ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்?

! ஈழப் பிரச்னைக்கு அமைதித் தீர்வு காண ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் முயன்று வருவதாகச் செய்திகள் வந்துள்ளன. அந்த முயற்சியின் ஓர் அங்கமாக பிரபாகரனுக்குச் சால்வை அனுப்பியிருக்கிறார்-வெள்ளைச் சால்வை. இப்போது நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு பிரபாகரன் இணங்கியிருக்கிறார். எப்படியோ தற்காலிக அமைதியாக இராமல் நிரந்தரத் தீர்வு ஏற்பட்டால் மகிழ்ச்சி.

● எம்.கே. இளமதி, பேரையூர் ★

? ஆம்புலன்ஸ் என்ற வார்த்தை அந்த வாகனத்தில் வலமிருந்து இடமாக எழுதப்படுவது ஏன்?

! ஆம்புலன்ஸுக்கு முன்னால் உள்ள வாகன ஓட்டுநர் தமது எதிரே உள்ள நிலைக்கண்ணாடியில் பார்த்தால், பின்னால் வரும் வாகனம் AMBULANCE என்று சரியாகப் படித்தறிவார். ஆனால், நம் நாட்டில் அதற்கு வழிவிடும் மனப்பக்குவம் இன்னும் வரவில்லை. ●

□ ரூ.100 பரிசு பெறுபவர் :
பி.மாரிமுத்து,
த/பெ. வி.பெருமாள்,
113, மருதுபாண்டியர் மடத்து கிழக்குத் தெரு,
சிவகாசி - 626123

★ ரூ.50 பரிசு பெறுபவர் :
எம்.கே.இளமதி,
திரையரங்கம் (எதிரில்)
பேரையூர் - 623 708
கமுதி வட்டம்
இராமநாதபுரம் மாவ.

கோ-ஆப்-டெக்ஸ் கொண்டாட்டம்...

தமிழ்நாடு கோ-ஆப் டெக்ஸ் நிறுவனம் சார்பாக, பொதுமக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில் ஓணம் கொண்டாடப்பட்டு, தொடர்ந்து நவராத்திரி விழா 23.9.2006 முதல் 30.6.2006 வரை சென்னை எழும்பூர் தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை வளாகத்தில் நடைபெற்றது. முதல்நாள் குழந்தைகள் தினவிழாவாகக் கொண்டாடப்பட்டது.

மேலாண்மை இயக்குநர் திருமதி நிர்மலா ஐ.ஏ.எஸ். அவர்கள் தொடங்கி வைத்தார். தொடர்ந்து 24-ஆம் நாள் மங்கையர் தினமாகக் கொண்டாடப்பட்டது. அன்று கல்லூரி மாணவியர் பங்கேற்று மங்கையர் சக்தியைப் பற்றி பல்வேறு தலைப்புகளில் பேசினார்கள். இவ்விழாவில் மங்கையர்மலரின் ஆசிரியர் திருமதி. லக்ஷ்மி நடராஜன் பங்கேற்று மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கினார். நாள்தோறும் பல்வேறுப் பள்ளிக் கல்லூரி மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. கதாராடைகள் பரிசாக வழங்கப்பட்டன.









அருள்செல்வன்



தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத் தலைவர் இராம.நாராயணன் மிக எளிமையானவர். கல்லூரி மாணவியருடன் சந்திப்பு என்றதும் சாக்கு போக்கு எதுவுமின்றி உடனே ஒப்புக்கொண்டார். ஆர்வத்தில் கேட்கப்படும் எதிர்மறைக் கேள்விகளுக்கும் கோபப்படாமல் நிதானமாகப் பதிலளித்தார்.

நீங்க இந்தச் சங்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்றதும் உங்க முன்னாடி நிற்கிற சவாலா எதை நினைச்சீங்க...?

"நிறைய சவால்கள் இருந்தாலும் முடிந்தும் வெளிவராம இருக்கிற படங்களை வெளியிட ஏதாவது செய்யணும்ங்கிறதுல முனைப்பா இருந்தேன்."

அப்படி சிக்கல் தீர்ந்து வெளியான படங்களின் பெயர்களைச் சொல்ல முடியுமா?

"சமீபத்தில் வெளியாகியிருக்கும்

முதல்வர் விழாவில் டப்பாங்குத்து தேவையா?

'வேட்டையாடு விளையாடு', 'பேரரசு' படங்கள் வெளியாக முடியாமச் சிக்கல். நாங்கள் தலையிட்டு தயாரிப்பாளர், விநியோகஸ்தர், நடிகர்கள் எல்லாரையும் கூப்பிட்டுப் பேசி சுமுகமா முடிச்சு வச்சோம்."

திருட்டு வி.சி.டி ஒழிக்கப்பட்ட மாதிரி தெரியவில்லையே...

"இந்த விஷயத்தில் சட்டம் தன் கடமையைச் செய்கிறது. திருட்டு வி.சி.டி. பாண்டிச்சேரியிலிருந்துதான் வருகிறது என்று ஒரு தகவல் வந்தது. நாங்க உடனே ஒரு பேரணி ஏற்பாடு செய்து பாண்டிச்சேரி முதல்வரிடம் கோரிக்கை மனு கொடுத்தோம். அதைத் தொடர்ந்து பல கடைகளில் சோதனை. பல வி.சி.டி கடைகள் மூடப்பட்டு உள்ளன. இப்படி காவல் துறை எவ்வளவு செய்தாலும் திருடனாப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்கிற நிலைதான் உள்ளது."

நடிகர் சங்கமோ, தயாரிப்பாளர் சங்கமோ எப்போதும் அரசியல் சார்ந்ததாக ஆகிவிடுகிறதே...

"அப்படி அரசியலில் இருப்பவர்கள் கட்சி உணர்வு மூலம் சங்கத்துக்கு என்ன செய்கிறார்கள் என்பதுதான் முக்கியம். சங்கத்துக்குள் யாரும் அரசியலை நுழைய விடுவதில்லை. கலைஞர்கள் என்பவர்கள் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு ஒற்றுமையாக இருக்கிறார்கள். தனிப்பட்ட ஒருவர் ஏதாவது கட்சி சார்பான உணர்வுடன் இருக்கிறார் என்பதைத் தவிர்க்க முடியாது; தடுக்க முடியாது."

யார் முதல்வராக வந்தாலும் திரை



* எஸ்.டி.என்.பி. வைஷ்ணவா கல்லூரி மாணவியர்...

புலகம் சார்பா விழா எடுத்து தாஜா செய்வது நல்லாவா இருக்கு?

"முன்பு எடுத்த விழாக்களை இப்போது முதல்வருக்கு எடுத்த விழாவோடு ஒப்பிட வேண்டாம். முன்பெல்லாம் விழாவில் சினிமாவுக்கு என்று உதவி கேட்பார்கள். ஆனால் அண்மையில் நடந்த விழா அப்படிப்பட்டதல்ல. நாங்கள் கேட்காமலேயே பல சலுகைகளை வாரி வழங்கிய முதல்வர் கலைஞருக்கு நன்றி தெரிவிக்கும் விழாவாக அது இருந்தது."


அப்படி முதல்வர் செஞ்ச பெரிய சலுகைன்னு எதைச் சொல்வீங்க...?

"தமிழ்ப் பெயருள்ள படங்களுக்கு கேளிக்கை வரி ரத்துங்கிறது எங்களுக்குப் பெரிய சலுகை. அதை முதல்வர் நிறைவேற்றி இருக்கிறார். படப்பிடிப்பு இடங்களுக்கு அரசின் கட்டணம் பத்தாயிரம் என்பதை ஆயிரம் என்கிற அளவுக்குக் குறைத்திருக்கிறார். சிறிய படங்களுக்கு மான்யத்தை உயர்த்தி இருக்கிறார். சினிமா தொழில் அழிந்துவிடுமோ என்று இருந்த எங்களுக்கெல்லாம் புத்துணர்ச்சி கிடைத்திருக்கிறது."

அப்படியிருந்தும் தியேட்டரில் டிக்கெட் விலை குறையவில்லையே...?

"வரிவிலக்குச் சலுகைகள் கொடுத்தாலும் அதே டிக்கெட், அதே விலை என்று திரையரங்கில் உள்ளதால்

* இராம.நாராயணன்



சினிமா பார்ப்பவர் தரும் பணம் திரையரங்கு உரிமையாளர், விநியோகஸ்தர், தயாரிப்பாளர் என்று போய், கடைசியில் நடிகர்களுக்குத்தான் போகிறது. எனவே அரசின் சலுகையால் சராசரி மக்களுக்குப் பலன் இல்லாமல் போகிறது என்பது உண்மைதான். இதற்கு அரசுதான் நடவடிக்கை எடுக்க வேண்டும்."

வேறு பெயரில் சென்சார் செய்யப்பட்ட, ஏன் போஸ்டர் அடிக்கப்

பட்ட படங்களைக்கூட வரிவிலக்கு பெறுவதற்காகத் திடீரென்று தமிழ்ப் பெயர்களுக்கு மாற்றுகிறார்களே...

"இதில் குற்றம் குறைகள் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. எப்போது மாற்றினால் என்ன! தமிழ் என்று வருகிற போது ஏற்றுக்கொள்வோம்."

முதல்வர் கலந்து கொள்ளும் விழா வில் டப்பாங்



செம ரகளை!

தீபாவளிக்கு வெளிவரவிருக்கும் 'வட்டாரம்' படத்துக்கு இப்போதே எதிர்பார்ப்பு எகிறிவிட்டது. சரண், ஆர்யா கூட்டணி படத்தை எப்படிக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதுதான் இண்டஸ்ட்ரியில் பேச்சு. பாலாவின் 'நான் கடவுள்' படத்துக்கு முன்னோட்டமாகவும் ஆர்யாவுக்கு 'வட்டாரம்' அமையுமென்கிறார்கள். பரத்வாஜின் இசையில் இளமை துள்ளும் பாடல்கள் கேட்பவரை சொக்க வைக்கின்றன. பாடல்கள் வைரமுத்து. இதுவரை ஏற்காத பாத்திரத்தில் நடிகர் நெப்போலியன் வருகிறாராம். ஆர்யா துப்பாக்கி விற்பவராக நடித்தாலும் இது ஆக்ஷன் படமில்லை என்று அடித்துச் சொல்கிறார்கள். ம்... தீபாவளிக்கு செம ரகளைதான் போங்க!

- மோனல்

குத்துப் பாடல்கள் எல்லாம் தேவையா?

"அந்த விழாவில் கண் தெரியாதவர்கள், ஊனமுற்றவர்களுக்குக்கூட நிகழ்ச்சிகள் இருந்தன. குழந்தைகள் நடனம் இல்லையா? மேஜிக், ஆரோக்கியமான நகைச்சுவை, பெரியார் பற்றின நாடகம் - இப்படி ரசிக்கும்படி, பாராட்டும்படி எல்வளவோ இருந்தன. பொழுதுபோக்கு அம்சத்துடன் இருந்த சில நிகழ்ச்சிகளை மட்டும் பெரிதுபடுத்தி குறை கூறுகிறீர்களே.."

நடிகர் சங்கத் தலைவர் சரத் வேறு கட்சி; நீங்கள் வேறு கட்சி... விழா நடத்துவதில் பிரச்னை இருந்ததா?

"அப்படியெல்லாம் எதுவும் நடக்கவில்லை. திரையுலகம் அரசியலுக்கு அப்பாற்பட்டது. செட்டிநாட்டில் 'கூடி ஆக்கி உண்பது' என்று சொல்வார்கள். வீட்டு விசேஷத்துக்கு முன் எல்லாரும் ஒன்று கூடி ஆக்கிச் சாப்பிட்டு ஒற்றுமையாக இருப்பார்கள். இந்த விழாவுக்காக பத்து நாட்கள் நாங்கள் ஒன்றாக இருந்த போது அதுதான் நினைவுக்கு வந்தது."


அன்று பெரிய தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், நடிகர்களை உருவாக்கி நட்சத்திரமாக்கினார்கள். ஆனால் இன்று நடிகர்கள்தான் தயாரிப்பாளர்களை உருவாக்குகிறார்கள். இது சரியா...?

"அன்று ஸ்டார் மேக்கராக தயாரிப்பாளர்கள் இருந்தார்கள்; இயக்குநர்கள் இருந்தார்கள். இன்றைக்கு நடிகர்களை அணுகி கால்ஷீட்டுக்கு அலைகிறார்கள் என்பது நோக்கம்தான். தயாரிப்பாளர்கள் சினிமாவைப் பற்றிப் புரிந்து அனுபவத்துடன் வந்தால் இந்த நிலை நிச்சயம் மாறும்."

உங்கள் சங்கத்தின் மூலம் சாதிக்க நினைப்பது?

"ரஜினி சொன்னது போல சலுகை என அரசிடம் இனி உதவி கேட்பதற்கு ஒன்றுமில்லை. சினிமா தொழில் வளர, ஆந்திராவில் உள்ள ராமோஜிராவ் ஃபிலிம் சிட்டி போல, இருநூறு ஏக்கர் பரப்பளவில் சகல வசதிகளுடன் கூடிய ஃபிலிம் சிட்டியை தமிழ் சினிமாவுக்கு ஏற்படுத்தித் தர வேண்டும். அதை கலைஞர் உருவாக்குவார் என்று நம்புகிறேன். அடுத்து முடங்கிக் கிடக்கும் பல படங்களை வெளியிட சங்கம் மூலம் முயற்சி செய்வோம்."

படங்கள்:
ஸ்ரீஹரி, பொள்ளாச்சி சுந்தரம்


MKG
and the
Thug!
A-Z
of
Ramayana
The
FORCE
BEHIND
KALI
Now On
The Stands
All your favourite features too!
GOKULAM
October Issue
THE Magazine for Children



ஒளிரும் தீபாவளி ! புனித ரமலான் ! அணிய சாரதா’ஸ் ஆடைகள்..!
வரம் தரும் தீபாவளி நல்ல தரம் தரும் சாரதா’ஸ்
தீபாவளி
வாழ்த்துக்கள்
CSE-707
BKB-301
சாரதா’ஸ்
சுப முகூர்த்த பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்
45,என்.எஸ்.பி. ரோடு, திருச்சி-2. போன்:2702077.
தன்பில்டிங், 827,மவுண்ட்ரோடு, சென்னை-2, போன்:28521177.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 06 - 08* Registered as a Newspaper in Srilanka.